# மன்னா

# உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் அமைதி உங்கள் அனைவரோடும் நிறைவாகத் தங்குவதாக.

## மன்னார் மறைமாவட்ட ஆயரின் உயிர்ப்புவிழாச் செய்தி.



சவால்கள் நிறைந்த இன்றைய உலகில் இறைமகன் இயேசுவினுடைய உயிர்ப்பு உங்கள் அனைவருடைய உள்ளத்திலும், இல்லத்திலும் அமைதியையும், சமாதானத்தையும், நம்பிக்கையையும் பிரசவிக்க ஆசிக்கின்றேன்.

புதுப்பித்தல் ஆண்டாகிய 2019இல் பயணிக்கும் நாம் தனிநபராக, இளையோராக, குடும்பங்களாக, அன்பியங்களாக, பங்குத்திருச்சபைகளாக, மறைமாவட்டமாக இறைமகன் இயேசுவின் உயிர்ப்பின் மக்களாக புதுவாழ்வுக்குள் மீண்டும் பிறக்க அழைக்கப்படுகின்றோம். இந்த அழைப்பு என்பது ஒரு கிறிஸ்தவனுடைய திருமுழுக்கின் மூலமாக பெற்றுக்கொள்கின்ற அழைப்பாகும். அது இயேசுவினுடைய பாடுகள், மரணம் இவற்றில் புடமிடப்பட்டு, உயிர்ப்பில் நம்பிக்கை கொள்கின்ற அழைப்பாகும். ஆகவே என் பாசமுள்ள இறைமக்களே! எவ்வளவு சவால்கள் வந்தாலும் அவற்றை இறைமகன் இயேசுவின் மனநிலையோடு எதிர்கொள்ளுவோம்.

உயிர்த்த ஆண்டவர் இயேசு உங்களுக்கும், உங்கள் குடும்பங்களுக்கும், நீங்கள் வாழுகின்ற சமூகத்திற்கும் எம் இலங்கைத் தேசம் முழுவதற்கும் சாந்தி, சமாதானம், நம்பிக்கை நிறைந்த வாழ்வை வழங்குவாராக.

*“திருமுழுக்கில் அவரோடு இறந்து அவரோடு அடக்கம் செய்யப்பட்ட நாம்,* mt NuhL c apuj ;nj ONt hk;” *(உரோ.6:8)*

## வவுனியா கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலதை நோக்கிய பாதையாத்திரை







மன்னார் மறைமாவட்டத்தில் வருடந்தோறும் தவக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் வவுனியா கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்தை நோக்கிய திருப்பயணம் இவ்வாண்டும் ஆன்மிக செழுமையோடு முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இவ்வாண்டு பங்குனி மாதம் 27, 28, 29 ஆகிய நாட்களில் இத் திருப்பயணம் நடைபெற்றது.

பங்குனி மாதம் 27ஆம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை அவர்களின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தவக்காலத் திருப்பயணம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

14

## அன்பின் காவியம் திருப்பாடுகளின் காட்சி





தவக்காலத்தை முன்னிட்டு இயேசுவின் வாழ்வு, பணி, பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை வெளிக்கொணரும் வகையில் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவி பிரமாண்டமான முறையிலே அன்பின் காவியம் என்னும் மகுடத்தோடு திருப்பாடுகளின் காட்சியினை சித்திரை மாதம் 07,08 ஆகிய இரு தினங்களிலும் சமூகத் தொடர்பு அருட்பணி மையம், கலையருவியின் திறந்த அரங்கத்தில் காட்சிப்படுத்தியிருந்தது. (இவ்வாற்றுகையின் மேலதிக புகைப்படங்களை 9ஆம் பக்கத்தில் பார்க்கலாம்)

15

## மன்னார் மறைக்கல்வி நிலையத்தின் தவக்காலத்தியானங்கள்

### கத்தோலிக்க ஆசிரியர்கள்



கடந்த மாசி மாதம் 22, 23, 24 ஆகிய தினங்களில் மன்னார் மறைமாவட்ட புனித வளன் அருட்பணி மையம் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானத்தை மடுமாதா திருத்தலத்தில் ஒழுங்குசெய்திருந்தது. இத்தியானத்தை சகோ. நிக்கிலஸ் கிஷோக் அவர்கள் நெறிப்படுத்தினார். பல கத்தோலிக்க ஆசிரியர்கள் இத் தியானத்தில் பங்கேற்றுப் பயனடைந்தனர். மன்னார் மறைமாவட்ட புனித வளன் அருட்பணி மைய இயக்குனர் அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் இத்தியான நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.

### மறையாசிரியர்கள்



மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான தவக்காலத் தியானம் கடந்த மாசி மாதம் 27,28,29 ஆகிய தினங்களில் மன்னார் மறைமாவட்ட மறைவாழ்வுக்கல்வி, திருவிலிலியம், கல்வி அருட்பணிகளுக்கான மையமாகிய புனித வளன் அருட்பணி மையம் மடுமாதா திருத்தலத்தில் ஒழுங்கு செய்து நடாத்தியது. இத்தியானத்தை சகோ.நிக்கிலஸ் கிஷோக் அவர்கள் நெறிப்படுத்தினார். பல மறைவாழ்வுக் கல்விப் பணியாளாளர்கள் இத் தியானத்தில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.



# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## புதுப்பித்தல் ஆண்டு - 2019

## இறைவன்முன் வெறுமையாவோம் உயிர்ப்பில் புதுவாழ்வு காண்போம்

ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் காலத்தில் உயர்ந்த சிந்தனைகளையும், மேன்மையான இலட்சியங்களையும், வளமான கனவுகளையும், அற்புதமான திறமைகளையும் கொண்டு வாழ்கின்றான். ஆனால் துரதிஷ்டவசமாக அவன் இறக்கும்போது அவனது உயர்ந்த சிந்தனைகள், மேன்மையான இலட்சியங்கள், வளமான கனவுகள், அற்புதமான திறமைகள் அனைத்தும் செயலாக்கம் பெறாமலேயே அவனோடு கல்லறையில் புதைக்கப்பட்டு விடுகின்றன. ஆகவே கல்லறையில் வெறும் உடல் புதைக்கப்படுவதில்லை. மாறாக அவனின் நிறைவேறாத உயர்ந்த சிந்தனைகளும், மேன்மையான இலட்சியங்களும், வளமான கனவுகளும், அற்புதமான திறமைகளும் தான்.

இந்த வித்தியாசமான சிந்தனையினால் தூண்டப்பெற்ற பிரசித்திபெற்ற எழுத்தாளர் ஹென்றி டிரால்ட் அவர்கள் “வெறுமையாய் இறப்போம்” (Die Empty) என்கின்ற புகழ் பெற்ற புத்தகத்தை எழுதினார். நாம் இறப்பதற்குள் எம்மிடமுள்ள நன்மைத்தனம், உண்மைத்தன்மை, அன்பு, இரக்கம், மன்னிப்பு, பரிவு ஆகிய அனைத்து கிறிஸ்தவ பண்புகளையும் நாம் வாழுகின்ற சமூகத்திற்கு முழுமையாக கொடுத்துவிட்டுத்தான் இறக்க வேண்டும். என்ற உயர்ந்த சிந்தனைகளை இவர் தனது புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தம்மையே வெறுமையாக்கியதால் அடிமை நிலை ஏற்று சிலுவைச் சாவை ஏற்றுக் கொண்டார். அவர் கடவுளாய் இருந்தும் அந்நிலையிலிருந்து நமக்காக மனிதனானார். தன்னையே வெறுமையாக்கினார். அவர் இவ்வுலகில் சொற்ப காலமே வாழ்ந்திருந்தாலும், அக்குறுகிய காலத்திலேயே நாம் வாழ்வு பெற அதையும் நிறைவாகப் பெற அவரின் அனைத்து உயர்ந்த சிந்தனைகளையும், மேன்மையான இலட்சியங்களையும், திறமைகளையும், கனவுகளையும் ஏன் தமது உடல், பொருள், ஆவி முழுவதையும் நமக்காகக் கொடுத்தார்.

இயேசு இறைத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற தம்மை முழுவதும் வெறுமையாக்கி இறந்தார். இறைத்தந்தை உயிர்ப்பினால் அவரைப் பெருமைப்படுத்தினார்.

நாமும் வாழ்கின்ற போதே புதுப்பித்தல் புதுவாழ்வு என்ற உயிர்ப்பிற்காக இறைவனுக்கு முன் வெறுமையாகுவோம். இறைமகன் இயேசுவில் நம்பிக்கை கொண்ட உயிர்ப்பின் மக்களாக வாழ்வோம். ●

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா பதிப்பாசிரியர்.*

❁❁❁

## பரிஸ் நகரின் பிரசித்தி பெற்ற தேவாலயம் தீ விபத்துக்குள்ளானது





பிரான்சில் 856 ஆண்டுகள் பழமை வாய்ந்த தேவாலயம் 3மணி நேரமாக எரிந்து சாம்பலாகி உள்ளது. சற்று முன்னர் 850 ஆண்டுகள் பழமைமிக்க பரிசின் நோத்ர-தாம் தேவாலயம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கின்றது. பரிசின் மிகவும் பழமை வாயந்த வரலாற்றுத் தேவாலயமாகிய Notre-Dame-de-Paris இல் கடந்த செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 16ஆம் திகதி அன்று மாலை 5.30மணியளவில் பாரிய தீப்பற்றியுள்ளது. உடனடியாகத் தீயணைப்புப் படையினர் களத்தில் இறங்கியும் தீ அடங்கவில்லை. தற்போது தீ கட்டுப்படுத்தப்பட்டதன் பின்னர், தேவாலயத்தின் பெரும்பகுதி எரிந்து சாம்பலாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் பிரபல்யமான பாரிஸ் நகரில் அமைந்துள்ள பேராலயத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தீ கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு தேவாலயம் முழுவதும் பரவிக்கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை.

➡ 14

# சமூக சமய நல்லிணக்கத்திற்கான அழைப்பு

### – மன்னார் மறைமாவட்ட ஆயரின் ஊடக அறிக்கை –



அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே! உங்கள் அனைவருக்கும் இறையாசீரும் சமாதானமும் கூறி நிற்கின்றேன்.

கடந்த பங்குனி மாதம் 3ஆம் திகதி மாந்தை லூர்து அன்னை திருத்தலத்திற்கு முன்பாக நடைபெற்ற சம்பவம் தொடர்பாக மிகவும் மனம் வருந்துகின்றேன். இந்நிகழ்வு தொடர்பாக கடந்த இரண்டு, மூன்று வாரங்களாக ஊடகங்களில் பல்வேறு கருத்துக்களும், விமர்சனங்களும் பகிரப்பட்டு வருகின்ற நிலையிலே சமூகங்களுக்கிடையிலே பிரிவினையையும், முரண்பாடுகளையும், வன்முறைகளையும் தூண்டக்கூடிய விதமாக செய்திகள் அமைந்திருப்பதை வன்மையாகக் கண்டிப்பதோடு இதன் உண்மை நிலையை அனைவரும் அறிந்து சமாதானத்திற்கான, சகோதரத்துவத்திற்கான வழிமுறைகளை கையாள உங்கள் அனைவரையும் வினையமாக வேண்டி நிற்கின்றேன்.

கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு ஆண்டும் சிவராத்திரி திருவிழாவை முன்னிட்டு நல்லிணக்க அடிப்படையில் லூர்து அன்னை ஆலயத்துக்கு முன்பாக தற்காலிக அலங்கார வளைவு அமைக்கப்பட்டு சிவராத்திரி நிறைவுற்ற நிலையில் அது அகற்றப்பட்டு வந்தது. 2018ஆம் ஆண்டு இந்த அலங்கார வளைவு திருவிழா நிறைவுற்ற போதும் அது அகற்றப்படாத நிலையில் அப்பிரதேச வாழ் கத்தோலிக்கர்கள் நல்லிணக்கம் கொண்டவர்களாக பொறுமையோடு செயற்பட்டு வந்தனர். இந்நிலையில் கடந்த 02.03.2019 சனிக்கிழமை அன்று இந்த தற்காலிக அலங்கார வளைவினை மாற்றி நிரந்தர அலங்கார வளைவினை (Arch) அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை அறிந்த பங்குத்தந்தை அருட்பணி. மரியதாஸ் லியோன் அடிகளார் இச்செயற்பாடு இரு சமூகங்களிடையே முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்தவராக திருக்கேதிஸ்வர ஆலயப் பொறுப்பாளர் திரு. இராமகிருஸ்ணன், மற்றும் இளைப்பாறிய அதிபர் திரு. தயானந்தராஜா இவர்களோடு கலந்துரையாடி வழமை போன்றே தற்காலிக வளைவினை பயன்படுத்துவது என்ற இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தனர்.

இவ்வாறிருக்க கடந்த 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று அந்தப் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவு அகற்றப்பட்டு நிரந்தர அலங்கார வளைவு அமைப்பதற்கான கொங்றீற், கம்பிகள் கொண்டு கனரக வாகனங்களின் உதவியோடு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் அப்பிரதேச கிறிஸ்தவ மக்களால் நிரந்தரமாக போடப்பட்ட கொங்கிறீட் தூணானது பல இழுபறிகளோடு அகற்றப்பட்டது. இச் சம்பவமானது ஏற்கனவே திட்டமிட்டோ அல்லது கத்தோலிக்க குருக்களின் உந்துதலாலோ நடைபெறவில்லை என்பதோடு சம்பவம் நடந்த வேளையில் ஸ்தலத்திலே கத்தோலிக்க குருக்கள் யாரும் பிரசன்னமாக இருக்கவில்லை என்பதை உறுதியோடு கூறிக்கொள்கின்றேன். மேற்குறிப்பிடப்பட்ட சம்பவமானது உலகம் பூராகவும் பரந்து வாழும் தமிழ்பேசும் மக்கள் மத்தியிலே குறிப்பாக இந்துசமய தமிழர்கள் மத்தியிலே மனக்கிலேசங்களை ஏற்படுத்தி கத்தோலிக்க திருச்சபையையும் அதன் பணியாளர்களாகிய குருக்களையும் மிகவும் கீழ்த்தரமாகவும், மனவேதனைக்குள்ளாக்கும் விதமாகவும் பலவிதமான உண்மைக்கு புறம்பான கருத்துக்களும், பிரச்சாரங்களும் பரப்பப்பட்டு வருவதை அறிந்து மிகவும் மனவேதனைப்படுகின்றேன்.

கடந்த 30 ஆண்டுகளாக தமிழினத்தின் துன்பியல் வரலாற்றிலே மக்களோடு மக்களாக தோள்நின்று உழைத்த, தமிழினத்தின் விடுதலைக்காக பாடுபட்ட, மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களையும், இன்னும் தங்கள் இன்னுயிரையே ஈந்த பல கத்தோலிக்க குருக்களுடைய தமிழ் பற்றையும், தியாகத்தையும் கொச்சைப்படுத்தும் விதமாக பலர் தமது கருத்துக்களை சமூக ஊடகங்களிலும், வலைத்தளங்களிலும் பகிர்ந்து கொள்வதை வன்மையாகக் கண்டிப்பதோடு இச்செயற்பாடானது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் உரிமையோடு கேட்டு நிற்கின்றேன்.

மன்னார் தமிழ்பேசும் மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கும் இந்த சலசலப்பை பயன்படுத்தி பல அரசியல்வாதிகள் இச்சூழலை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் விதமாக மக்களைத் தூண்டிவரும் விதத்தில் செயற்படுவதை நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். குறிப்பாக மக்கள் மத்தியிலே பல நல்லெண்ணத்தை கொண்டிருக்கக்கூடிய பத்திரிகைகள் சமாதானத்தையும், சமூக ஒற்றுமையையும் மேம்படுத்தும் விதமாக நடந்துகொள்ளாமல் தங்கள் இலாபம் கருதி சமயங்களுக்கிடையில் பிணக்குகளை தோற்றுவிப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

03.03.2019 அன்று நடந்த சம்பவத்தைக் குறித்து விளக்கமளித்த மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை. விக்ரர் சோசை அடிகளாரின் நல்லிணக்க அறிக்கையானது பத்திரிகைகளில் புறம் தள்ளப்பட்ட நிலையில் பிரச்சனைகளை மேலும் தூண்டிவிடும் விதமான உண்மைக்கு புறம்பான செய்திகளை முன்னுரிமைப்படுத்தி வன்முறையைத் தூண்டும் வகையில் நடந்துகொண்ட செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். கௌரவ. மன்னார் நீதவான் ரீ. சரவணராஜா அவர்கள் இந்த அலங்கார வளைவை பிடுங்கியவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று தீர்ப்பு கூறியதாகவும் அதை செயற்படுத்த பொலிசார் பின்னடிப்பு செய்வதாகவும் பத்திரிகையிலே உண்மைக்கு புறம்பான தகவல் பரப்பப்பட்டது. அத்தோடு கடந்த 24ஆம் திகதி பொலிஸ் விசாரணைக்கு சமூகமளித்திருந்த பங்குத்தந்தையும் அவரோடு சேர்ந்த 10பேர் தொடர்பான நிகழ்வை “பங்குத்தந்தை உட்பட பத்துப்பேர் நேற்று சரணடைவு” என்று 25.03.2019 அன்று உதயன் பத்திரிகையில் முன்பக்க செய்தியாக முன்னுரிமைப்படுத்தி பிரசுரித்திருப்பதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இப்படியாக தமிழ்பேசும் எம்மக்கள் மத்தியிலே காணப்படும் ஒற்றுமையையும், சமயங்களிடையே காலாகாலமாக கட்டிக்காத்துவரும் நல்லுறவையும் களங்கப்படுத்தும் விதமாக தமிழ்த்தேசியத்திற்கு எதிராக செயற்படும் எல்லா சக்திகளையும் விட்டொழித்து சமூக சமய நல்லிணக்கத்திற்கான வழிகளை ஏற்படுத்துமாறு மக்களையும், ஊடகங்களையும் அன்பாகக் கேட்டு நிற்கின்றேன்.

நாம் பின்பற்றும் மதங்கள் எல்லாமே நம்மை சகோதரத்துவத்திற்கும், ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்திற்கும் இட்டுச்செல்கின்ற ஒன்றாகவே இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து பொறுமையோடும், புரிதலோடும் செயற்பட உங்கள் எல்லோரையும் கேட்டுநிற்கின்றேன். ●

## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2019

### ஏப்ரல்

05 ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலய பாத யாத்திரையும் திருப்பலியும்.
12. பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலய பாத யாத்திரையும் திருப்பலியும்.
- கோமரசன்குளம் பங்கு சிலுவைப்பாதை
15. திருத்தைல மந்திரிப்பு கூட்டுத்திருப்பலி புனித செபஸ்தியார் பேராலயம் மாலை 5.00 மணி.
    7.30 மணி குருக்களுக்கான திருமணித்தியாலம் - ஆயர் இல்லம்.
16. மன்னார் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களின் பிறந்த தினம்.
28. புனித தோமையார் - கொவ்வங்குளம், நாகதாழ்வு, குமனாயன்குளம்.
- இறை இரக்கப் பெருவிழா - பம்பைமடு.
30. புனித அந்தோனியார் - தொங்குபாலம் (குஞ்சுக்குளம்)

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

*-மன்னா நிர்வாகம்-*

**மன்னார் மறைமாவட்டச் செய்திகள்**

# திருக்குடும்ப சபையின் யாழ் மாகாண புதிய ஆலோசனைக்குழு

23.02.2019 அன்று தலைமைத்துவப் பணியைப் பொறுப்பேற்றுள்ள திருக்குடும்ப சபையின் யாழ் மாகாணத்தலைவி அருட்சகோ. தியோவ்வின் குரூஸ், மாகாணப் பொருளாளர் அருட்சகோ. மரிஸ்ரெலா சூசைப்பிள்ளை, மாகாண ஆலோசகர்கள் அருட்சகோதரிகள் ஜோசப்பின் மேரி இராஜரட்ணம், அன்ரனிற்றா மாற்கு, திருச்செல்வராணி அலஸ், புறோத்மேரி மரியானந்தம் ஆகியோரை மன்னார் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், அருட்பணியாளர், துறவறத்தார், பொது நிலையினர் சார்பாக மன்னா வாழ்த்தி நிற்கின்றது.

இவர்களது பணிவாழ்வுப் பயணத்திலே இறைவனின் அன்பும், பராமரிப்பும் வழிநடத்தலும் நிறைவாகக் கிடைக்க ஆசித்து நிற்கின்றோம்.●



# நெடுங்கண்டல் புனித அந்தோனியார் ஆலய அடிக்கல் நாட்டு விழா





மாதோட்டத்தின் பழமையும், புதுமையும் வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான பதுவை நகர புனிதராம் புனித அந்தோனியார் ஆலயத்தின் அடிக்கல் நாட்டு விழா 19.03.2019 செவ்வாய்க்கிழமை மாலை 530 மணியளவில், எமது பங்குத்தந்தை அருட்திரு. T. நவரெட்ணம் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது. இதில் எமது மறைமாவட்ட ஆயர், அதி வந்தனைக்குரிய கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் கலந்து சிறப்பித்தார். அவருடன் இணைந்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், எமது ஆலயப் பங்குமக்கள், பாராளமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள், எமது அயற்பங்கு மக்கள், சமூக பெரியார்கள், அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகள் போன்றோர் கலந்து சிறப்பித்தார்கள். இவ் சிறப்புமிக்க ஆலயமானது முப்பது வருட கால போரின் மத்தியிலும், சிறிய தேசத்திற்கு மத்தியில், எமது மக்களின் அயராத ஆழ்ந்த விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக அரசாங்கத்தின் கம்பரலிய திட்டத்தின் ஊடாக நிதி வழங்கப்படுவது ஓர் சிறப்பம்சமாகும். அத்தோடு எமது மக்களின் நன்மை கருதி தூய குடிநீர் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டுதலும், எமது கார்மேல் அருட்சகோதரிகள் இல்லத்தின் நீர்த்தாங்கிக்கான அடிக்கல் நாட்டுதலும் இடம்பெற்றது சிறப்பம்சமாகும்.●

# புதிய அகவையில் தடம்பதிக்கும் மன்னார் ஓய்வுநிலை ஆயரை வாழ்த்துகின்றோம்



மங்கா புகழுடன் உலகம் போற்றும் எம் ஓய்வு நிலை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை தனது பிறந்தநாளை கடந்த 16ஆம் திகதி நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறினார்.

தனது புதிய அகவையை நினைவுகூர்ந்த எம் ஓய்வுநிலை ஆயர் பெருந்தகை அவர்களை மன்னார் மறைமாவட்ட ஆயர், அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள், இறைமக்கள் சார்பாக மன்னா பிறந்தநாள் வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.●

# மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருத்தைலம் அர்ச்சிப்பு விழா



திருவருட்சாதனங்களுக்குப் பயன்படும் திருஎண்ணெய்களை அர்ச்சிக்கும் திருப்பலி 15.04.2019 அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. இத்திருவழிபாட்டில் புகுமுக அருட்சாதன எண்ணெய், நோயில்பூசுதல் எண்ணெய், கிறிஸ்மா எண்ணெய் என்பன ஆயரால் அர்ச்சித்துப் புனிதப்படுத்தப்பட்டன. அருட்பணியாளர்கள், துறவியர், இறைமக்கள் எனப் பலர் இத் திருப்பலியில் கலந்து செபித்தனர்.●

# இலங்கைத் திருஅவையில் நடைபெற்ற திருத்தைலம் அர்ச்சிக்கும் திருப்பலிக் கொண்டாட்டங்கள்



மட்டக்களப்பு மறைமாவட்டம்



கொழும்பு மறைமாவட்டம்



திருகோணமலை மறைமாவட்டம்

திருத்தைலம் அர்ச்சிக்கும் சிறப்புத்திருப்பலிக் கொண்டாட்டங்கள் இலங்கைத் திருஅவையில் அனைத்துப்பாகத்திலும் கடந்த திங்கட்கிழமை 15ஆம் திகதி அந்தந்த மறைமாவட்டங்களில் ஆயர்களினால் தலைமையேற்று நடாத்தப்பட்டன. சிறப்பாகக் கொழும்பு உயர் மறைமாவட்டம், திருகோணமலை மறைமாவட்டம், மட்டக்களப்பு மறைமாவட்டம் ஆகிய மறைமாவட்டங்களில் ஆயர்கள் தம் மறைமாவட்டக் குருக்களோடும், துறவறத்தாரோடும், இறைமக்களோடும் இணைந்து மறைமாவட்ட திருஅவைகளாக திருத்தைலம் அர்ச்சிக்கும் திருநிகழ்வை படங்களில் காண்கின்றோம். இச்சடங்கின்போது திருநிலையினர் தம் குருத்துவ வாக்குறுதிகளை புதுப்பித்துக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.●

# அருட்பணியாளர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல்



யாழ் புனித சவேரியார் பெரிய குருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்று அருட்பணியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அனைத்து அருட்பணியாளர்களுக்குமான வருடாந்த ஒன்று கூடல் 28.02.2019 அன்று மன்னார் புனித யோசேவ்வாஸ் குடும்ப அருட்பணிமையத்தில் இடம்பெற்றது.

யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்பணி. ஜெ. கிருபாகரன் அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் ஒன்று கூடலில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ஜெபரெட்ணம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகள், யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி முந்நாள் அதிபர் அருட்பணி. எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள் மற்றும் யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்கள், துறவற சபை அருட்பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ். புனித சவேரியார் பெரிய குருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்று அருட்பணியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஏனைய மறைமாவட்ட மற்றும் துறவற சபை அருட்பணியாளர்கள் தவிர்க்கமுடியாத காரணங்களால் இவ் ஒன்றுகூடலில் கலந்துகொள்ள முடியவில்லை.●

**பிரான்ஸ் ஆன்மீகப் பணியகச் செய்திகள்**

# பிரான்ஸ் தமிழ் மக்களின் யாத்திரை ஸ்தலம் "Chartees"

பிரான்ஸ் தமிழ் மக்களின் பிரபலமான யாத்திரை ஸ்தலமாக "Chartres" அன்னை திருத்தலத்திற்கு இனமத பேதமின்றி விடுமுறை வார இறுதியில் மக்கள் சென்று அன்னையின் பாதத்தில் செபிப்பது யாவரும் அறிந்ததே. அன்னையின் திருச்சுரூபப் பவனியின்போது மக்கள், பெண்கள் வெறுங்காலால் தார் வீதியில் நடத்தல், நேர்த்திகள் வைத்து செபித்தல், முழங்காலால் நடத்தல், நேர்த்திகள் நிறைவேற்றல், அன்னதானம், தாகசாந்தி செய்தல் போன்ற பல செயல்களைக் காண முடியும். இவை கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இன்று வரை நடைபெற்று வருகின்றது. Chartres பேராலய நிர்வாகம் பரிபூரண ஒத்துழைப்பு வழங்குகின்றது. இப் பெருவிழாவிற்காக பிரான்ஸ் பணியகத்தில் இருந்து 10இற்கும் மேற்பட்ட பஸ்வண்டிகள், தனியார் பஸ் வாகனங்கள் மூலம் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடும் பெரும் திருளாநாகும்.

இவ்வருடம் 26.05.2019 ஞாயிறு மாலை 2.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி திருநாள் திருப்பலி அன்னையின் திருப்பவனி, அன்னையின் ஆசீருடன் மாலை 7.00 மணிக்கு இனிதே நிறைவு பெறவிருக்கின்றது. இதற்கான சகல ஏற்பாடுகளும் பிரான்ஸ் இலங்கை தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் மேற்கொண்டு வருகின்றது.●

# N.M. ஜெயரட்ணம் கௌரவிக்கப்பட்டார்



கடந்த மாசி மாதம் 27ஆம் திகதி France montreal நகர மண்டபத்தில் உதவி நகரபிதா தலைமையில் நடைபெற்ற "ஒளிவிழா" வைபவத்தின் போது montreal நகரில் வசிக்கும் திரு. என்.எம். ஜெயரட்ணம் அவர்களின் சேவைகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இவர் இந்நகரில் பல சமூகநலப் பணிகளைச் செய்தவரும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் கிளையின் முன்னாள் பொதுச் செயலாளரும், மன்னார் மாவட்ட அமைப்பின் முன்னாள் தலைவரும், இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக முன்னாள் பொதுச் செயலாளராக பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். அத்துடன் இவர் "மன்னா" பத்திரிகையின் பிரான்ஸ் தொடர்பாளராகவும் "உறவுகள்" பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றி வருகின்றார். இவரின் சேவைகள் சிறப்பாக அமைய "மன்னா" பத்திரிகையின் சார்பிலும், பிரான்ஸ் தமிழ் சமூகத்தின் சார்பிலும் நிறைவாக வாழ்த்துகின்றோம்.●

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# இறைவன் குரலுக்கு நாம் செவிமடுக்கவேண்டிய அவசியம்

ஒவ்வொருவரின் வாழ்வு மற்றும் விசுவாசம் வழியே சான்று பகர்ந்து நல்லதோர் எதிர்காலம் அனைவருக்கும் உருவாக்க உழைப்பதற்கு நமக்குள் புதுப்பித்தல் முதலில் இடம்பெற வேண்டும்.

ஏழைகளுக்கும் வாழ்வில் ஓரந்தள்ளப்பட்டோருக்கும் வழங்கப்படும் உதவி நல்லதொரு வருங்காலத்தை உருவாக்கும் என்ற நோக்கத்தில் நல்மனம் கொண்ட அனைத்து மக்களையும் ஊக்குவிக்க அழைத்துவரும் Missionszentrale der Franziskaner என்ற அமைப்பிற்கு தன் வாழ்த்துக்களையும், நன்றியையும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டார். இந்தப் பிறரன்பு துறவு அமைப்பு உருவாக்கப்பட்டதன் 50ஆம் ஆண்டு நிறைவையொட்டி, தன்னைச் சந்திக்க வந்திருந்த இவ்வமைப்பின் பிரதிநிதிகளை ஏப்ரல் 6ஆம் திகதி காலை திருப்பீடத்தில் சந்தித்து, உரை வழங்கிய வேளையில் இவ்வமைப்பினரைப் பாராட்டினார் திருத்தந்தை.

மக்களின் ஏழ்மை தன்னைத் தொடுவதற்கு அனுமதித்த அசிசிநகர் புனித பிரான்சிசின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி Missionszentrale der Franziskaner அமைப்பினர் ஏழ்மையில் வாழ்ந்து உலகம் முழுவதும் பிறரன்பு, ஒருமைப்பாடு மற்றும் உடன்பிறந்த உணர்வை ஊக்குவித்து வருவதற்காக திருத்தந்தை தன் நன்றியைக் கூறினார். ஒவ்வொருவரின் வாழ்வு மற்றும் விசுவாசம் வழியே சான்று பகர்ந்து நல்லதோர் எதிர்காலம் அனைவருக்கும் உருவாக்க உழைப்பதற்கு



நமக்குள் புதுப்பித்தல் முதலில் இடம்பெறவேண்டும் என்றும் அதற்கு இறைவனின் குரலுக்கு நாம் செவிமடுக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

பிரான்சிஸ்கன் துறவு சபையுடன் இணைந்து உழைக்கும் Missionszentrale der Franziskaner என்ற பிறரன்பு அமைப்பு ஜேர்மன் நாட்டில் 1969ஆம் ஆண்டு Andreas Muller அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று உலகெங்கும் 110 நாடுகளில் பணியாற்றி வருகின்றது என்பதும் 600 உதவித் திட்டங்களை வறியோரிடையே செயலாற்றி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கன. ●

# மறைக்கல்வியுரை

## உணவைப்போல் மன்னிப்பும் தினசரி தேவை



நாம் அன்புகூருமுன்னரே நம்மை அன்புகூர்ந்தது மட்டுமல்ல பிறரை மன்னிக்க தன் மன்னிப்பின் வழியாக கற்றுத்தந்த இறைவன் ‘விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே’ என இயேசு கற்பித்த செபம் குறித்து தன் மறைக்கல்வி உரைகளில், கருத்துக்களைப் பகிர்ந்துவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நம் பாவங்களை மன்னிக்குமாறு இறைவனிடம் வேண்டும் பகுதியை மையப்படுத்தி விளக்கமளித்தார். கடந்த இரு நாட்களாக நல்ல சூரிய ஒளியுடன் விளங்கிய வானம் காலையிலேயே தூறத் தொடங்கினாலும் திருத்தந்தையின் மறைக்கல்வி உரைக்கு செவிமடுக்க வந்த கூட்டத்திற்கு குறைவில்லை. ➡ 15

# மனித வர்த்தகத்தை ஒழிப்பது, திருஅவையின் முக்கிய கடமை



விலைமதிக்க இயலாத ஒவ்வொரு மனிதருக்கும் விலையை நிர்ணயிக்கும் இவ்வுலகப் போக்கினால் மனிதர்களை வர்த்தகப் பொருளாக மாற்றுவது நமது மனிதாபிமானத்திற்கு விழும் சாட்டையடி

மக்கள் “வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்”. (யோவான். 10:10) என்று யோவான் நற்செய்தியில் கூறப்பட்டுள்ள வாக்கியம் இயேசுவின் உலக வாழ்வுக்கு ஒரு விருதுவாக்காக அமைந்துள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏப்ரல் 11ஆம் திகதி ஒரு பன்னாட்டு கருத்தரங்கில் கூறினார்.

### முழுமையை வழங்க இயேசு இவ்வுலகிற்கு வந்தார்

ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் புலம்பெயர்ந்தோர் பிரிவு வத்திக்கானில் ஏற்பாடு செய்திருந்த பன்னாட்டு கருத்தரங்கின் இறுதியில் உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைத்து மனிதரும் தங்கள் மனிதத்தின் முழுமையை அடைவதற்காகவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார் என்பதை தன் உரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டார்.

மனிதர்கள் முழுமையான வாழ்வைப் பெறுவதற்கு இவ்வுலகம் உருவாக்கும் தடைகளில் மனித வர்த்தகம் மிகக் கொடுமையான ஒன்று என்று திருத்தந்தை தன் உரையில் கவலை வெளியிட்டார்.

### மனிதருக்கு விலையை நிர்ணயிக்கும் உலகப் போக்கு

விலைமதிக்க இயலாத ஒவ்வொரு மனிதருக்கும் விலையை நிர்ணயிக்கும் இவ்வுலகப் போக்கினால் மனிதர்களை வர்த்தகப் பொருளாக மாற்றுவது நமது மனிதாபிமானத்திற்கு விழும் சாட்டையடி என்பதைத் தான் அடிக்கடி நினைவுறுத்தி வருவதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையில் சுட்டிக்காட்டினார். இந்தக் குற்றத்தைச் செய்வோர் மற்றவர்களுக்கு மட்டுமல்லாமல் தங்களுக்கும் அழிவைக் கொணர்கின்றனர் என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவான். 15:13) என்ற உயர்ந்த இலக்கை நோக்கிப் பயணிக்க நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்று கூறினார்.

➡ 14

## வெரித்தாஸ் வானொலி 50ஆம் ஆண்டு நிறைவு

## திருத்தந்தையின் செய்தி



வெரித்தாஸ் வானொலி நிலையம் அன்பின் இறைவனை நோக்கியும், உண்மையை நோக்கியும் நேயர்களின் உள்ளங்களைத் திருப்பும் என்று நான் நம்புகின்றேன்.

வெரித்தாஸ் வானொலி நிலையம் நற்செய்தியைப் பறைசாற்றவும் வறியோரின் சார்பாக எழும் அன்புக்குரலாக விளங்கவும் தான் வாழ்த்துவதாகத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

1969ஆம் ஆண்டு நிறுவப்பட்ட வெரித்தாஸ் வானொலி நிலையம் அன்பின் இறைவனை நோக்கியும், உண்மையை நோக்கியும் நேயர்களின் உள்ளங்களைத் திருப்பும் என்று, தான் நம்புவதாகவும் அதற்காக செபிப்பதாகவும் திருத்தந்தை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

➡ 15

# இளம் மாணவர்களே, பெரிய கனவு காண்பதை நிறுத்திவிடாதீர்கள்

## திருத்தந்தை பிரான்சிஸ்



சுதந்திரமில்லாதபோது கல்வியில்லை, வருங்காலமும் இல்லை. உறவுகளில் தொடர்பைக் குறைக்கும் போதைப்பொருள் போன்று கைத்தொலைபேசிகளை மாற்றாதீர்கள்.

புனித அலாய்சியஸ் யூபிலி ஆண்டை முன்னிட்டு உரோம் நகரின் “Visconti” உயர்நிலைப் பள்ளியின் ஏறக்குறைய ஐந்தாயிரம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஏப்ரல் 13 ஆம் திகதி முற்பகலில் வத்திக்கானின் புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கில் சந்தித்து உரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

புகழ்பெற்ற இந்த உரோமன் கல்வி நிறுவனத்தில் திருத்தந்தை 12ஆம் பயஸ் அவர்கள் (Eugenio Pacelli) பொருளாதாரத்திற்கு நொபெல் விருது பெற்ற Franco Modigliani அவர்கள் போன்றோர் படித்துள்ளனர். புனித லொயோலா இஞ்ஞாசியாரின் விருப்பத்தின் பேரில் இந்த இடத்தில் இக்கல்வி நிறுவனம் அமைக்கப்பட்டு 1583ஆம் ஆண்டில் திருத்தந்தை 13ஆம் கிரகோரி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது என்று “Visconti” பள்ளியின் வரலாற்றை விளக்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்தப் பள்ளி அமைந்துள்ள அதே கட்டடத்தில் புனித இஞ்ஞாசியார் நினைவு ஆலயமும், அந்த ஆலயத்தில்தான் புனித லூயிஸ் கொன்சாகாவின் கல்லறையும் உள்ளன.

➡ 15

# உரோம் புனிதப் படிகள் 300 ஆண்டுகளின் பின் முதன் முறையாகத் திறந்துவைக்கப்பட்டது

பேரரசர் கொன்சன்ரைன் அவர்களின் அன்னை அரசி ஹெலேனா அவர்கள் நான்காம் நூற்றாண்டில் புனித பூமியிலிருந்து உரோம் நகருக்கு புனிதப் படிகளை எடுத்து வந்தார் என மரபு வழியாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இயேசுக் கிறிஸ்து பிலாத்துவின் அரண்மனையில் விசாரிக்கப்பட்டு மரண தண்டனைக்குத் தீர்ப்பிடப்பட்டவேளையில் அவர் நின்றுகொண்டிருந்த படிகள் என நம்பப்படும் உரோம் நகரிலுள்ள ‘Scala Sancta’ புனிதப் படிகள் கடந்த முன்னூறு ஆண்டுகளின்பின் முதன் முறையாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 1724ஆம் ஆண்டிலிருந்து மரத்தால் மூடி வைக்கப்பட்டிருந்த இந்த வெள்ளைநிற பளிங்குப் படிகள் ஏப்ரல் 11ஆம் திகதி திருப்பயணிகளின் பக்தி வணக்கத்திற்கென திறந்து வைக்கப்பட்டுள்ளன. திருப்பயணிகள் முழந்தாள்படியிட்டு செபித்துக்கொண்டே செல்லும் இப்புனிதப் படிகள் வருகின்ற யூன்



9ஆம் திகதி தூய ஆவியார் பெருவிழா வரை திறந்து வைக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ➡ 14

# கர்தினால்கள் ஆலோசனைக் குழுவின் 29வது கூட்டம்

இதுவரை நடைபெற்ற 29 ஆலோசனைக் கூட்டங்களின் விளைவாக உருவாக்கப்பட்டுள்ள திருத்தூது சட்ட வரைவுகளுக்கு Praedicate Evangelium என்ற தற்காலிக தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கென நியமிக்கப்பட்ட 9 கர்தினால்கள் அடங்கிய குழுவின் மூன்று கர்தினால்கள் தங்கள் பணியை நிறைவு செய்த நிலையில் 6 கர்தினால்கள் அடங்கிய குழு ஏப்ரல் 8 இத்திங்கள் முதல் 10 முடிய தன் 29வது கூட்டத்தை திருப்பீடத்தில் மேற்கொண்டது.

புதன் கிழமை காலை அமர்வைத் தவிர இம்மூன்று நாள்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் 9 மணியிலிருந்து 12.30மணி வரையிலும் பிற்பகல் 4.30இலிருந்து, 7மணி வரையிலும் நடைபெற்ற அமர்வுகள் அனைத்திலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கலந்து கொண்டார் என்று திருப்பீடச் செய்தித்துறை தலைவர் அலெஸ்சாந்த்ரோ ஜிசோத்தி அவர்கள் கூறினார்.



இதுவரை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டங்களின் விளைவாக உருவாக்கப்பட்டுள்ள திருத்தூது சட்ட வரைவுகளுக்கு Praedicate Evangelium என்ற தற்காலிக தலைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று ஜிசோத்தி அவர்கள் அறிவித்தார்.

➡ 15

பாஸ்காக் காலச் சிறப்பிதழ்

# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உயிர்ப்பு விழாச் செய்தி – 2019

திருவழிபாட்டு ஆண்டின் மாண்புமிக்க திருவிழாக் கொண்டாட்டமாக இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்புவிழா (ஈஸ்டர்) அமைகின்றது. இதில் நாம் சாவின் மீதும், பாவத்தின் மீதும் வெற்றி கொண்ட நாசரேத்தூர் இயேசுவை அறிக்கையிட்டுக் கொண்டாடுகின்றோம். "வாழ்பவரை இறந்தவரிடையே தேடுவானேன்? அவர் இங்கு இல்லை, உயிர்த்துவிட்டார்" (லூக்கா 24:5) என்னும் வார்த்தைகள் எம் காதுகளில் ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. அவரது உயிர்ப்பின் பயனுறுதிப்பாடு காரணமாக எம்மில் புதிய நம்பிக்கை புலர்ந்துள்ளது. அத்துடன் தான் வழங்கும் புதுப்பிக்கப்பட்ட வாழ்வில் தான் பிரசன்னமாக இருந்து எம்மையும் அவ்வாழ்வில் பங்கேற்க அழைப்பு விடுக்கின்றார்.

அக்களிப்புமிக்க இந்த உயிர்ப்புக்காலம் கிறிஸ்துவுடனான நெருக்கத்தை ஆழப்படுத்தவும், எங்கள் மத்தியில் உயிர்த்த ஆண்டவர் உயிரோடு இருக்கின்றார், அவர் நிச்சயமற்ற நிலைகளிலும், சவால்கள் நிறைந்த வாழ்விலும் எம்முடன் பயணிக்கின்றார் என்னும் விழிப்புணர்வு நிலைக்குள் நாம் புதுப்பிக்கப்படவும், தூண்டுதல் அளிக்கின்றது. (காண்.லூக்கா 24:13-32) நம் வாழ்வில் வரும் சவால்கள், நம்பிக்கையீனங்களை எதிர்கொள்ள உயிர்த்த இயேசுவின் மீதுள்ள எமது நம்பிக்கை உறுதி தருகின்றது. தனது மந்தைகளைக் கிறிஸ்து கைவிடுவதில்லை. அவர் எப்போதும் எங்களுடன் இருக்கின்றார் என்பதை உயிர்ப்புவிழா நினைவூட்டுகின்றது. இதுவே கிறிஸ்தவனின் மகிழ்ச்சிக்கு ஆணிவேராய் அமைந்துள்ளது.

நாம் ஒரு தேசிய இனமாக ஓர் உறுதியற்ற சமூக அரசியல் நிலைப்பாட்டுக்குள் வாழ்ந்துவருகின்றோம். மக்களின் தேவைப்பாடுகள் உணர்வு பூர்வமான புரிதலுடன் நிறைவேற்றப்படவேண்டிய நிலையுள்ளது. நாம் அடிப்படைத் தேவைகளுக்காக ஏங்கிப் போராடும் ஏழை, எளிய மக்களைச் சந்திக்கின்றோம். எமது தாய் நாட்டில் என்றுமில்லாதவாறு ஏழை பணக்காரர்களுக்கு இடையே மிக அகலமான இடைவெளி ஒன்றுள்ளது. மின்னல் வேகத்தில் நாளுக்கு நாள் உயர்ந்து செல்லும் விலைவாசி ஏழைகளுக்கு மேலும் மேலும் சுமையாகின்றது. மிகப்பெரிய அபிவிருத்தித்திட்டங்கள் ஒருபுறம் தீட்டப்பட மறுபுறத்தில் சாதாரண மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. கட்டுப்பாட்டை இழந்த நிலையை அடைந்துள்ள மிகப்பரவலான போதைப் பொருள் பாவனையானது, குழந்தைகளையும் இளமைப் பருவத்தினரையும் விழுங்கும் மிகப் பெரிய தீமையாய் உருவெடுத்துள்ளது. கிறிஸ்தவ நன்நெறிகளின் வழியில் இச்சமூக தீமைகளில் இருந்து விடுபடவும் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் முன்வருவோமாக.

நாம் கடவுளுக்கு நன்றி கூறி, தனித்தன்மை வாய்ந்த சமாதானம் என்னும் கொடையில் மகிழும் இவ்வேளையில் வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்காக ஏங்கும் ஏழைகளையும் நீதிக்காக குரலெழுப்பும் மக்களையும் மனதிற் கொள்ளுவோம். தேவையிலிருப்போர் மீது கரிசனை கொள்ளவே எமது கிறிஸ்தவ சீடத்துவம் எப்போதும் எமக்கு அழைப்பு விக்கின்றது. ஏனெனில் துன்பப்படுவோரில் இயேசுவின் சிதைந்த முகத்தை அடையாளம் காண்பது எமது கடமையாகும். எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தேவையில் உழல்வோர் மீது கருணை காட்டும் அவசியத்தை எமக்கு எப்போதும் நினைவூட்டுகின்றார். எமது உயிர்ப்பு விழாவின் மகிழ்ச்சி எம்மைச் சூழவுள்ளோரின் வலியைப் போக்க வேண்டும். சமுதாயத்தை இருளடையச் செய்யும் சமூக, ஒழுக்கத் தீமைகளை அகற்றும் வெளிச்சத்தைப் பரப்ப நாம் உயிர்த்த ஆண்டவரால் அழைப்புப் பெற்றுள்ளோம். இவ்வழைப்பு எங்கள் மூலமாக எங்கள் மகிழ்வு, நம்பிக்கை, சீடத்துவவாழ்வு என்பவற்றின் மூலமாக இனம் காணப்படுவதாக. நாம் உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்கு அளித்த சமாதானத்தின் தூதுவர்களாகத் துலங்குவோமாக.

எமது இறை நம்பிக்கையாளருக்கும், வாசகர்களுக்கும் உயிர்த்த இயேசுவின் மகிழ்வும், அமைதியும் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ●

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS.
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ்
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

# உயிர்ப்புப் பெருவிழா



'மண்ணின் மீது மனிதனுக்கு ஆசை, மனிதன் மீது மண்ணுக்கு அசை' மண்தான் இறுதியில் ஜெயிக்கின்றது. இது நடைமுறை வரலாறு. ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்தில் மனிதன் தான் வெற்றி பெறுகின்றான் என்பதை இயேசுவின் உயிர்ப்பு நமக்கு உணர்த்துகின்றது. சாதாரண மக்களுக்கு வாழ்வு சாவில் முடியலாம். ஆனால் இயேசுவின் மாட்சியில் பங்குபெறும் நமக்கு சாவில் தான் வாழ்வு தொடங்குகின்றது. இயேசு உயிர்த்தார். அவரைப்போல வாழும்போது நாமும் உயிர்ப்போம். இறப்பிலும் வாழ்வோம் என்பது உறுதி.

நற்செய்தி உயிர்ப்பை விளக்குவதில்லை. உயிர்ப்புத்தான் நற்செய்தியை விளக்குகின்றது. தங்கள் வாழ்க்கைப் பாதையில் சுமைகளோடு ஆண்டவரைப் பின்தொடர்ந்தவர்களுக்கு இறையாசீர் நிறைவாக உண்டு என்பதை இந்நாள் காட்டுகின்றது. வாழ்நாள் முழுவதும் நமக்கு வரும் துன்பச் சுமைகளில் இயேசுவின் முகம் கண்டு ஆறுதல் பெறுவோம். திடம் கொள்வோம்.

கல்வாரியில் அடக்கப்பட்ட இயேசு மாட்சிமையோடு உயிர்த்தெழுந்தார் 'இக்கோயிலை இடித்து விடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டியெழுப்புவேன்' (யோவா 2:19) என்ற வரிகளுக்கு விளக்கம் அளிக்கின்றார். 'சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? (1கொரி 15:55) என்ற பவுலடிகளாரின் வரிகளுக்கு வலிமை சேர்க்கும் வகையில் இயேசுவின் உயிர்ப்பு அமைந்துள்ளது. ஆகவே நாமும் நம் தீய எண்ணங்கள், சுயநலன்கள், பாவ வழிகளை விட்டுவிட்டு இயேசுவோடு உயிர்த்தெழுவோம். திருமுழுக்குப் பெற்ற நாம் முழுமையான மாற்றம் பெற்றவர்களாக புதுவாழ்வு வாழ்வோம். விண்ணக வாழ்வுக்கு நம்மைத் தகுதியாக்கிக் கொள்வோம். இயேசுவின் இதயத்திலிருந்து இரக்கத்தின் ஊற்று திறக்கப்பட்டு வழிந்தோடும் இம்மூன்று நாட்களிலும் அவரது இரக்கப் பெருக்கத்தை அனுபவிப்போம். எவ்வளவு துன்பங்கள், சோதனைகள், வாட்டும் நோய்கள் வந்தாலும் உயிர்த்த இயேசுவின் கரம் பற்றி நம்பிக்கையோடு வாழ்வைத் தொடர்வோம். ●

# வல்லமை விளங்கிடும் வாழ்வை வழங்கிட மரணத்தை வென்றார் கிறிஸ்து ஆண்டவர்

யூதப் பண்பாட்டிலும், யூத மரபுகளிலும், யூத சமய நம்பிக்கைகளிலும் இறந்தவர்கள் உலக முடிவில் உயிர்ப்பார்கள் என்பதுதான் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் எவரும் இறந்து மூன்றாம் நாள் உயிரோடும், உடலோடும் உயிர்த்தெழுந்ததாக செய்திகள் இல்லை. எனவேதான் தமது உயிர்ப்பைப் பற்றி தமது சாவுக்கு முன்பாகவே இயேசு பலமுறை தமது சீடர்களுக்கு சொல்லியிருந்தாலும், அதனை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல தமது சாவுக்கு முன்பாகவே இயேசு தமது மூன்று சீடர்களை தபோர்மலை உச்சிக்கு அழைத்துச் சென்று உருமாறினார். தன் உயிர்ப்பிற்குப்பின் எத்தகைய மகிமையில் இருப்பேன் என்பதை இயேசு முன்னடையாளமாகப் பிரசன்னப்படுத்தினார். நம் கிறிஸ்தவ நம்பிக்கையில் ஆண்டவர் கிறிஸ்து உண்மையாகவே இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

### நம் அன்றாட அனுபவங்கள்

நம் ஆன்றாட அனுபவங்கள் நமக்குச் சொல்லும் பாடங்கள் வேறு விதமாக இருக்கின்றன. புற்பூண்டுகளும், செடி கொடிகளும், மரங்களும், பறவைகளும், மிருகங்களும், மனிதர்களும் ஏன் எல்லா உயிரினங்களும் இவ்வுலகில் பிறக்கின்றன, வளர்கின்றன, இறக்கின்றன. எந்த உயிரும் மீண்டும் உயிர்த்து வாழ்வதைப் பார்க்கவில்லை. எனவே உயிர்ப்பது என்பது உண்மையா?

வாழ்வில் நாம் பேசுகின்ற தத்துவம் நிறைந்த பழமொழிகள் அனைத்தும் நம்வாழ்வு, நம் சாவோடு முடிவடைவதாகச் சொல்கின்றன. உதாரணமாக காலமே இது பொய்யடா காற்றடைத்த i gal h' நம் உடல் என்பது பொய்யானது. அதில் காற்று நின்றவுடன் அது காணாமல் போய்விடும். 'முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவார்' தலையில் தங்கமுடி அணிந்து மிகக் கம்பீரமாக ஆட்சி செய்பவரும் ஒரு பிடி சாம்பலாக ஒரு நாள் மண்ணில் புதைக்கப்படுவார். 'ஆடியடங்கும் வாழ்க்கையடா' ஆறடி நிலமே சொந்தமடா' மனித வாழ்வில் மனிதர் எதைச் சாதித்தாலும் எப்படி வாழ்ந்தாலும், இறுதியில் அவர்களது சாவில் மனிதர்கள் கொடையாகப் பெற்றுக்கொள்வது ஆறடி நிலம் மட்டுமே.

இவ்வாறு வாழ்வின் இறுதிநிலை சாவு என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் இயேசுவில், இயேசுவின் போதனைகளில், அவரது வாழ்வில் கடவுள் வெளிப்படுத்தியிருப்பது சாவென்பது வாழ்வின் முடிவல்ல. அதையும் தாண்டி நம் அனைவருக்கும் உயிர்ப்பும், முடிவற்ற நிலை வாழ்வும் உண்டு என்ற அரும்பெரும் புதுமைகள் தான் அவை.

### பல் சமயச் சூழல்

எமது நாட்டில் நாம் பல சமயத்தினரோடு வாழ்கின்றோம். எனவே வாழ்வின் உண்மைகள் பற்றிய விளக்கங்களை சமயங்களிடம் நாம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். புத்த சமயத்தைக் கேட்டால்



மனிதன் ஒவ்வொரு நிமிடமும் மாறிக்கொண்டே இருக்கின்றான் என்ற பதிலைச் சொல்கின்றது. இந்து மதத்தைக் கேட்டால் அவரவர் செய்கின்ற நன்மை தீமைக்கேற்ப ஒருவருக்கு பல (ஏழு) பிறவிகள் உண்டு என்கின்றது. சைவ சமயத்தைக் கேட்டால் அவரவர் (கர்மா) செயற்பாட்டிற்கேற்ப அவரது எதிர்கால வாழ்வு அமையும் என்கின்றது. fpwpj;j rkaj;jf;Nfl;lhy; 'உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்' என்ற இயேசுக் கிறிஸ்துவின் போதனையை எடுத்து விளக்குகின்றது.

### உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்தவர்கள்!

சிலுவையில் இறந்த இயேசு மீண்டும் உயிர்த்தார் என்பது கிறிஸ்தவ நம்பிக்கை. அத்தகைய நம்பிக்கையை ஏற்றுக்கொண்டவர்கள் தொடக்கக்காலக் கிறிஸ்தவர்கள். இவர்களில் சிலர் உயிர்த்த கிறிஸ்துவை நேரடியாகச் சந்தித்துப் பேசவும், அவரோடு உணவுண்டு மகிழவும், உயிர்த்த ஆண்டவருக்குச் சான்று பகரவும் பேறுபெற்றார்கள்.

உதாரணமாக:

1. மதலேன் மரியாளுக்கு உயிர்த்த ஆண்டவர் தோன்றினார் என யோவான் (யோவா. 20:11-18) எழுதியுள்ளார்.
2. உயிர்த்த கிறிஸ்து எம்மாவுஸ் சீடர்களுக்குத் தோன்றிய விவரங்களைப் பற்றி புனித லூக்கா தனது நற்செய்தியில் (லூக். 24:13-35) விளக்குகின்றார்.
3. சில முறை சீடர்களுக்கும், (யோவா. 20: 19-23, 21:1) தன் உயிர்ப்பைப் பற்றி பிறர் விளக்கியதை ஏற்காத தோமையார் சீடர்களோடு இருந்தபோது, உயிர்த்த கிறிஸ்துவே அவருக்குத் தோன்றினார் என யோவான் தன் நற்செய்தியில் அறிவிக்கின்றார்.

தோமையாரிடம் உயிர்த்த கிறிஸ்து கூறிய வார்த்தைகள் நம் காதுகளில் இன்று சங்காக முழங்க வேண்டும். 'தோமா என்னைக் கண்டதால் நீ நம்பிக்கை கொண்டாய். காணாமலே நம்புபவர்கள் பேறுபெற்றவர்கள்' ஆம், உயிர்த்த கிறிஸ்துவை நாம் பார்க்கவில்லை, அவரை நாம் சந்திக்கவில்லை. அவரோடு நாம் பேசவில்லை. உணவுண்ணவில்லை. ஆனால், கிறிஸ்து உண்மையாகவே உயிர்த்தெழுந்தார் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அந்த உண்மையை நம்புகின்றோம். அதனையே உலகிற்குப் பறைசாற்றுகின்றோம். நாம் நம்புவதாலேயே கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்கின்றோம். அதனாலேயே நாம் அனைவரும் பேறுபெற்றவர்களாக வாழ்கின்றோம்.

### பவுலடியார் நமக்கு விடுக்கும் சவால்!

நாம் அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்ரேலியா செல்லவில்லை, இக்கண்டங்களை நேரடியாகக் கண்டதுமில்லை. இருப்பினும் அங்கு சென்று வந்தவர்கள் சொல்லுவதை நம்பி ஏற்றுக்கொள்கின்றோம். அதுபோலவே இயேசுவின் சீடர்கள் கிறிஸ்து இயேசு மரித்தார், உயிர்த்தார் என்பதை நமக்குச் சொல்கின்றார்கள். அவர்கள் சொல்வதை நாம் நம்புகின்றோம். ஏற்றுக்கொள்வதால் மட்டும் நாம் உயிர்ப்பின் பலன்களைப் பெறமுடியாது என்பதுதான் பவுலடியார் நமக்கு முன்வைக்கும் சவால். உயிர்ப்பின் பலன்களை நாம் பெறவேண்டு மென்றால் கிறிஸ்துவோடு பிறருக்கான பணியில் அதிலும் சிறப்பாக ஏழை, எளிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்விற்காக உழைத்துப் போராடி மடியவேண்டும்.

ஆம் 'கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நம் நம்பிக்கை' (ஒரோ. 6:8) பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் நாம் இறந்தவர்கள். இதை நாம் எப்படியெல்லாம் வாழ்ந்து காட்டலாம்? எப்படியெல்லாம் உலகிற்கு எடுத்துச் செல்லலாம்?

1. இறைவாக்கை ஏற்றுக்கொள்வோம்.
2. இயேசு கிறிஸ்துவின் நிலைப்பாட்டையும் செயற்பாட்டையும் நமதாக்குவோம். குருடர்களைப் பார்வைபெறச் செய்வோம், சிறைப்பட்டோரை விடுவிப்போம், ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை வாழ்வுபெறச் செய்வோம், இவைகளை நாம் செய்யும்போது இயேசுவின் துன்பங்களில் பங்கு பெறுவோம். இதெல்லாம் நம்மால் முடியுமா? கிறிஸ்துவின் அருளோடு நம்மால் இவற்றைச் செய்ய முடியும். ஏனெனில் உயிர்த்த கிறிஸ்துவே நம் ஒவ்வொருவர் மீதும் தன் தூய ஆவியைப் பொழிந்து அவரது மீட்புப் பணியைத் தொடர பயமற்ற துணிச்சலைத் தருகின்றார். உலகம் தர இயலாத அமைதியைத் தருகின்றார். அதையும் நமக்கு நிறைவாகத் தருகின்றார். ●

பாஸ்காக் காலச் சிறப்பிதழ்

# “உண்மையா அது என்ன?”

- ச. யூட் கெமில்டன், புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். -

உண்மை என்றால் என்ன என்பதற்கு பல அறிவியலாளர்கள் பல விபரணங்களைக் கொண்டிருந்தாலும் மெய்யியலாளர்களின் “உண்மை” பற்றிய விளக்கம் ஒரு சிறப்பானதாகக் காணப்படுகின்றது. அதாவது ஒரு பொருளுக்கும் அல்லது ஒரு விடயத்திற்கும் அதனைப் பற்றி நாம் கொண்டிருக்கும் எண்ணத்திற்கும் இடையில் இணக்கப்பாடு இருக்குமாயின் அதனை “உண்மை” என்று மெய்யியலாளர்கள் வரைவிலக்கணம் கொடுக்கின்றார்கள். கிரேக்க தத்துவியலின்படி, மனிதன் ஒரு சிந்திக்கும் ஆற்றல் கொண்ட விலங்காவான். மேலுமாக, ஒரு பொருளினதோ அல்லது ஒரு வாதத்தினதோ இருப்பு நிலையென்பது மேற்சொன்ன சிந்திக்கும் விலங்கான மனிதனது சிந்தனையில்தான் தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வாறெனில், இவ்வுலகின் படைப்புக்கள் அனைத்தின் இருப்புநிலையானது அவற்றைப் படைத்த படைப்பாளியான இறைவனில் தங்கியிருக்கின்றன எனச் சொல்லலாம். படைத்தவனின் எண்ணத்திலேதான் இப்படைப்புக்கள் அனைத்தும் வண்ணங்களாகின. நாம் அனைவரும் பொம்மைகள் என்றால் எம்மை ஆட்டுவிக்கும் கயிறு அவன் கைகளில்தான் (படைப்பனைத்தின் இருப்பும் படைத்தவனின் கைகளிலேதான்) ஆகவே எப்போது ஒரு படைப்பின் இருப்பு நிலையும் படைத்தவனின் எண்ணமும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கின்றதோ, எப்போது ஒரு பொருளையோ அல்லது வாதத்தையோ மையப்படுத்திய மனிதனது எண்ணமும் படைத்தவனின் எண்ணமும் ஒன்றுபடுகின்றதோ அதுவே உண்மை எனப்படும். “உண்மை” பற்றிய உலகறிவு இவ்வாறிருக்க இயேசுவிற்கும், ஆளுனர் பிலாத்துவிற்கும் இடையிலான உரையாடலிலே இயேசு உண்மை பற்றி பேசுகின்றார். ஆனால் பிலாத்து உண்மை பற்றி எதுவுமே அறியாதவனாக காணப்படுகின்றான்.

ஆக உண்மையிலேயே பிலாத்துவிற்கு “உண்மை” என்றால் என்னதென்று தெரியாதா அல்லது போனால் இயேசு இங்கு குறிப்பிடுகின்ற “உண்மை” பற்றி இவனுக்கு எதுவும் தெரியாதா? இயேசு கோமாவிற்கு “வழியும் உண்மையும், வாழ்வும் நானே” (யோவா. 14:6) எனக் கூறினார். ஆனால் இங்கு தன்னை விசாரணை செய்யும் ஆளுனர் பிலாத்துவின் “அப்படியானால் நீ அரசன் தானோ” (யோவா. 18:37) என்ற கேள்விக்கு இயேசு பதிலளிக்கும் போது அரசன் என்று நீர் சொல்கின்றீர் உண்மையை எடுத்துரைப்பதே என் பணி இதற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே உலகிற்கு வந்தேன் உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்கு செவிசாய்க்கின்றனர் என்று கூறுகின்றார். இவ்விரு வார்த்தைகளையும் ஒப்பிடும்போது உண்மையில் இயேசுதான் உண்மையா? அல்லது இயேசு உண்மைக்கு சான்று பகர்ந்தவரா என்ற சங்கடத்திற்குள் நாம் விடப்படுகின்றோம். சாதாரணமாக உலகம் உண்மை என்றால் எதைக் கருதுகின்றதோ அதையே தமது அகராதியிலிருந்து அழிப்பவர்களில், அழித்தவர்களில் பலர் ஆட்சியாளர்கள், ஆளுனர்கள். இது மறுக்க முடியாத வரலாற்று உண்மை இன்றைய எமது ஆட்சியாளர்களின் நிலையும் இதுவே இவர்களின் அகராதியில் இந்த உண்மை என்ற சொல்லிற்கு இடமே இல்லை. இது இவ்வாறிருக்க ஆளுனர் பிலாத்துவிற்கு இயேசு பற்றிய உண்மை அல்லது உண்மை பற்றிய இயேசுவின் நிலைப்பாடு விளங்குவதற்கும், அறிவதற்கும் கடினமான ஒன்றுதான். எனவே யோவான்’ நற்செய்தியில் குறிப்பிடப்படுமல்லாது போனால் இளையோடிக்காணப்படும் இந்த உண்மை என்னவென்று நாம் உய்த்துணர்ந்து தெளிவுபெற வேண்டும். இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள். உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் என்று கூறினார். (யோவா. 8.31-32) தோமா, பிலாத்து இங்கு இயேசுவை நம்பிய யூதர்கள் ஆகியவர்க்கு உண்மை பற்றி இயேசு கூறிய வார்த்தைகளை ஆராயும்போது இறைவனின் மீட்புத்திட்டம் இயேசுவிலே முழுமைபெறுகின்றது, நிறைவு பெறுகின்றது. இயேசு இறைவனின் முழுமையான வெளிப்பாடு ஆகின்றார். என்பதை உண்மைக்கு வரைவிலக்கணமாகப் பெறுகின்றோம். எனவே இயேசுவே மெசியா என ஏற்றுக்கொள்வது என்பது நாம் ˙உண்மையை ஏற்றுக் கொள்வதாகும்.



இங்கு இயேசுவின் சிலுவைச்சாவு மீட்புத்திட்டத்தின் உச்சநிலை எனவேதான் இயேசு பிலாத்துவிற்கு கூறுகின்றார்.

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி இதற்காகவே நான் பிறந்தேன். (யோவா. 18:37) இயேசு இந்த மீட்புத்திட்டத்தை நிறைவேற்றவே பிறந்தார். இதுவே உண்மை. அதே வேளையிலே யோவான் நற்செய்தியிலே இளையோடியிருக்கும் ஒரே ஒரு பாவம் என்னவென்றால் இயேசுவே இறைமகனாகிய மெசியா (மீட்பர்) என்பது வெளிப்படுத்தப்படும்போது அல்லது இதனை அறிவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் அதன் விளைவாக இறைவழிபாட்டின் முழுமையாகிய இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்து அதனை வாழ மறுப்பதும் அல்லது போனால் இயேசுவின் வார்த்தைகளுக்கே செவிகொடுக்காமல் இருப்பதும் ஆகும். எனவேதான் இயேசு தன்னை நம்பிய யூதர்களுக்கு “என் வார்த்தைகளை கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்” என்றும் “உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்” என்றும் கூறினார்.

ஆனால் இயேசுவை பிலாத்துவிடம் கையளித்த யூதர்களுக்கு இயேசு தன்னை இறைமகனாகிய மெசியா என பல தடவைகள் வெளிப்படுத்திய போதும் அந்த உண்மையை ஏற்க மறுக்கின்றார்கள். இங்கே மெய்யியலாளர்களின் உண்மை பற்றிய வரைவிலக்கணத்தை யூதர்களின் நிலைப்பாட்டிற்கு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த யூதர்கள் “உண்மை” யற்றவர்களாக “உண்மை”யை ஏற்க மறுக்கின்றார்கள். அதாவது மெய்யியலாளர்களின் கருத்துப்படி “ஒரு விடயத்திற்கும் அதனைப் பற்றி நாம் கொண்டிருக்கும் எண்ணத்திற்கும் இடையில் இணக்கப்பாடு இருக்குமாயின் அது உண்மை எனப்படும்”. இங்கு “இயேசு” என்ற விடயத்திற்கும் யூதர்கள் அவரைப்பற்றிக் கொண்டிருக்கும் எண்ணத்திற்கும் இடையில் இணக்கப்பாடு இல்லை. ஏனெனில் “இயேசு” என்றால் “இறைமகனாகிய மெசியா, அவரே மீட்புத் திட்டத்தின் நிறைவு, முழுமை.” இந்த இணக்கப்பாடு யூதர்களது இயேசு பற்றிய எண்ணப்பாட்டில், அறிவில் இல்லை. எனவே பொய்மை தான் யூதர்களின் எண்ணத்தில் உண்டு.

இவ்வாறாக இயேசுவை பிலாத்துவிடம் ஒப்புவித்த யூதர்கள் யூதாசின் வழியில் தாங்களே உண்மையை மறுதலிக்கின்றார்கள். இதனால் தாங்களே தமக்கு தண்டனைத் தீர்ப்பை வரவேற்றுக் கொள்கின்றார்கள். அதனைவிட “இயேசு தன்னையே இறைமகன்” என்று கூறி கடவுளைப் பழிக்கின்றார் என்ற குற்றச்சாட்டை வைத்த யூதர்கள் (தலைமைக் குருக்கள்) பிலாத்து உங்கள் அரசனை நான் சிலுவையில் அறைய வேண்டும் என்கின்றீர்களா? என்று கேட்ட போது, “எங்களுக்கு சீசரைத் தவிர வேறு அரசர் இல்லை” என்று சொல்லி Yhwh ஆகிய ஒரே இறைவனை தாங்களே மறுதலிக்கின்றார்கள். அதாவது Yhwh இறைவனே அவர்களுக்கு ஒரே அரசர், அதனை விட அவர் திருப்பொழிவு செய்த சவுல், தாவீது, சாலமோன் போன்றவர்களே யூதர்களின் அரசர்கள். இங்கு Yhwh திருப்பொழிவு செய்யாத புறவின பேரரசர் சீசரை தமது அரசராக ஏற்று கடவுளைப் பழித்துரைக்கின்றார்கள். உண்மையை மறுதலிக்கின்றார்கள். ஆளுநன் பிலாத்துவிற்கும் கூட (“இயேசு”வை) “உண்மை”யை அறிவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. பிலாத்துவுடனான உரையாடலில் இயேசு தன்னை யாரெனஅவனுக்கு வெளிப்படுத்துகின்றார். ஆனால் “உண்மை”யாகிய இறைமகனாகிய மெசியா) இயேசுவை பிலாத்து குற்றமற்றவராக தேர்ந்து தெளிந்தும் சீசரா இயேசுவா எதனை தெரிவு செய்வது என்ற நிலைக்கு தள்ளப்படும் போது “உண்மை”யை (இயேசுவை) மறுதலித்து, இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்வதற்கு யூதர்களிடம் தீர்ப்பிட்டு கையளிக்கின்றான். இதனால் தனக்கும் தானே தண்டனைத் தீர்ப்பிட்டுக் கொள்கின்றான். இன்றைய இந்த நவீன உலகிலே “உண்மை” என்பது அகராதியில் இருந்தாலும் பல ஆட்சியாளர்களின் ஏன் பல சாதாரண மனிதர்களின் மனங்களிலிருந்து அழிந்து போய்க் கொண்டிருக்கின்றது. தேர்தல் பிரச்சாரங்களில் அரசியல் வாதிகளின் உறுதிமொழிகளும் வெற்றிபெற்ற பின்பு அவர்களது ஆட்சியில் இந்த உறுதிமொழிகளின் ஸ்திரமற்ற தன்மையும் எம் அனைவருக்கும் தெரிந்ததே. இது தான் “உண்மை”யின் இன்றைய நிலைப்பாடு. ஏன் எமது கண்ணுக்கு முன்னால் நடைபெற்ற அட்டுளியங்கள் இன்றைய எமது அதிகார வர்க்கத்தின் சொற்களில் நடைபெறாத விடயங்களாக காணப்படுகின்றன. காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள், இந்த உலகிலே இன்னும் பிறக்காத, உலகிலே வசிக்காதவர்களா? எமது இந்த உறவுகள் எம்மோடு வாழ்ந்தார்கள் என்பது பொய்யா? அவர்கள் எங்கே? உண்மை எங்கே? உலகளவிலே கூட ஊடகவியலாளர் ஜமால் சவுதி அரேபியாவிலே காணாமல் போனார். பின்பு கொலை செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. யார் கொலை செய்தார்கள்? அவரது உடல் உங்கே? உண்மை எங்கே?

ஏன் எமது யாழ் குடாநாட்டில் காணாமல் ஆக்கப்பட்ட அருட்தந்தை ஜிம்பிரவுணும் அவருடன் சென்ற மறையாசிரியரும் எங்கே? இறுதி யுத்தத்தின் பின்பு எமது கண்களுக்கு முன்னால் பஸ்சிலே ஏற்றிச் செல்லப்பட்ட அருட்தந்தை பிரான்சிஸ் யோசேப்பும் அவருடன் சென்ற 400 இளைஞர்களும் எங்கே? உண்மை எங்கே? நான் உண்மையாக குற்றமற்றவன் என்றால் வெளிநாட்டு நீதிபதிக்கோ, உள்நாட்டு நீதிபதிக்கோ அஞ்சமாட்டேன். உண்மையில் குற்றமற்றவன் என்றால் ஏன் வெளிநாட்டு நீதிபதிக்கு அஞ்சவேண்டும். வெளிநாட்டு நீதிபதியின் விசாரணையால் நாட்டின் இறைமை பாதிக்கப்படுமா? நாட்டிற்கு இறைமையை வழங்கும் மக்களுக்கே நீதி கிடைக்காத வேளையில் அவர்களுக்கான நீதி வெளிநாட்டு நீதிபதிகளால் வழங்கப்படுமாயின் அது நாட்டின் இறைமையை பாதுகாக்கின்றதே தவிர அது அதனை மீறவில்லை.

ஏன் எமது ஊடகங்கள், பத்திரிகைகள் கூட நடந்த சம்பவங்களை “உண்மை”யோடு நடந்தவாறு சொல்வதில்லை. மாறாக பக்கச்சார்போடே செய்திகளை வழங்குகின்றன ஏன் பத்திரிகைகளின் “ஆசிரியர் பக்கங்கள்” கூட மதசார்பாகவோ அல்லது அரசியல் கட்சிகளின் சார்பாகவோ வெளிவருகின்றன. இன்றைய உலகிலே மக்களுக்கு செய்தி வழங்கும் ஊடகங்களே உண்மையை மூடி மறைக்கின்றனவாக காணப்படுகின்றன. ஊடகங்களில் உண்மை எங்கே? எது எவ்வாறாயினும் இன்றும் கூட உண்மையோடு வாழும் உள்ளங்களும் உண்மைக்காக உயிரைக்கொடுக்கும் மனிதர்களும் உலகத்திலே இருக்கத்தான் செய்கின்றார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இதங்கு சிறந்த உதாரணம். அவர் எதையும் மறைப்பதில்லை “ஆம் என்றால் “ஆம்” எனவும் “இல்லை” என்றால் “இல்லை” எனவும் சொல்லுங்கள் என்ற இயேசுவின் (உண்மையின்) (மத்.5:37) வார்த்தைக்கு முரணாகாது தனது வாழ்வை கொண்டுள்ளார்.

எனவே இன்று உண்மையோடு வாழ, உண்மையாக வாழ அழைக்கப்படுகின்றோம். அதற்கு முதல் உண்மையென்றால் என்னவென்று தெளிவாக அறிய வேண்டும். அன்று பிலாத்துவிற்கு “உண்மை”யை அறிய வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இன்று எமக்கும் இறைவனால் வழங்கப்படுகின்றன. அதாவது, இயேசுவே இறைமகன் என்பதை நாள்தோறும் அறிய கத்தோலிக்கர்களாகிய எமக்கு நிறைய சந்தர்ப்பங்கள் தரப்படுகின்றன. எனவே இயேசுவை இறைமகனாகிய மெசியா என்று நம்புவோம். அவரது வார்த்தைகளுக்கு செவிமடுத்து “உண்மை”க் கேற்ப எமது வாழ்வை அமைப்போம். குறிப்பாக “நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும். என்பதே என் கட்டளை” (யோவா.15:17) என்ற அவரது ஒரே கட்டளையை எம் வாழ்வின் மகுடமாகக் கொண்டு வாழுவோம். உலகில் காணப்படும் பொய்மைகளுக் கெதிராகக் குரல் கொடுப்போம். எமது வாழ்விலும் உண்மைக்கு சான்று பகருவோம்.●

# உயிர்ப்புப் பெருவிழா

‘மண்ணின் மீது மனிதனுக்கு ஆசை, மனிதன் மீது மண்ணுக்கு ஆசை’ மண்தான் இறுதியில் ஜெயிக்கின்றது. இது நடைமுறை வரலாறு. ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்தில் மனிதன் தான் வெற்றி பெறுகின்றான் என்பதை இயேசுவின் உயிர்ப்பு நமக்கு உணர்த்துகின்றது.

சாதாரண மாணவர்களுக்கு வாழ்வு சாவில் முடியலாம். ஆனால் இயேசுவின் மாட்சியில் பங்குபெறும் நமக்கு சாவில் தான் வாழ்வு தொடங்குகின்றது. இயேசு உயிர்த்தார். அவரைப்போல வாழும்போது நாமும் உயிர்ப்போம். இறப்பிலும் வாழ்வோம் என்பது உறுதி.

நற்செய்தி உயிர்ப்பை விளக்குவதில்லை. உயிர்ப்பு தான் நற்செய்தியை விளக்குகின்றது. தங்கள் வாழ்க்கைப் பாதையில் சுமைகளோடு ஆண்டவரைப் பின்தொடர்ந்தவர்களுக்கு இறையாசீர் நிறைவாக உண்டு என்பதை இந்நாள் காட்டுகின்றது. வாழ்நாள் முழுவதும் நமக்கு வரும் துன்பச் சுமைகளில் இயேசுவின் முகம் கண்டு ஆறுதல் பெறுவோம். திடம் கொள்வோம்.



கல்வாரியில் அடக்கப்பட்ட இயேசு மாட்சிமையோடு உயிர்த்தெழுந்தார். ‘இக்கோயிலை இடித்து விடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டியெழுப்புவேன்’ (யோவா. 2:19) என்ற வரிகளுக்கு விளக்கம் அளிக்கின்றார். ‘சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? (1கொரி. 15:55) என்ற பவுலடிகளின் வரிகளுக்கு வலிமை சேர்க்கும் வகையில் இயேசுவின் உயிர்ப்பு, அமைந்துள்து. ஆகவே நாமும் நம் தீய எண்ணங்கள், சுயநலங்கள், பாவ வழிகளை விட்டுவிட்டு இயேசுவோடு உயிர்த்தெழுவோம். திருமுழுக்குப் பெற்ற நாம் முழுமையான மாற்றம் பெற்றவர்களாக புதுவாழ்வு வாழ்வோம். விண்ணக வாழ்வுக்கு நம்மைத் தகுதியாக்கிக்கொள்வோம். இயேசுவின் இதயத்திலிருந்து இரக்கத்தின் ஊற்று திறக்கப்பட்டு வழிந்தோடும். இம்மூன்று நாட்களிலும் அவரது இரக்கப் பெருக்கத்தை அனுபவிப்போம். எத்துணை துன்பங்கள், சோதனைகள், வாட்டும் நோய்கள் வந்தாலும் உயிர்த்த இயேசுவின் கரம் பற்றி நம்பிக்கையோடு வாழ்வைத் தொடர்வோம்.●



# மாணவர் மன்னா



## நற்செய்தியாளர் விருது இறுதிப்போட்டி

நற்செய்தியாளர் விருதுக்கான இறுதிப்போட்டி சித்திரை மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் நடைபெறும்.

மன்னா பத்திரிகை ஊடாக விவிலிய வினாவிடைப்போட்டியில் பங்குபெற்றிய மறைக்கல்வி மாணவர்களுக்கு இப்போட்டிக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே இப்போட்டியில் பங்குபெறலாம்.

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 08 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
J. தனுசிக்கா,
உயிர்த்தராசன்குளம்,
பறப்பாங்கண்டல் பங்கு

**இரண்டாம் பரிசு:**
இ. மெர்லின் நியோமி,
கோயில்வீதி,
உயிலங்குளம்பங்கு.

**மூன்றாம் பரிசு:**
றெ.சி. ஸ்ரெவின் றெவ்வல்,
2ஆம் வட்டாரம்,
வங்காலைப்பங்கு

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 70 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 53 பேர்.

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 08இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. P.J. சீவமதி, நறுவிலிக்குளம், வஞ்சியன்குளப்பங்கு.
02. நி. மேரி நிஷாலினி, பள்ளிமுனைப்பங்கு.
03. யே. சுகிர்தமேரி, சின்னக்கரிசல், தோட்டவெளிப்பங்கு.
04. ம. டெரினா, தாஸ்கோட்டம், வேப்பங்குளம்பங்கு.
05. ம. திருசாளினி, தாஸ்கோட்டம், வேப்பங்குளம்பங்கு.
06. கி. அனுசியா, பொன்தீவுகண்டல்பங்கு.
07. ம. யோசவ் பிரசாஜ் றோச், பள்ளிமுனைப்பங்கு
08. றேமன் றொய்ஸ் டயஸ், பேசாலைப்பங்கு.
09. அ. அகஸ்ரீன், பறப்பாங்கண்டல்பங்கு.
10. அ.அகஸ்ரீனா, பறப்பாங்கண்டல்பங்கு.
11. C. பற்றிக் கிஷாந், தாழ்வுபாடு, எழுத்தூர்பங்கு.
12. S. ஜெசிக்கா, அப்புத்தலபங்கு
13. கி.அ. ஆன் மல்ஷிக்கா, உயிலங்குளம்பங்கு.
14. அ.ஆன் அஜந்திக்கா, கோயில்வீதி, உயிலங்குளம்பங்கு.
15. தி. அயந்தினி, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
16. தி. தனுஜான், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
17. இ.ஆன் குளோடியா, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
18. அ. மேரி அனோலின், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
19. இ. றெனிஸ் யஷோன், கோயில்வீதி, உயிலங்குளம்பங்கு.
20. ச. புஸ்பாகரன், கட்டைக்காடுபங்கு.
21. சோ. யூடிற் லெற்றிஷியா, கீரி, எழுத்தூர்பங்கு.
22. அ. ஆன் சோபிக்கா, வஞ்சியன்குளப்பங்கு.
23. அ. அன்ரனி ஷெரோன், வஞ்சியன்குளம்பங்கு.
24. ஜெ. பிறின்ஸ்ரன் பீரிஸ், எமில்நகர், பேராலயப்பங்கு.
25. கு. ஆன் சினேகா, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
26. றெ.சி. கிறிஸ்வோன் றெவ்வல், வங்காலைப்பங்கு.
27. ஜெ.ஆன் பிறித்திக்கா பீரிஸ், எமில்நகர், பேராலயப்பங்கு.
28. ஜெ. ஜெனுக்சா, பறப்பாங்கண்டல்பங்கு.
29. வி. சுடர்மாறன், பறப்பாங்கண்டல்பங்கு.
30. D. லீமா இஸ்பெல், அப்புத்தளைப்பங்கு.
31. போல்றாஜ் நனுஷன், விடத்தல்தீவுபங்கு.
32. கு. நியூஸ்ரெலா, முதலைகுத்தி, உயிலங்குளப்பங்கு.
33. சு.லெயூமி, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளப்பங்கு.
34. R. சர்மிலா, ஜோசவாஸ்நகர், தோட்டவெளிப்பங்கு.
35. கொ. அகுஸ்ரினா, முத்தரிப்புத்துறைப்பங்கு.
36. M. மைக்கல் பமஸ், தோட்டவெளிப்பங்கு.
37. வி. பென் நிக்சிகன், முதலைகுத்தி, உயிலங்குளப்பங்கு.
38. V. ஆன் துஷ்மிதா, உயிலங்குளப்பங்கு.
39. S. நெகோமியா, முதலைகுத்தி, உயிலங்குளம்பங்கு.
40. ச. டிலைக்ரா, அரிப்பு மேற்கு, முத்தரிப்புத்துறைப்பங்கு.
41. றொசேன் குருஸ், 09ஆம் வட்டாரம், வங்காலைப் பங்கு.
42. D.ரெஷ்மிகா, பண்டாரவளைப்பங்கு.
43. G.குகலாஷினி, பண்டாரவளைப்பங்கு.
44. J. பியூரன், சின்னக்கரிசல், தோட்டவெளிப்பங்கு.
45. S.டெல்சினா, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
46. சை. யேசுதாசன், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
47. அன்ரனி ஜெபர்சன், புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
48. எ. அன்ரனற் ஜெபர்சனா, வஞ்சியன்குளப்பங்கு.
49. வி. ஆன் றக்சனா, புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
50. S. லினுக்ஷி, பதுளை வீதி, பதுளைப்பங்கு.

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம் கிறிஸ்தவ மறைக்கல்விக் கூடங்களும் ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனையாளர்களும்

– அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி –

### கிறிஸ்தவ மறைக்கல்வி கூடங்கள்

கிறிஸ்தவத்தில் புதிய சிந்தனைகள் தோன்றுவதற்கும், வளர்ச்சியடைவதற்கும் ஆரம்பகாலத்தில் தோற்றம் பெற்ற கிறிஸ்தவ மறைக்கல்வி கூடங்கள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. இரண்டாம் நூற்றாண்டில் யுஸ்ரின், ரற்சியன் போன்ற சிந்தனையாளர்கள் கல்விக்கூடங்களை அமைத்து, கிறிஸ்தவ நம்பிக்கையை விளங்கிக் கொள்வதற்கு வேண்டிய அடிப்படை அறிமுகங்களைச் செய்தனர். காலப்போக்கில் நோஸ்டிக்கரும், ஏனைய மாற்றுச் சிந்தனையாளர்களும் சிறியளவில் அத்தகைய கல்விக் கூடங்களை அமைத்து தங்கள் தப்பறைகளைக் கற்பித்துப் பரப்பினர். இப்பிரச்சினைக்குத் தீர்வுகான உரோமைய ஆயர்கள் தனியார் கல்விக்கூடங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து தங்கள் நிர்வாகத்தினுள் கொணர்ந்து, அவற்றைக் கிறிஸ்தவத்தில் சேர விரும்புவோருக்கு மறைக்கல்வி வழங்கும் ஸ்தாபனங்களாக மாற்றியமைத்தனர். எனவே விஞ்ஞான மரபும், மதத் தத்துவ விடயங்களில் ஆர்வமும் கொண்ட கல்வியறிவுள்ள மேற்தர வகுப்பினரைக் கொண்ட எகிப்தின் தலை நகராகிய அலெக்சாந்திரியாவும், கிரேக்க உலகின் முக்கிய நடுநிலையமாக விளங்கிய சீரியா, அந்தியோக்கியாவும் கிறிஸ்தவ மறைக்கல்விக் கூடங்களை அமைப்பதற்கு ஏற்ற இடங்களாக அமைந்தன.

### அலெக்சாந்திரிய மறைக்கல்விக் கூடம்

இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மறைக்கல்விக்கூடம் ஒன்று அலெக்சாந்திரியாவில் அமைக்கப்பட்டது. பன்ரைனஸ், அலெக்ஸ்சாந்திரிய கிளமென்ட், ஒரிஜின் போன்றவர்கள் இக்கல்விக்கூடத்தின் சிந்தனையாளர்களாவர். இம்மறைக்கல்விக்கூடத்தின் முதல் அதிபரான பன்ரைனஸ் என்பவர் 180ஆம் ஆண்டளவில் உலகம் பற்றிய கிறிஸ்தவக் கோட்பாடுகளைக் கிரேக்க மெய்யியல் அடிப்படையில் ஆதரித்து வாதிட்டதாகக் கூறப்படுகின்றது. இக்கல்விக்கூடத்தின் இரண்டாம் ஆசிரியராக அலெக்ஸ்சாந்திரிய கிளமென்ற்ட் பணிபுரிந்தார். அலெக்சாந்திரிய மறைக்கல்விக் கூடத்திற்குத் திருச்சபையால் நியமனம் பெற்ற முதல் அதிபரும், ஆசிரியருமாக ஒரிஜின் விளங்குகின்றார்.

இவர்கள் கிறிஸ்தவ இறையியலை விளக்க பிளேறோவின் மெய்யியல் கருத்துக்களை பயன்படுத்தியதோடு, திருவிவிலியத்தில் விளக்கமளிக்க உருவக விளக்க முறையைப் பயன்படுத்தினார்கள். இறைவெளிப்பாடு உண்மைகளை உத்தேசக் கொள்கைகளைப் பயன்படுத்தி ஆராய்தல், இறையியலை மூவொரு இறைவனின் ஒருமைப்பாட்டிலிருந்து ஆராய்தல், கிறிஸ்துவின் இறை இயல்பை வலியுறுத்தி, மனித அவதாரம் எடுத்த கடவுள் எனும் கருத்தை முன்வைத்து, கிறிஸ்துவின் மனித இயல்பை குறைத்துப் போதிக்கும் தன்மை காணப்பட்டது. ஆரிய பேதகத்துக்கு எதிராகக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. நான்காவது நற்செய்தியாகிய யோவான் நற்செய்தியை அதிகம் பயன்படுத்தி இயேசுவின் இறையியல்புக்கு முக்கியத்துவம் கொடுத்து போதித்தனர்.

### அந்தியோக்கிய மறைக்கல்விக்கூடம்

கிறிஸ்தவ மறைக்கல்விக் கூடங்களை ஆரம்பிப்பதற்குரிய சிறந்த சூழல் அலெக்சாந்திரியாவைப் போல் அந்தியோக்கியாவிலும் காணப்பட்டது. அந்தியோக்கியக் குருவான லூசியன் என்பவரே இம்மறைக்கல்விக்கூடத்தின் நிறுவனர் என்பது திருச்சபையின் பாரம்பரியக் கருத்தாகும். இவர் அந்தியோக்கிய ஆயரின் அனுமதியுடனேயே இக்கல்விக்கூடத்தை ஆரம்பித்தார். இவர் எபிரேய விவிலியத்தின் உதவியுடன் கிரேக்க விவிலியமாகிய செப்துவாஜின்ரை மறுபதிப்புச் செய்தார். இக்கல்விக்கூடத்தினர் இயேசுவின் மனித இயல்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இறையியலை விளக்க அரிஸ்ரோட்டிலின் மெய்யியலைப் பயன்படுத்தினர். திருவிவிலியத்தை விளக்கச், சொல்லுக்குச் சொல் விளக்கும் முறையைப் பின்பற்றினர் (நேர்ப்பொருள் உட்கருத்து). இறையியலில் மூவொரு கடவுளின் மூன்று ஆட்கள், கிறிஸ்துவின் தெய்வீக, மனித இயல்புகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். தார்சுசைச் சேர்ந்த ரியூடோர், மொப்சுவெஸ்ரியா எயுசேபியஸ், எருசலேம் சிறில் போன்றவர்கள் இக்கல்விக்கூடத்தினால் உருவாக்கப்பட்ட சிறந்த இறையியல் சிந்தனையாளர்களாவர்.

### ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனையாளர்கள்

### அலெக்ஸ்சாந்திரிய கிளமென்ட் (கி.பி 150-216)

கிறிஸ்தவத்தைத் தழுவிய கிளமென்ட் தன் கல்வித் திறமையாலும், போதனையாலும் அதை ஆதரிப்பவரானார். அலெக்ஸ்சாந்திரிய மறைக்கல்விக் கூடத்தைச் சேர்ந்த கிளமென்ட் பின்வரும் மூன்று முக்கியமான நூல்களை எழுதினார். 1.கிரேக்கருக்கு அறிவுரை 2. கிறிஸ்தவ அறிமுகம் 3.ஆன்மீக வாழ்வின் இரகசியம். பல தெய்வ வழிபாட்டு முறை தவறென்பதை எடுத்துக்காட்டிய கிளமென்ட் கிறிஸ்தவம் அனைத்து மதங்களிலும் மேன்மையானது என்பதை எண்பித்து மக்களைக் கிறிஸ்தவ நம்பிக்கையில் வழிநடத்திச் சென்றார். நல்ல கிறிஸ்தவர் தான் "உண்மையான அறிவாளி" என்பதனை கிறிஸ்தவ ஆன்மீக, ஞான வாழ்வின் மூலமாக எடுத்துரைத்தார்.

### ஒரிஜின் (கி.பி 185-254)

அலெக்ஸ்சாந்திரியாவில் பிறந்த ஒரிஜின் அலெக்ஸ்சாந்திரிய மறைக்கல்விக் கூடத்தில் கற்று அக்கல்லூரியின் அதிபரானார். "இரும்பு மனிதன்" என அழைக்கப்படும் இவர் ஒரு கிறிஸ்தவ அறிஞராக விளங்கினார். திருவிவிலியம், இறையியல், ஞான வாழ்வு போன்ற விடயங்கள் பற்றி 800இற்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். பேரரசர் செப்தமூஸ் செவருஸின் கலாபனையின் போது, கிறிஸ்தவர்களை சிறையில் சந்தித்து அவர்களைத் தைரியப்படுத்தி ஊக்குவித்தார். யூதர்களும், பிற மதத்தவர்களும் கொண்டுவந்த பல்வேறு தர்க்கங்களையும் எதிர்த்து, அறிவுள்ள தர்க்கங்களை முன்வைத்தார். இவர் "கிறிஸ்து வேத ஆதாரம்", "பிரமாணங்கள்", "ஆறு வரிசையில் வேதாகமம்" போன்ற முக்கியமான நூல்களை எழுதியுள்ளார். செல்சஸ் என்ற தப்பறையாளரின் நூலுக்கு எதிராக எழுதப்பட்ட 'கிறிஸ்து வேத ஆதாரம்' என்ற நூல் கிறிஸ்தவர்களுக்கான பரிந்துரை நூலாகும். 'பிரமாணங்கள்' என்ற நூல் முக்கியமான கிறிஸ்தவ விசுவாச உண்மைகளை விளக்கும் ஒரு இறையியல் கைநூலாகத் திகழ்ந்தது. இதில் இறைவன், பிரபஞ்சம், மனித சுதந்திரம், இறை வெளிப்பாடு பற்றிய ஆழமான கருத்துக்கள் தரப்படுகின்றன. 'ஆறுவரிசையில் வேதாகமம் திருவிவிலிய ஆய்வுக்கு மிகவும் உதவியாகவிருந்தது. திருவிவிலியத்தை விளக்க சொற்கருத்து முறை, உளவியல் முறை, ஆன்மீக முறை என்ற மூன்று நுட்பமுறைகளை இதில் காணலாம்.

### ஜஸ்ரின் (கி.பி 100-165)

ஜஸ்ரின் கிரேக்கப் பின்னணியில் வளர்ந்து ஸ்தோயிக்கச் சிந்தனைகளையும் பிளேற்றோ, அரிஸ்ரோட்டில் என்போரின் தத்துவக் கருத்துக்களையும் அறிந்து இறுதியில் கிறிஸ்தவத்தில் அமைதி கண்டார். கிரேக்க அறிவாளியான ஜஸ்ரின் மனிதரை மீட்பதற்கான உண்மைமிக்கத் தத்துவம் கிறிஸ்தவம் தான் என்பதை உணர்ந்தார். உரோமையில் ஒரு பிரபலமான கிறிஸ்தவ மெய்யியல் கல்லூரியை நிறுவினார். இவர் எழுதிய நூல்கள் கிறிஸ்தவத்திற்கு விரோதமாகக் கூறப்பட்ட மாற்றுக் கருத்துக்களை மறுத்தும், கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் காட்டப்பட்ட பாரபட்சங்களைக் கண்டித்தும், கிறிஸ்தவர்களின் நம்பிக்கையும் வாழ்க்கை முறைகளும் சரியெனத் தர்க்க ரீரியாக எண்பித்தும் காட்டுகின்றன. பல நூல்களை எழுதிய ஜஸ்ரின் முதன்மையான பெரிய கிறிஸ்தவ எழுத்தாளர் என்ற பெயரைப் பெற்றார். இவரின் முக்கியமான நூல்களாக அன்ரோனினஸ், பியுஸ், மார்க்கஸ் அவுரேலியுஸ் என்ற பேரரசர்களுக்கு எழுதிய "அப்போலொஜியா", உரோமை சென்றசபைக்கு எழுதிய ஆவணம், யூத இனத்தவருக்கு எதிராக எழுதிய "திரைபோவுடன் உரையாடல்" என்பன காணப்படுகின்றன. கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்கள் சார்பாக காப்புரைத்து கிறிஸ்தவ உண்மைகளை எடுத்துரைத்த ஜஸ்ரின், மார்க்கஸ் அவுரேலியுசின் ஆட்சிக்காலத்தில் உரோமைய தெய்வங்களுக்குப் பலிசெலுத்த மறுத்தமையால் கைது செய்யப்பட்டு கி.பி 165இல் சிறைச்சேதம் செய்யப்பட்டார்.

### தேர்த்தூலியன் (கி.பி 160-240)

வட ஆபிரிக்காவில் கார்தேஜ் என்னுமிடத்தில் பிறந்தார். கிரேக்க, இலத்தின் மொழிகளில் பாண்டித்தியம் பெற்று பல ஆண்டுகள் உரோமையில் சட்டத்தரணியாகப் பணியாற்றினார். கி.பி 195 இல் கிறிஸ்தவத்தை தழுவிய இவர் ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அக்காலத்தில் வட ஆபிரிக்காவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடைபெற்ற கலாபனையில் கிறிஸ்தவர்கள் கொடூரமாகத் துன்புறுத்தப்படுவதை நேரில் கண்டார். கிறிஸ்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுவதைக் கண்டித்து பல நூல்கனை எழுதினார். முதன்முதலில் இலத்தீன் மொழியில் கிறிஸ்தவ நூல்களை இவர் எழுதிமையால் "இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை" என அழைக்கப்படுகின்றார்.

### இரேனியுஸ் (கி.பி 135-202)

புனித இரேனியுஸ் துருக்கியில் சிமிர்னா பிரதேசத்தில் கிறிஸ்தவ குடும்பத்தில் கி.பி 135ஆம் ஆண்டில் பிறந்தவர். புனித பொலிக்காப்பை அறிந்து அவரின் சீடரானார். கி.பி 177 இல் லயன்ஸ் நகர ஆயராகி 25 வருடங்கள் பணிபுரிந்தார். சிறந்த அறிவும், விவேகமும் உடைய இரேனியுஸ் பலரை மனந்திருப்பி, பிரான்சில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபையை மீண்டும் கட்டியெழுப்பினார். இரேனியுஸ் கிறிஸ்தவத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட தப்பறைகளை எதிர்த்து பல நூல்களை எழுதினார். அவர் எழுதிய நூல்களில் மிக முக்கியமானது "பேதக மறுப்பு" ஆகும். ஐந்து பகுதிகளைக் கொண்ட இந்நூல் கிரேக்க மொழியில் நோஸ்டிக்க பேதகத்திற்கு எதிராக எழுதப்பட்டது. அதில் அவர் நோஸ்டிக்கத்தை விமர்சித்து அதன் அடிப்படைக் கருத்துக்கள் தவறானவை என எண்பிக்கின்றார்.

➡ 15

"நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர்" தி.ப. 02:44

# அன்பிய புதுப்பித்தல் அனுபவப் பகிர்வு

தொகுப்பு: அருட்சகோதரர்கள்,
குணசேகரன் கிருஷாந், பிலிப் நேரிஸ் பிரசாந்தன்
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக்கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

மன்னார் மறைமாவட்டம் உதயமாகி இன்று 38 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கின்றது. அன்பிய வாழ்க்கை முறை மூலமாக நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்புவது மறைமாவட்டத்தின் இலக்காக, நோக்காக இருக்கின்றது. தொண்ணூறுகளில் அறிமுகம் பெற்ற அன்பிய வாழ்க்கை முறையின் கனிகளைச் சுவைத்தவர்களில் நாமும் இடம் பெறுகின்றோம். அன்று பகிரப்பட்ட இறைவார்த்தைகள் உணவுகள் இன்றும் எம் மனத்தில் அழியா இடம் பிடித்திருக்கின்றன. இறைமக்கள் அனைவரும் ஆர்வமாக ஈடுபட்டதையும், வீடுகளில் கூடிச்செபித்ததையும் கண்கூடாகக் கண்டு அனுபவித்திருக்கின்றோம். ஆனால் இன்று யாரை அல்லது எதைக்குறை கூறுவது என்று தெரியவில்லை. பல இடங்களில் அன்பியங்கள் வலயங்களாக மாறி வெறும் நிர்வாக அலகுகளாக செயற்பட்டு அல்லது செயற்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. போர், தொலைக்காட்சி மற்றும் தொலைபேசிகளின் அறிமுகம், பொருளாதாரத் தேவைப்பாடுகளை மாத்திரம் காரணிகளாகக் கூறி குறை கூற முடியுமா?

இருப்பினும் அன்பியம் என்பது காலாவதியாகிப் போன ஒன்று என்று கருதிவிட முடியுமா? (சிலர் அவ்வாறு தான் கருதுகின்றனர் வழிகாட்டிகள் உட்பட) இல்லை என்று நாம் கூறுகின்றோம். நாம் கண்கூடாகக் கண்டு அனுபவித்த ஒரு பதிவை இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம். யாழ். புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருமடத்தில் நான்காம் வருட இறையியல் மாணவர்களுக்கான பணித்தளங்கள் சார்பான களப்பயிற்சியின் ஒரு அங்கமாக அன்பியம் பற்றிய பயிற்சி இடம்பெற்று வருகின்றது. அதன் அடிப்படையில் யாழ். மறைமாவட்டத்திற்கான இயக்குனர் அருட்பணி. லியோ ஆம்ஸ்ரோங் அற்றும் இணை இயக்குனர் அருட்பணி. மில்பர் வாஸ் ஆகியோரின் திட்டமிடல் மற்றும் வழிகாட்டலில், இறுதிப்போரில் சிதைந்துபோன முக்கிய இடமான புதுக்குடியிருப்புப் பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. சுதர்சன் அவர்களின் கனிவான அழைப்பின் பேரில் அப்பங்கில் அன்பியப் புதுப்பித்தல் ஒன்றை மேற்கொள்ள வாய்ப்புப்பெற்றோம்.

இயற்கை எழில் கொஞ்சும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு சோகக் கதைகளைச் சுமந்து நிற்கின்ற நந்திக் கடலின் பக்கமாக இருக்கின்றது புதுக்குடியிருப்பு என்னும் அழகிய கிராமம். 650க்கும் மேற்பட்ட கத்தோலிக்கக் குடும்பங்களைக் கொண்டது அக்கிராமம். ஏற்கனவே 12 வலயங்களாக இருந்த இப்பங்கில் திம்பிலி, கைவேலி என்னும் சிறு கிராமங்களையும் இணைத்து 22 புதிய அன்பியங்களாக உருவாக்கம்பெற்றது இப்பங்கு. மாசி மாதம் 22ஆம் திகதி தொடக்கம் பங்குனி மாதம் 03ஆம் திகதி வரை அங்கே தங்கியிருந்தோம். எங்களுக்கான அடிப்படைப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு முதல் நான்கு நாட்களும் முதல் பதினொரு அன்பியங்களை அங்கு சென்ற பதினொரு அருட்சகோதரர்களும் பொறுப்பெடுத்துக்கொண்டோம். இரண்டு நாட்கள் அவ்வன்பியத்தின் வீடுகளைத் தரிசித்து அன்பியம் பற்றிய அறிமுகத்தைப் பெற்றுக்கொண்டோம். மூன்றாம் நாள் ஏழுபடிமுறை அன்பிய இறைவார்த்தைப் பகிர்வை அறிமுகம் செய்தோம். நான்காம் நாள் அன்பியத்தில் திருப்பலி இடம் பெற்றது. திருப்பலி நிறைவுற்ற பிற்பாடு உணவுப்பகிர்வு வித்தியாசமான முறையில் இடம் பெற்றது. சில அன்பியங்கள் தனித்தனியே உணவைக்கொண்டு வந்து ஒன்றாகப் போட்டு குழைத்து உண்டனர். சிலர் பொருட்களை சேர்த்து ஒன்றாக சமைத்து உண்டனர். இதே போல அடுத்த நான்கு நாட்களிலும் அடுத்த பதினொரு அன்பியங்களிலும் இவ்விதம் செயற்பட்டோம். இறுதியாக 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனைத்து அன்பியங்களும் பவனியாக புனித சூசையப்பர் ஆலயத்திற்கு வந்து திருப்பலியில் பங்கு பற்றினர். திருப்பலியை அருட்பணி. ப.யோ.ஜெபரட்ணம், யாழ் குருமுதல்வர் அவர்கள் தலைமையேற்று சிறப்பித்தார். தனது மறையுரையில் எந்தப்பங்கு அன்பிய வாழ்வை வாழுகின்றதோ அதுவே மிக அழகான பங்கு என்றும், அன்பிய வாழ்வின் மூலம் தான் எம்மைப் பிறர் கிறிஸ்தவர்கள் என்று கண்டு கொள்வர் என்றும் கூறி வாழ்த்துக்களையும் தெரிவித்தார். காணிக்கை நேரம் அன்பியங்கள் தாம் கொண்டு வந்திருந்த பலகாரங்களைக் காணிக்கையாகக் கொடுத்தனர். அவை பகிரப்பட்டு ஒவ்வொரு அன்பியத்திற்கும் ஏற்ற அளவு கலைநிகழ்ச்சிகளின் போது வழங்கப்பட்டன. ஏராளமான பொருட்கள் எஞ்சியிருந்ததைக் கண்ட போது யோவா.6:1-15 பகுதியில் இயேசு செய்த அப்பங்களைப் பகிர்ந்தளிக்கின்ற புதுமையே நினைவிற்கு வந்தது. திருப்பலி வேளையில் அன்பியப் பணியாளர்கள் தமது அர்ப்பண வாக்குறுதியை வழங்கினர். ஒவ்வொரு அன்பியமும் ஒவ்வொரு புனிதரின் பெயரால் பெயரிடப்பட்டதுடன் ஒவ்வொன்றும் சிறப்பான கலைநிகழ்வொன்றையும் வழங்கின. கூடுதலான பங்குபற்றுதலை மேற்கொண்ட கலை நிகழ்வுகள் பரிசில்களும் பெற்றன.

இங்கே நிச்சயமாகப் பல விடயங்களை நாம் எடுத்துக் கூற முனைகின்றோம்.

01. மக்கள் உறங்கு நிலையில் இருந்தார்கள். தட்டி எழுப்பும் போது மிகுந்த உற்சாகத்துடன் ஒன்று சேர்ந்து வந்தார்கள்.

02. மக்களை உற்சாகத்துடன் இயங்க வைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு பங்குத்தந்தை உள்ளிட்ட ஆன்மீகத் தலைமைகளையே சேரும்.

03. மாற்ற முடியாது/திருத்த முடியாது என்கின்ற மனப்பாங்கு உடைந்து போனது. ஏராளமான சண்டை சச்சரவுகள், பிரிவினை, பாகுபாடுகள் என்பன மறைந்து ஒன்றுபட்டு மக்கள் வந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வாறு ஒளிக்கீற்று தென்படுகின்றது.

04. கவனிக்கப்படாமல் இருந்த எத்தனையோ குடும்பங்கள் இன்று இணைந்து கொண்டுள்ளன. பங்குச் சமூகத்துடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

05. சமூகப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துப் போராடுகின்ற அளவுக்கு ஊக்கம் பெற்றுள்ளனர்.

06. குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தைத் தந்தது, நாங்கள் தனிப்பட்ட முறையில் வீடுகளைத் தரிசித்தமையே என்பது எங்கள் கருத்து.




திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது போல மந்தையின் வாடை கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்றால் வீடுகள் சந்திப்பது அவசியமாக இருக்கின்றது.

07. அனைத்திற்கும் மேலாக பங்கேற்கும் திரு அவையாகப் பயணிக்க வேண்டிய ஆரம்பப் புள்ளி இடப்பட்டிருக்கின்றது.

08. மக்கள் தந்த பங்களிப்பும், முக்கியத்துவமும், உபசரிப்பும் எங்களுக்கு புதுவிதமான ஊக்கத்தைத் தந்திருப்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

நாம் மேலே குறிப்பிட்டு இருக்கின்ற இந்த அனுபவமானது ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்கின்ற ஒரு அவாவுடன் தான் இதை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். இதைவிடச் சிறந்த முறையில் பல அன்பியங்கள் இயங்கி வருகின்றதை எவராலும் மறுக்க முடியாது. ஆனால் செயலற்று இருக்கின்ற சில பங்குகள், அன்பியங்கள் என்பன இந்த பகிர்வின் மூலம் விழித்தெழுமென்றால் இக்கட்டுரை பயனற்றுப் போய்விடாது.

எனவே, அன்பிய வாழ்க்கை முறையின் முக்கியத்துவம்,, தோற்றம், நோக்கம், ஈடுபாடு எம் சமூகங்களுக்கான பொருத்தப்பாடு என்பனவற்றை மிக ஆழமாக சிந்தித்துப் பார்க்க இக்கட்டுரை மூலம் உங்களை அழைத்து நிற்கின்றோம். அதற்கான சில சிந்தனைகளையும் கீழே தருகின்றோம்.

## எமது சமூகத்தின் தற்போதைய நிலை

போரும், வன்முறைகளும், அரசியல் அடக்கு முறைகளும், இன அழிப்புக்களும், திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பும், சாதிய வெறியும், சமய மோதல்களும், சமூக வலைத்தளங்களின் ஆக்கிரமிப்பும், போதைவஸ்து கலாச்சாரமும் நாகரீகம் என்ற போர்வையில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இந்த நவீன உலகிலே கிறிஸ்தவர்கள் தம் நிலை மறந்து, கிறிஸ்தவ விழுமியங்களை மறந்து எப்படியும் வாழலாம் என்ற எண்ணத்தோடு தெய்வ பயம் இல்லாதவர்களாக பிறர் சினேகம் இன்றி நான், எனது, என்னுடையது, எனக்கு என்று சொல்லி சுயநலத்துடன் பெயரளவில் மட்டும் கிறிஸ்தவர்களாக வாழ்வதை காணக்கூடியதாக உள்ளது. எமது நாட்டில் 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற உள்நாட்டுப் போரின் கொடூரத்தாலும், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளாலும், இழப்புக்களாலும் எம்மக்கள் அடைந்த துன்பங்கள் நாம் அனைவரும் அறிந்ததே. எனினும் பேருக்குப் பின்னரான திட்டமிட்ட போதைப்பொருள் வியாபாரம், வேலைவாய்ப்பின்மை, கொலை, கொள்ளை, வாள்வெட்டு, சிறுவர்கள் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், சமூகவலைத்தளங்களின் தவறான பாவனை, கையடக்கத் தொலைபேசிகளின் ஆதிக்கம் போன்ற சமூக சீர்கேடுகளாலும், கலாச்சார சீர்குலைப்பினாலும் நேரடியாக பாதிக்கப்படுவது எம் இளைஞர் யுவதிகளே. இன்றைய இளைஞர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள் என்று சொல்லுவார்கள். எம்முடைய திருச்சபையின் எதிர்கால தூண்களாக திகழப்போகின்றவர்களும் இந்த இளைஞர்களே. ஆனால் இன்றைய இளைஞர்கள் கணணியிலும், கையடக்க தொலைபேசிகளிலும் தம் இளமையை தொலைத்துக்கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். சிறந்த கல்வி மான்களாக, நாளைய தலைவர்களாக, திருச்சபையின் எதிர்கால தூண்காக உருவாக வேண்டியவர்கள் இன்று வெறுமனே What's aap, Viber வாதிகளாகவும், முகநூல் போராளிகளாகவும் மாறி வருவது இன்றைய இஞைர்களின் தேடல் சரியான இலக்கை நோக்கி இல்லை என்பதை அல்லது அவர்கள் சரியான பாதையில் வழிநடத்தப்படவில்லை என்பதை தெளிவாக காட்டுகின்றது. இன்று மதுவுக்கும், போதைக்கும் அடிமையாகியும் பொருளாதார மாற்றம், வேலைவாய்ப்பின்மை போன்றவற்றால் ஏற்பட்ட விரக்தியினாலும் ஏராளமான மக்கள் சிறப்பாக இளைஞர்கள் திருச்சபைக்கு வெளியே மிகவும் ஆபத்தான நிலையில் வாழ்வதை நாம் அறிவோம். இவர்கள் மட்டில் திருச்சபையின் கடமை என்ன? இவர்களை ஆற்றுப்படுத்தும், நெறிப்படுத்தும், மக்களை சரியான பாதையில் வழிநடத்தி, கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் உறுப்புக்களாக மாற்றுவதும், ஓரங்களிலும், விளிம்புகளிலும் ஒதுக்கப்பட்டு செயலிழந்து இருக்கும் கிறிஸ்தவர்களை அன்போடு அரவணத்து அவர்களை ஒரே குழுமமாக பங்கேற்கும் திரு அவையாக மாறுவதும் திரு அவையின் முக்கியமான பொறுப்பாகும். இதை செயற்படுத்த ஆசிய ஆயர்மன்றம் கையலும் மிகச்சிறந்த ஓர் அணுகுமுறைதான் அன்பியம் ஆகும்.

## திரு அவையின் நிலை

"ஒரே உடலில் நமக்கு உறுப்புக்கள் பல உள்ளன. அந்த உறுப்புக்கள் எல்லாம் ஒரே செயலை செய்வதில்லை. அது போலவே நாம் பலராய் இருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கின்றோம்." (உரோமையர் 12: 4-5)

கிறிஸ்து திருச்சபையை இம்மண்ணுலகில் ஸ்தாபித்த போது இம்மண்ணுலகின் மாந்தர் அனைவரும் ஒரே உடலின் உறுப்புக்களாய் இணைந்திருக்கவும், எல்லோரும் திருச்சபையின் பங்காளிகளாய் மாறவுமே ஆசைப்பட்டார். ஆனால் துர்அதிஷ்ட வசமாக இன்றைய திரு அவை பல்வேறு கோணங்களில் பிளவுபட்டுக்கிடப்பதை காணக்கூடியதாக உள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்துக்கு முன்னரான திரு அவையின் நிலைப்பாட்டை நாம் நோக்குகின்ற போது இதனை கூம்பு வடிவ திரு அவை என்று கூறுவார்கள். ஏனெனில் அதிகாரத்தின் அடிப்படையில் முறையே திருத்தந்தை, கருதினால்மார், பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர், இறுதியாக பொதுநிலையினர் என்ற அடிப்படையில் இறங்குவரிசைப் படுத்தப்பட்டு ஒரு கூம்பு வடிவ திரு அவையாக காணப்பட்டது. இந்த கூம்பு வடிவ திரு அவையில் பொதுநிலையினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. திருநிலையினர் மக்களை அடக்கி ஆள்பவர்களாகவும், அதிகாரம் செலுத்துபவர்களாகவும் காணப்பட்டனர். எல்லா பொறுப்புக்களையும் முயற்சிகளையும் குருவானவரே முன்னெடுக்கட்டும், தேவையான அனைத்தையும் கொடுக்கட்டும் என்று பொதுநிலையினர் கருதுகின்றனர். பொதுநிலையினர் குருக்களின் உதவியாளர்களாக காணப்படுகின்றனர். அத்திரு அவையில் ஏராளமான கொண்டாட்டங்களும், சடங்கு முறைகளும் தாராளமாக காணப்படுகின்ற போதும் கிறிஸ்துவுக்கான இடமோ மிகவும் சொற்பமாக காணப்படுகின்றது. மேலும் ஒருவர் ஒருவரோடு உறவில்லாத பல தனிநபர்கள் ஞாயிறு தினங்களில் மட்டும் ஒன்று கூடுகின்ற ஒரு கூட்டமே திருஅவையாக நோக்கப்படுகின்றது. பெரும்பாலான பங்குத் திருஅவைகளில் ஒருசில பணிக்குருக்களும், பங்குச்சபைகளும் தீவிரமாக செயற்பட ஏனைய பெரும்பாலான மக்கள் ஆலயத்தில் எவ்வித ஈடுபாடுமின்றி ஒதுங்கியே காணப்படுகின்றனர். திரு அவையின் இந்த நிலை திருச்சபையை ஏற்படுத்தியதன் நோக்கத்துக்கு முற்றிலும் முரணானதாகவே காணப்படுகின்றது.

## இரண்டாம் வத்திக்கான் சங்கம்

"திரு அவையின் இந்த நிலை மாறவேண்டும். திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்கு பணியில் பங்குபெறும் அழைப்பை பெற்றுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் வெறுமனே பார்வையாளர்களாக இல்லாமல் பங்கேற்கும் திரு அவையாக மாறவேண்டும் என்பது 1962 தொடக்கம் 1965 வரையான காலப்பகுதியில் நடைபெற்ற 02ஆம் வதிக்கான் சங்கத்தின் முடிவுகளில் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் வரலாற்றில் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வு என்றே கூறவேண்டும். ஏனெனில் திருச்சபையின் வாழ்வு மற்றும் பணி பற்றிய புதிய புரிதலையும் அதன் விளைவாக திரு அவையில் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது இந்த பொதுச்சங்கம். ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் என திருச்சபையின் அனைத்து நிலையனரின் வாழ்வு மற்றும் பணி பற்றிய புதிய கருத்தோட்டங்களை உருவாக்கியது இச்சங்கத்தின் சிறப்பு. குறிப்பாக இச்சங்கம் பொதுநிலையினரை முதன்மைப்படுத்தி அவர்களின் சிறப்புக்களை எடுத்துக்கூறி அவர்களின் கடமைகளையும், உரிமைகளையும் சுட்டிக்காட்டி பொது நிலையினரின் பொற்காலத்திற்கு வித்திட்டது இச்சங்கம். "பொதுநிலையினர் தங்களுக்கே உரித்தான முறையில் கிறிஸ்துவின் திருப்பணி நிலை, இறைவாக்கு உரைக்கும் மற்றும், அரச அலுவல்களில் பங்கு கொள்கின்றனர்." (சங்க ஏடுகள்: திருச்சபை: எண்: 30) கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் "கிறஸ்துவின் உடலை கட்டி எழுப்பும் பணியில் அவரவருடைய நிலைக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு பங்கெடுக்கின்றனர்."

(திருச்சபை சட்டம்: 208) திரு அவையின் இன்றைய நிலை மாறி திரு அவை மீண்டும் புத்தெழுச்சி பெற வேண்டும் என்று சொன்னால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் திரு அவையின் தலைவர்கள் கூறியது போல பொது நிலையினர் குருகுலத்தாரின் உதவியாளர்களாக இனி ஒரு போதும் இருக்க தேவையில்லை என்பதை இச்சங்கம் வலியுறுத்தியது. "திரு அவை பற்றிய புதிய கண்ணோட்டத்தின் படி கிறிஸ்துவின் தூதுரைப் பணியில் பொது நிலையினர் கூட்டுப் பொறுப்புள்ள உடன் உழைப்பாளர்களாகின்றனர்." (சங்க ஏடுகள்: திருச்சபை: எண்: 31) புதிய முறை திரு அவையில் குருக்களும் மற்ற மேய்ப்பு பணியாளர்களும் அதிகாரம் செலுத்தும், அடக்கி ஆளும் தலைவர்களாக இருக்க கூடாது. மாறாக அவர்கள் பணிவிடை புரியும் , தலைமைப் பண்புகளோடு ஊக்குவித்தல், தூண்டுதல், கற்றுக் கொடுத்தல், செயற்பட வைத்தல் முதலியவற்றை நிறைவேற்ற வேண்டும். "பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகின்றனர், உயர் குடியினர் அவர்கள் மீது அதிகாரத்தை காட்டுகின்றனர். இதை நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்க கூடாது." (மத்தேயு 20: 25-26) "உங்களுக்கு போதகர் ஒருவரே நீங்கள் யாவரும் சகோதர சகோதரிகள்" (மத்தேயு 23:8) மேலும் இந்த மறுமலர்ச்சி பெற்ற திருஅவையில் திருநிலையினருக்கும் பொதுநிலையினருக்கும் இடையே காணப்படும் மிகவும் அகன்ற பிளவு உடைக்கப்பட வேண்டும்.

*(11ஆம் பக்கம் பார்க்கவும்)*

### "நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர்" தி.ப. 02:44

# அன்பிய புதுப்பித்தல் அனுபவப் பகிர்வு

பொதுநிலையினரும், குருகுலத்தாரும் வெவ்வேறு பொறுப்புக்களை கொண்டிருந்தாலும் மேன்மையிலும் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையை கட்டியெழுப்பும் பொதுவான பணியிலும் அவர்களிடையே சமத்துவம் நிலவ வேண்டும் என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் மிக தெளிவாக சுட்டி நிற்கின்றது. "கிறிஸ்துவில் அடைந்த மறு பிறப்பினால் பிறக்கும் மான்பு அதன் உறுப்பினர் யாவருக்கும் பொதுவானதே, பிள்ளைகளுக்குரிய அருளும் நிறைவடைய அவர்கள் பெற்றுள்ள அழைப்பும் பொதுவானவையே. ஒரே நிறைவாழ்வு, ஒரே எதிர்நோக்கு, மற்றும் பிளவுபடா இறை அன்பு அவர்களுக்குரியது. எனவே கிறிஸ்துவிலும், திரு அவையிலும் இனம், நாடு, சமூகநிலைமை, சாதி, பால் என்பவற்றின் அடிப்படையில் எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லை." (சங்க ஏடுகள்: திருச்சபை: எண்: 32).

### ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறை (Asipa)

இன்று கவனிக்கப்பட வேண்டிய, கவலைக்குரிய விடயம் என்னவென்று சொன்னால், இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவுற்று பல தசாப்தங்கள் கடந்து விட்ட போதும் இன்றும் சங்கத்தின் கனவாகிய பங்கேற்கும் திரு அவையும், கிறிஸ்து திரு அவையை ஏற்படுத்தியதன் அடிப்படை நோக்கமும் எட்டப்படாமல் இருப்பது தான். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முடிவுகளும், திட்டங்களும் வெறும் ஏட்டுச்சுரக்காயாக இருப்பது கவலை அளிப்பதாக உள்ளது. எனவே திரு அவையை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கனவுத் திருஅவையாக, ஒரு பங்கேற்கும் திரு அவையாக, குழுமங்களின் ஒன்றிப்பாக, உயிர்த்த இயேசுவிற்கு சான்று பகரும் திரு அவையாக மாற்றுவது எப்படி என்று 1990இல் பான்குங் இல் கூடிய ஆசிய ஆயர் மன்றம் ஆளமாக சிந்தித்தது. திருஅவை பங்கேற்கும் திருஅவையாக மாற அதனை ஊக்குவிக்கும் முறை என்ன என்பதே இம்மாநாட்டின் பிரதான பேசுபொருளாக அமைந்தது. அதன் பலனாக 1993இல் ஆசிய ஆயர்மன்றமும், பொதுநிலையினருக்கான பணியகமும், மனித முன்னேற்றத்திற்கான பணியகமும் இணைந்து மலேசியாவில் ஒரு கூட்டத்தை நடாத்தின. இங்குதான் ஆசியாவில் "பங்கேற்கும் திருஅவையை" வளர்க்கும் அல்லது ஊக்குவிக்கும் அருட்பணி முயற்சிக்கு "அசிப்பா", "Asipa" என்று பெயரிடப்பட்டது. இந்த குழும வாழ்க்கை முறையே தமிழில் "அன்பியம்" என்று அழைக்கப்படுகின்றது.

### அன்பிய வாழ்க்கை முறை

அன்பியங்கள் வழியாகவே உயிரோட்டமுள்ள திருஅவையை நாம் உருவாக்கிட முடியும். விசுவாசிகள் சிறிய குழுமங்களிலே தங்கள் ஆழமான விசுவாசத்தை பகிர்ந்து கொள்ளவும், ஆண்டவரின் வாழ்வழிக்கும் வார்த்தைகளை தியானித்து செபமாக்கி செயற்படுத்திடவும் அன்பியங்கள் அற்புதமான வாய்ப்பழிக்கின்றன. தொடக்க திருச்சபையை கொணரவும், திருஅவையில் எவ்வித ஈடுபாடும் இன்றி குருக்களால் கவனிக்கப்படாதவர்களாக விளிம்புகளில் வாழும் பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்போரை திருச்சபையின் பங்காளிகளாக மாற்றவும் இன்று அன்பியங்களே சிறந்த வழி. அன்பியம் ஒரு சக்தி வாய்ந்த இறை இயக்கம். அன்பியம் சிறந்த வேளன்மை விளைநிலம், அன்பியத்தினால் கடவுளை சந்திக்கவும், உண்மையான அன்புறவில் வளரவும், சமத்துவத்திலும், சகோதரத்துவத்திலும் வளரவும் முடியும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் இறை மக்கள் ஒன்று கூடி, உறவில் இணைந்து, இறைவேண்டலில் ஈடுபட்டு, பகைமை மறந்து, பகிர்ந்து வாழும் அடித்தள உறவு வாழ்வுதான் அன்பியத்தின் சிறப்பு. அன்பியத்தில் உள்ள அனைத்து குடும்பங்களையும் ஒருங்கிணைத்து உயிரோட்டமுள்ள இறை சமூமாக உருவாக்குபவர் துய ஆவியார். திருமுழுக்கினால் தூய ஆவியால் அருட்பொழிவு செய்யப்பட்ட இயேசுவின் சீடர்களாம் கிறீஸ்தவர்களே ஒரு சிறு குழுவாக இணைந்து இறை உறவிலும், சகோதர உறவிலும், மனித நேயத்திலும் நாளும் வளர்ச்சி பெறுகின்றார்கள். பல்வேறு குடும்பங்களை சேர்ந்த கிறிஸ்தவர்கள் ஒன்று கூடும் போது அவர்களிடையே ஆளமான இறை ஒன்றிப்பையும், சகோதர உறவையும் இறைவேண்டல் ஏற்படுத்துகின்றது. எனவே தான் தொடக்க திருஅவை இறைபுகழ் பாடுவதும், இணைந்து செபிப்பதும் மைய இடம் பெற்றிருந்தன. "அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்." (தி. ப: 2: 42)

உறவு உலகத்தில் நீர்த்து போகாத ஒரு பொக்கிஷம்! உலகின் எந்த காவியங்களிலும் மனித உறவின் மேன்மைகளை சொல்லாமல் சென்றிருக்க வாய்ப்பு இல்லை. ஒருபடி தாண்டி திருஅவை "அன்பியம்" என்பதில் இதை அடைக்கலம் செய்தது இறைவன் இந்த உலகத்தை அன்பினால் கட்டியெழுப்பினார். அந்த அன்பினால் தான் இன்னும் இந்த உலகம் உயிர் பெற்றிருக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் போதனைகள் முழுக்க முழுக்க அன்பையே மையமாக கொண்டிருக்கின்றன. அன்பு வடிவமான இறைவனை மனிதன் அடைய ஆசிக்கின்றான். ஆனால் சக மனிதனை அன்பு செய்ய முடியாத ஒருவனால் எவ்வாறு அந்த அன்பே வடிவமான இறைவனை அடைய முடியும்? ஆகவேதான் நமது கத்தோலிக்க தாய்த்திரு அவை "அன்பியம்" என்பதை நிறுவி நம் அனைவருக்கும் ஒருவர் ஒருவரை அன்பு செய்ய கற்றுக் கொடுக்கின்றது. போலிகள் பெருகிப்போயுள்ள இந்த நாட்களில் உண்மையான எமது கத்தோலிக்க தாய்த்திருஅவையின் அழகினை நாம் நமது அன்பியத்தின் வழியாக பிரதிபலித்து காட்ட வேண்டிய மிக்பெரிய தேவை எழுந்துள்ளது. இலக்கில்லாமல் இலக்கியம் இல்லை! அன்பில்லாமல் அன்பியம் இல்லை!குறிப்பிட்ட இலக்கு நோக்கி கிறிஸ்தவ இல்லம் நோக்கி அன்புடன் எய்யப்பட்ட அன்பியம் எனும் அம்பு, பாய்ந்த இடத்தில் காயத்தை உண்டாக்காமல் பயத்தை போக்கி, சமாதான மனநிலையை இம்மக்களிடையே ஏற்படுத்தும். தொன்றுதொட்டு ஊறிப்போய்க்கிடக்கும் விசுவாச அகல் திரிகளை உசுப்பிவிடும் சுடராய், தீப்பொறியாய் நம்மை உயிர்ப்பிக்கட்டும் அன்பியங்கள்.

### இறைமக்களின் கருத்துக்கள்

"அன்பிய செயற்பாடானது இறைமக்களிடம் மீண்டும் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. தானும் தன்பாடும் என்றிருந்த பலர் பிறருடன் சேர்ந்து இயங்கும் நிலை மீண்டும் உருவாகி உள்ளது." (ஜேசுதாசன் ஜெயந்தினி – 01ஆம் அன்பியம்) "இறைவார்த்தையால் ஊட்டம் பெற்றேன்" (அ. அனுசியா – 14ஆம் அன்பிய ஊக்குவிப்பாளர்)

"புதிய உறவுகள் ஏற்பட்டு உடைந்த உறவுகள் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டதை காண முடிந்தது" (அருட்சகோதரி மேரி கிறிஸ்ரீன் - HFC)

"எமது பங்கு சமூகத்தில் மனம் மகிழும் பல மாற்றங்களை கண்ணூடாகக் காணக்கூடியதாகவும், உணரக்கூடியதாகவும் உள்ளது" (திரு இசைக்குழு) "மனக்கசப்புக்கள், ஏற்றத்தாழ்வுகள் களையப்பட்டு ஒற்றுமை உருவானது" (06ஆம் அன்பியத்தினர்)

"உண்மையாகவே ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்த வாழ்வை எமக்கு நினைவூட்டியதுடன், ஆன்மீக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்" (திரு. நெல்சன் - ஆலயசபைச் செயலாளர்)

"சமூக வலைத்தளங்களில் மூழ்கி அயலவரின் முகம் தெரியாமல் வாழ்கின்ற இன்றைய சமூகத்தில் இளையோர் நாம் எம் அயலவரை அன்பு செய்து இறைவனின் அழைப்பில் தொடர்ந்து இளையோர் நாமும் அன்பியமாகப் பயணிப்போம் என்பது உறுதி" (சூசையப்பர் ஆலய இளையோர்) "இதுவரை இல்லாத புத்துணர்ச்சி எம்மனதில் ஏற்பட்டுள்ளது" (கவியின் 18ஆம் அன்பியம்) "பாரபட்சம் இன்றி உணவைப் பகிர்ந்து கொண்டோம்" (10ஆம் அன்பியத்தினர்) "தொடர்ந்து அன்பியம் நடைபெறும்" (03ஆம் அன்பியத்தினர்) "ஆன்மீக வாழ்வையும் சமூக வாழ்வையும் ஏற்படுத்தக்கூடிய ஆர்வம் காணப்பட்டது" "அன்பியத் திருப்பலிகளின் போது பாடல்கள் பாடவும், வாசகம், மன்றாட்டு வாசிக்கவும் சந்தர்ப்பம் அதிகமாகக் கிடைக்கின்றது" (ஜோ. அனோஜினி – தரம் 10) "கடந்தகால போரும், இடப்பெயர்வுகளும் தந்த மாற்றங்களினால் இறை அன்பை சுவைக்க மறந்து உலக நுகர்வுக் கலாச்சாரத்துள் தம் வாழ்வை சீரழித்துக் கொண்ட மக்கள் அனைவருக்கும் அன்பியம் விடியலின் கதவைத் திறந்து விட்டுள்ளது" (பமினா) ●

# கத்தோலிக்க மக்களே! விழித்தெழுங்கள்

*"நேரம் வந்துவிட்டது, இன்னுமா தூங்குகிறீர்கள்"*

**மாந்தையு'ரான்**

### கத்தோலிக்க மறைமாவட்டம்

இலங்கைத் திருச்சபையின் வரலாற்றில் மன்னார் மறைமாவட்டம் ஒன்றுதான் வேதசாட்சிகள் இரத்தம் சிந்திய மறைமாவட்டம். இம் மறைமாவட்டம் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது. பல நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்களை மறைக்காய் இழந்தது இம்மறைமாவட்டம். வேதசாட்சிகளின் இரத்தத்தால் அர்ச்சிக்கப்பட்டது இம்மறைமாவட்டம். இம்மறைமாவட்டக் கத்தோலிக்க மக்கள் என்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

### மாந்தை திருப்பூமி

சங்கிலிய மன்னன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த போது படை எடுத்து மாந்தையைக் கைப்பற்றினார். அப்போது அங்கே வேதசாட்சிகள் மரிக்கத் தொடங்கினர். இங்கிருந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவதாயை காட்டுப்பகுதியூடாக தூக்கிச் சென்று, களைத்துவிட்டதால் அன்னையை இறக்கிவைத்து வழிபட்ட இடம்தான் இன்றைய மடுத்திருப்பதி.

### ஆயர், குருக்களின் பணிகள்

இம் மறைமாவட்டத்தின் வேதசாட்சிகளின் இரத்தத்தின்மேல் நின்று, எமது ஆயர் தந்தையும் குருக்கள் துறவிகளும் பாரிய ஆன்மீகப் பணிகளை பல சவால்களுக்கு மத்தியில் ஆற்றி வருகின்றனர். ஆரம்பத்தில் வேதகலாபனை, பின்னர் எமது உள்நாட்டு யுத்த சூழ்நிலை, தற்போது பிற மதத்தவர்களின் இழிவான செயல்கள் போன்றவற்றால் தற்போது பெரிதும் துன்பப்படுகின்றனர். இருந்தும் சோர்ந்துவிடவில்லை. சிலுவையை தூக்கிக் கொண்டு நடக்கின்றார்கள். ஆனால் உதவிபுரியும் சீமோன்களாக இன்று நாம் இல்லை. அழுது புலம்பும் மகளீராக இன்று நாம் இல்லை. முகம் துடைக்கும் வெரோணிக்காவாக இன்று நாம் இல்லை. ஆன்மீகப்பணி, சகப்பணி, கல்விப்பணி, காலணிப்பணி, மருத்துவப்பணி எனப் பல பணிகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

### தற்போதைய சூழ்நிலை என்ன? மாந்தையில் மறைக்காய்...

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்கர்களின் ஆன்மீக திருத்தலமாகிய மடுத்திருப்பதியின் பூர்வீக இடமாகிய மாந்தை லூர்து அன்னை திருத்தல சந்தியிலே இந்து சகோதரர்களால் சிவராத்திரியை முன்னிட்டு திட்டமிட்டு நிரந்தர அலங்கார வளைவு ஒன்று அமைக்கப்பட்டது. முதல் நாள் இது தொடர்பாக சமூகமாக கலந்துரையாடப்பட்டு, தற்காலிகமாக அமைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இருந்தும் சில இந்து விஷமிகள் வேண்டுமென குழப்பத்தை ஏற்படுத்த நிரந்தர வளைவை அமைத்தபோது, பேச்சுவார்த்தையில் பயனில்லை என்றதன்பின்னர் மக்களால் அது அங்கிருந்து ஒதுக்கப்பட்டது. இந்நிலையை திட்டமிட்டபடி அவர்கள் வீடியோ புகைப்படம் இந்துக்களுக்கு அநீதி நடக்கின்றது என்றவாறு மீடியா மூலம் பரப்பினர். நிலைமையைப் பார்வையிட்டு அமைதி நிலையை ஏற்படுத்திய குருவையும் தவறாகப் பயன்படுத்தி அவமானப்படுத்தி எள்ளி நகைத்தனர். இதை நல்லிணக்க அமைச்சர் அவர்கள் ஒருதலைப்பட்சமாக தனது அரசியல் இலாபத்திற்காக வாய்ப்பைப் பயன்படுத்தி இந்துக்களுக்காகக் குரல் கொடுப்பதாகவும், நாடகம் ஆடி வருகின்றார். உண்மையை அறியாத மக்கள் தவறாகவும் நினைத்துள்ளனர்.

எமது கத்தோலிக்கர்களும் கூட ஒரு சிலர் தவறான கருத்துக்களையும் வலையமைப்புக்களில் பகிர்ந்துமுள்ளனர். இவ்விடத்தில் தான் நாம் சிந்திக்க வேண்டும். உண்மையை அறிய வேண்டும். கத்தோலிக்க ஒற்றுமையைக் காட்ட வேண்டும். மறையின் சாட்சியத்தை உறுதிப்படுத்த வேண்டும். அன்று சங்கிலியன் காலத்தில் வேதசாட்சிகள் தோன்றியது இந்த மாந்தை மண்ணிலே. இன்றும் மறு உருவாக மீண்டும் வேத சாட்சிகளாக மக்கள் தோன்றியிருப்பதும் இந்த மாந்தை திருப்பூமியிலே.

### இந்துமத சகோதரர்களுக்குரிய அரசியல் பலம்

இந்துமத விவகார கௌரவ அமைச்சர் அவர்களும், இந்து பாராளுமன்ற உறுப்பினர்களாகிய சிவமோகன், விஜயகலா மகேஸ்வரன் போன்றோரும் பல கண்டன அறிக்கைகளையும், ஆவேச துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டார்கள். சட்ட நடவடிக்கைக்கு வழிகாட்டினார்கள். உடனடியாக உடைத்தவர்களைக் கைது செய்ய வேண்டும் என பொலிசாரை கட்டாயப்படுத்தினார்கள். இது மட்டுமா பாராளுமன்றத்திலே இப்பிரச்சனையை வெளிக்கொணர்ந்தார்கள். இந்துக்களுக்கு நீதி வேண்டும் என்றார்கள். ஒரு விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும் என்றார்கள்.

### கத்தோலிக்கர்களின் அரசியல் பலம்

பாராளுமன்றத்திலே எமது மறைமாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் இந்தப் பிரச்சனை தொடர்பாக எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை. கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. பாராளுமன்றத்தில் பதில் கருத்தை முன்வைக்கவில்லை. ஏன்? ஏன் மௌனம்? இதுதான் எமக்குரிய அரசியல் பலம். இலங்கையில் ஒரு கத்தோலிக்க அரசியல்வாதி கூட இல்லைபோல் தெரிகின்றது. அப்படியென்றால் நாம் என்ன செய்ய வேண்டும். சிந்தித்து அரசியல் பலத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

### எதிர்கால செயற்பாடு என்ன?

தற்போதைய விசுவாசத்திற்கு எதிரான இந்த சம்பவமானது நீதிமன்றத்தில் வழக்காக காணப்படுகின்றது. யூன் 28ஆம் திகதி அடுத்த தவணை இடப்பட்டுள்ளது. கத்தாத செம்மறிபோல் ஒரு குருவும், மறைக்குல மக்களும் நீதி மன்றத்தில் காணப்படுகின்றனர். எமது பங்களிப்பு என்ன?

### இத்துடன் நிறைவடையுமா? நீதி எங்கே?

தற்போதுதான் 2வது வேதகலாபனை மாந்தையில் தொடங்கியுள்ளது. இன்னும் எந்தெந்த இடங்களில் என்னென்ன வடிவங்களில் வரப்போகின்றதோ தெரியவில்லை. நாம் விழிப்பாயிருக்க வேண்டிய காலகட்டம் இது.

வீதிகளிலும், சந்திகளிலும் சைவ சிலைகளை இரவில் வைக்கின்றார்கள். மறுநாள் இரவில் அதை அவர்களே உடைக்கின்றார்கள். உடைத்ததைக் காரணம் காட்டிவிட்டு அந்த இடத்தில் இந்துக் கோயிலை மெல்ல மெல்ல கட்டத் தொடங்குகின்றார்கள். இதுதான் அவர்களின் தற்போதைய காய்நகர்த்தல். மாவட்ட பிரதேச செயலகங்கள், நகர பிரதேச சபைகள், RDA , RDD உள்ளிட்ட சகல அரச திணைக்கள தலைமைகள் யாவும் அவர்களின் பக்கம் செல்வாக்குச் செலுத்துகின்றது. காரணம் தலைமைப் பதவியில் இருப்பவர்கள் இந்துக்கள் இவர்கள் நீதியாக நடப்பதில்லை.

மன்னார் பொலிஸ் திணைக்களமானது ஒருபக்கச் சார்பாகக் கத்தோலிக்கர்களை மட்டும் விசாரித்தார்கள். குருவை விசாரித்தார்கள், கைது செய்தார்கள், நீதிமன்றில் ஒப்படைத்தார்கள், வழக்கு பதிவு செய்தார்கள். ஆனால் கத்தோலிக்கர்களால், பலாத்காரமாக வளைவை இந்துக்கள் நாட்டினார்கள் என செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரிக்கவில்லை, அவர்களைக் கைது செய்யவில்லை, வழக்குத் தொடுக்க வில்லை ஏன்? இதுதான் பக்கச்சார்பு. இப்பொழுது சிந்தியுங்கள். நாம் எங்கே நிற்கின்றோம் என்று. நீதி எங்கே? நட்டினபடியால்தானே பிடுங்கினார்கள். பிடுங்கியது குற்றம் என்றால் லூர்துகெபிக்கு முன்னால் பலாத்காரமாக நட்டியது குற்றமில்லையா?

### இணையத்தள வலையமைப்புக்கள்

இணையத்தள வலையமைப்புக்கள் யாவும் இந்துக்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. தங்களுக்கு சாதகமான செய்திகளை மட்டும் வெளியிடுகின்றனர். பிராந்திய செய்தியாளர்கள் கொடுக்கும் உண்மையான தகவலை பிரசுரிக்க மறுக்கின்றனர். இதுதான் மீடியாவா? அப்படியென்றால் யார் உண்மையை வெளிக் கொணர்வது? பத்திரிகைகள் யாவும் இந்துக்களின் கட்டுப்பாட்டில். இதுதான் இன்றைய பத்திரிகை சுதந்திரம்.

➡ 14

# தொழிலாளர்களின் பாதுகாவலராய் புனித யோசேப்பு

– யே. ஜெலீத்சின் சார்லஸ், தேசிய குருத்துவக்கல்லூரி, கண்டி –

இறைவார்த்தை பல நபர்களை 'யோசேப்பு' எனும் பெயரிலே எமக்கு இனம் காட்டுகின்றது. அவர்களுள் முதன்மையானோர்.
1. யாக்கோப்பின் புதல்வரான யோசேப்பு (தொ.நூல் 30.24)
2. அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு, இவர் இயேசுவின் சீடராய் இருந்தவர். இவரே பிலாத்திடம் அனுமதி பெற்று இயேசுவின் திருவுடலை தமக்கென பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் வைத்தார்.
(மத். 27, 57-61)

ஆனால் நாம் தொழிலாளர்களின் பாதுகாவலராய் திருநாமம் சூட்டிய புனித யோசேப்பு மரியாவின் கணவரும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையுமாக மீட்பு வரலாற்றிலே வலம் வந்தார். திருவழிபாட்டுக் கால அட்டவணையிலே நாம் புனித யோசேப்புக்கு இரண்டு முக்கிய விழாக்களை இரண்டு காரணங்களின் அடிப்படையில் கொண்டாடுகின்றோம்.
1. பங்குனி 19 – மரியாவின் கணவர் யோசேப்பு
2. மே 01 – தொழிலாளர்களின் பாதுகாவலராம் புனித யோசேப்பு

இந்த இரண்டு பெருவிழாக்களிலே நாம் பெரிதும் புனித யோசேப்பை நினைவு கூறுவது மரியாவின் கணவராக, ஆனால் நாம் அதிகம் அவரைப்பற்றிப் பேசாது விடுவது அவர் ஒரு தொழிலாளர்களின் பாதுகாவலர் என்பதை இருப்பினும் புனித யோசேப்பு இன்று பல்வேறுபட்ட நாமங்களினால் புகழ்ந்தேற்றப் படுகின்றார். 1870ஆம் ஆண்டு பாப்பரசர் 9ஆம் பத்திநாதர் இவரை அகில உலகத் திருச்சபையின் பாதுகாவலராக நியமித்தார். அது மட்டுமல்லாது புனித யோசேப்பு மரணத் தருவாயில் இருப்பவர்களின் பாதுகாவலராகவும் அவர்கள் நல் மரணமடைய துணை நிற்பவராகவும் திகழ்கின்றார். 1955ஆம் ஆண்டு பாப்பரசர் 12ஆம் பத்திநாதர் தொழிலாளர்களின் மாண்பும், மதிப்பும் பாதுகாக்கப்படவும் தொழிலின் மேன்மையும், மகத்துவமும் உயர்வடையவும் புனித யோசேப்பை தொழிலாளர்களின் பாதுகாவலராக பிரகடனப்படுத்தினார். புனித யோசேப்பு தொழிலாளர்களின் பாதுகாவலர் எனும் கூற்றின் விவிலியப் பின்னணியை நோக்குகையில், மத் 13,55இல் கூறப்படுவது போல் இவர் தச்சனின் மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர் தானே? யாக்கோபு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? என இயேசுவை, தந்தை யோசேப்பை ஆதாரப்படுத்து இனம் காண்பதை பார்க்கின்றோம்.

மேலும் கிரேக்க மொழி பெயர்ப்புச் சொல்லான tekton or tektoness புனித யோசேப்பை ஒரு கைவினைஞனாக விஸ்தரித்துக் காட்டுகின்றது. பாரம்பரியம் கூறுவதுபோல் புனித யோசேப்பு கலிலேயா எங்கிலும் சுற்றித்திரிந்து மக்களுக்குத் தேவையான அனைத்து வேலைகளையும் ஒரு சேவையாகவும், ஒரு தொழிலாகவும் செய்து வந்தார். சிறப்பாக கதவுகளை, வீட்டு நிலைகளை சரிபார்ப்பதும் தனது தச்சுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஆற்றக்கூடிய எல்லா வேலைகளையும் செய்து வந்தார். அதனால்தான் கலிலேயாவிலே மக்கள் எல்லோரும் அவரை நன்றாக அறிந்திருந்தார்கள். இவர் ஒரு தாழ்ச்சியான, ஏழ்மையான ஒரு மனிதராக அன்றைய சமுதாயத்திலே திகழ்ந்தார். இதனால்தான் இவருடைய வளர்ப்பு மகனான இயேசு இவ்வாறு ஞானத்தோடும், வல்லமையோடும் பேசியபோது சாதாரண யோசேப்பின் மகனை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

## யார் இந்த யோசேப்பு?

திருச்சபையின் பாரம்பரியத்திலோ அல்லது திருவிவிலியத்திலோ புனித யோசேப்பு பேசியதாக எந்த ஒரு வாய்மொழி வார்த்தையும் கூறப்படவில்லை. அதற்கான ஆதாரமும் இல்லை. கடவுளின் மீட்புத் திட்டத்திலே தன்னுடைய ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பி இறைகுலத்தை மீட்க கடவுள் தேர்ந்து கொண்ட கருவியாகவும் அதற்குத் தன்னை அர்ப்பணித்தவராகவும், விளங்கும் புனித யோசேப்பு எவ்வித வார்த்தையும் பேசவில்லை எனும் போது ஆச்சரியம் அளிக்கின்றது. எனினும் இவரது அமைதியும், தாழ்ச்சியும் கடவுளின் திட்டத்திற்கு தன்னைக் கொடுத்த உயர்ந்த அர்ப்பணமும் மெய்சிலிர்க்க வைக்கின்றது. எனவே, யார் இந்த யோசேப்பு, எனும் வினாவிற்கு விவிலியத்தின் பல்வேறு கோணங்களிலிருந்தும் விடை தேடுவோம்.



## இயேசுவும் யோசேப்பும்

இயேசுவினுடைய வாழ்விலே புனித யோசேப்பு முன்மாதிரிகையாய் உதாரணமாய் திகழ்ந்தார். தாவீதின் வழிமரபிலே பலர் இருந்தும் (லூக் 2:4-5) கடவுள் அவரது இறைத் திட்டப்பணிக்காய் புனித யோசேப்பை தெரிந்தெடுத்தார் என்றால் இவருடைய முன்மாதிரிகையான வாழ்வேயன்றி வேறெதுவும் இல்லை. தங்களுடைய ஒரே மகனை யோசேப்பினுடைய பாதுகாவலிலும், வழிநடத்தலிலும் கொடுக்கும் அளவிற்கு தந்தை அவரிலே நம்பிக்கை கொண்டிருந்தார். இயேசுவினுடைய பிறப்பிலே இருந்த கசப்பான அனுபவங்களை நன்கு அறிந்த தந்தை அப்பொறுப்பை இவரிடம் ஒப்படைத்தார்.

இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்த கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். (லூக். 2: 52) இந்த வளர்ச்சியிலே மிக முக்கிய கருவியாய் திகழ்ந்தவர் யோசேப்பு ஆவார். திருச்சபையினுடைய பாரம்பரியத்தின்படி இயேசு தனது பணி வாழ்வை ஆரம்பித்தபோது புனித யோசேப்பு அவரோடு இருக்கவில்லை. ஆனால் அவரது நினைவுகள், வாழ்வின் பாடம் இயேசுவின் பணிவாழ்விலே நன்கு பிரதிபலிக்கின்றது. இயேசு எவ்வாறு தனது வாழ்வாலும், வளர்ச்சியாலும் எமக்கு முன்மாரிகையாக திகழ்ந்தாரோ அவ்வாறே யோசேப்பும் தனது வாழ்வால் எமக்கு படிப்பினை புகட்டுகின்றார்.

## புனித யோசேப்பு – அமைதியானவர்

திருவிவிலியமோ அல்லது திருச்சபையின் பாரம்பரியமோ அவரைப் பற்றி எந்தவொரு சான்றினையும் எடுத்துக் கூறவில்லை. இவருடைய வாழ்வு, இவருடைய இறப்பு, இவரது அடக்கம் எப்படி என எவ்வித ஆதாரப்படிமமும் உறுதியாக இல்லை. காரணம் இவர் அப்போதும் அமைதியானவராய் இருந்ததே என விவிலிய ஆய்வாளர்கள் சான்று பகர்கின்றார்கள்.

**இவர்கள் கூடிவாழும் முன்னே மரியாள் கருவுற்றிருந்தார்** (லூக் 1:18) என்ற குழப்பமான செய்தியை அறிந்தும் அவர் அமைதியாக சிந்தித்து கனவினால் விடை தேடியவர் என விவிலியம் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. (மத்.1:20) வானதூதர் அவருக்கு பல வேளைகளில் கடவுளின் திட்டத்தை வெளிப்படுத்தினார். அவ்வப்போதெல்லாம் அமைந்த உள்ளத்தோடு இறைத்திட்டத்தை செவிகொடுத்து அத்திட்டத்திற்கு தன்னையே கையளித்தார். அமைதியை வாழ்வின் அதி உன்னத பண்பாக கொண்டு வாழ்ந்தார்.

## புனித யோசேப்பு – தாழ்ச்சியானவர்

யூத மரபின்படி திருமண ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் திருமண உறவு கொள்ளலாம். ஒப்பந்தம் செய்யப்பட்ட பெண், சில காரணங்களினால் தனது பெற்றோரோடு இருந்தாலும் கூட தனது வருங்கால கணவருக்கே சொந்தம் எனும் மரபு இருந்தது. திருமண ஒப்பந்தம் செய்திருந்த நிலையில் மரியாள் கருவுற்றிருந்தது இவருக்கு பெரிதும் குழப்பத்தை ஏற்படுத்தினாலும் கடவுளின் திட்டத்திற்கு தன்னையே தாழ்த்திக்கொண்டு அவர் திட்டம் நிறைவேற தன்னை கையளித்தார். மேலும் குழந்தையையும், தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்திற்குச் செல் (லூக். 2:13) நான் உனக்குச் சொல்லும் வரை அங்கேயே தங்கியிரு என கனவில் எச்சரித்தபோது இவர் நிறைமாதக்கர்ப்பிணியான மரியாவை (திருச்சபையின் பாரம்பரியத்தின்படி மரியாள் அண்ணளவாக 8¾ மாத நிறை கர்ப்பிணியாவார்) கூட்டிக் கொண்டு அன்றிரவே எகிப்திற்கு விரைந்தார் என விவிலியம் கூறுகின்றது. (லூக். 2:14) புனித யோசேப்புக்கு பல சந்தர்ப்பங்களிலே ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. 'குழந்தையைக் கொல்ல சதி திட்டம் தீட்டியிருக்கிறார்கள். எழுந்து எகிப்திற்குச் செல் (லூக் 2: 13-14) என்று சொன்ன போதும் மீண்டும் எகிப்திலிருந்து புறப்பட்டு இஸ்ராயேலுக்குச் செல் (லூக். 2:20) என்று உரைத்தபோது அங்கிருந்து கலிலேயா பகுதிக்குச் செர்லுமாறு வாய் மொழிந்தபோதும் (லூக் 2:22) எந்தவொரு கேள்வியும் எழுப்பாது கடவுளின் திட்டத்திற்கு தன்னை தாழ்ச்சியோடு கையளித்தார். இவ்வாறு தாழ்மையின் உறைவிடமாய் தாழ்ச்சி எனும் புண்ணியத்தை எமக்கு படிப்பிக்கின்றார்.

## புனித யோசேப்பு – நேர்மையாளர்

திருவிவிலியம் புனித யோசேப்பு யார்? எனும் கேள்விக்கு தரக்கூடிய ஒரேயொரு பதில் அவர் ஒரு நேர்மையாளர் (லூக் 1:19) புனித இரண்டாம் அருள் சின்னப்பர் 'மீட்பரின் பாதுகாவலர்' எனும் திருத்தூது திருமடலிலே புனித யோசேப்பு ஒரு நேர்மையாளர் என்னும் அவர் தூய்மையின் உறைவிடம் என்றும் எடுத்தியம்புகின்றார். ஒரு பெண் கூடிவாழும் முன் கருவுற்றால் அவர் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்பது யூத சட்டம் (இணை 22:23-24) மரியாளும் உலகத்தின் பார்வையில் பாவிப் பெண்ணாக கருதப்பட வேண்டியவர் ஆயினும் இறைவார்த்தை சொல்லுகின்றது (லூக் 1:19) 'அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர் அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார்? பெண்களை மதிக்கவும் சிறப்பாக அன்னை மரியாளுக்கு இழிவு வராமல் அவரை பாதுகாக்கவும் மனதிலே சித்தம் கொண்டிருந்தார்.

இவர் நேர்மையாளராய் தாழ்ச்சியானவராய் அமைதியின் உறைவிடமாய் இருந்ததாலேயே கடவுள் தனது கருவியாகவும் இறை மீட்புத் திட்டத்தின் ஒரு முக்கிய நபராகவும் தெரிந்தெடுத்தார். எனவே தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பு நமக்கு விடுக்கும் செய்தி யாதெனில் ஒவ்வொரு தொழிலாளியும் தாழ்ச்சி உள்ளம் கொண்டவராய் நேர்மையானவராய் அமைதியானவராய் வாழ வேண்டும். வளர வேண்டும்.

எமது சமுதாயத்திலே இன்று தொழிலை தராதரம் போட்டு வகைப்படுத்தி உயர்ந்தது, தாழ்ந்தது, நல்லது கெட்டது எனப் பல வேறுபாடுகளின் அடிப்படையில் தொழிலை இனம் காண்கின்றான் மனிதன். சமுதாயத்தினது நம் மக்களின் நலனுக்காகவும் நாம் செய்யும் எல்லா தொழிலுமே புனிதமானவையே, அவை சாதாரண கூலி தொழிலாக இருக்கலாம் அல்லது பட்டம் பதவிகள் கொண்ட உயர் பதவியாக இருக்கலாம். எல்லாம் கடவுளின் பார்வையில் புனிதமானவையே. ஆகவே இன்று நாமும் உண்மை தொழிலின் மாண்பினை உணரவும் எமது தந்தையின் திட்டங்களுக்கு எமது வாழ்விலே செயல் வடிவம் கொடுக்கவும் அழைக்கப்படுகின்றோம்.

தூய்மையோடும், நேர்மையோடும் உழைப்பவன் ஒவ்வொருவனும் சமுதாயத்திற்காக தன்னையே அர்ப்பணித்தவன். அவனது மாண்பும் மகத்துவமும் போற்றப்பட வேண்டும். புகழப்பட வேண்டும். புனித யோசேப்பின் அருளும், ஆசீரும் எல்லா உழைப்பாளர்கள் மேலும் தங்குவதாக. ●

**புதிய அலுவலக விலாசம்:**
மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202,
தலைமன்னார் வீதி, மன்னார்.



# மே தினத்தின் மகிமை!

"உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்! இழப்பதற்கு ஒன்றுமில்லை, பெறுவதற்கோ ஒரு உலகம் இருக்கின்றது!" என்ற கோசத்துடன் தொழிலாளர்கள் ஒன்றிணைகின்ற நாள் மே தினம்!

## மே தினத்தின் வரலாறு

தொழிலாளர்கள் வேலைசெய்யும் இயந்திரங்களாகக் கருதப்பட்டு, அவர்களின் உரிமைகள் உணர்வுகள் அடக்கி ஒடுக்கப்பட்ட சூழ்நிலையில்தான் தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்டும் நோக்கோடு மே தினம் உருவாக்கப்பட்டது.

மே தினம் பல வரலாற்றுக் கட்டங்களைக் கடந்து, பரிணாம வளர்ச்சிபெற்று இன்றைய நிலையை அடைந்துள்ளது. பல நூற்றாண்டுகாலப் போராட்டத்தின்பின், தமது உரிமைகளுக்காகக் குரல்கொடுத்துப் போராட்டங்களை நடத்தி பல தொழிலாளர்கள் உயிரிழந்த சூழ்நிலையில் 1889ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் இடம்பெற்ற 2வது சர்வதேச தொழிலாளர் காங்கிரஸ் கூட்டத்தில் இந்த மே தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

வேலை நேரம் 17 மணியிலிருந்து 8 மணி நேரமாக்கப்பட்டது. 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு 8 மணி நேரம் உறக்கம் என்ற நிலை வந்தது. இதன்பின்னர் பல நாடுகள் படிப்படியாக இத்தினத்தை தொழிலாளர் தினமாகக் கொண்டாடத் தொடங்கின.

## மே தினமும் புனித சூசையப்பரும்

மே தினத்திலே தொழிலாளரான சூசையப்பருக்கு விழா எடுக்கும்படி திருச்சபை நமக்குப் பணித்திருக்கின்றது. கடவுளை ஏற்றுக்கொள்ளாத நாத்திகப் பொதுவுடமையாளர்கள்தான் மே தினத்தை தொழிலாளர்களின் நலனுக்கென்று முதன் முதலாக உருவாக்கினார்கள்.

இந்த மே தினத்திற்கு முறையான, முழுமையான அர்த்தம் கிடைக்கும் வகையில் பாப்பரசர் 12ஆம் பத்திநாதர் 1955ஆம் ஆண்டு ஓர் ஆணை பிறப்பித்தார். அதாவது 'தொழிலாளரான புனித சூசையப்பர்' திருநாளை மே மாதம் முதலாம் திகதி உலகம் முழுவதும் கொண்டாட வேண்டும் என அவர் பணித்தார்.

## தொழிலின் மேன்மை

புனித சூசையப்பரை தொழிலாளராகக் கண்டு விழா எடுக்கும் மே தினத்தில் நாம் தொழிலின் மேன்மையை, மகத்துவத்தை, சிறப்பைப்பற்றி திருவிவிலியத்தின் ஒளியில் சிந்திப்பது பொருத்தமானதாகும். கடவுளை ஒரு தொழிலாளியாகத்தான் திருவிவிலியம் காட்டுகின்றது. கடவுள் ஆறு நாட்கள் படைப்புத் தொழிலில் ஈடுபட்டு ஏழாம் நாளில் ஓய்வெடுத்தார் என்று தொடக்கநூலில் நாம் வாசிக்கின்றோம்.

இயேசு தனது சொந்த ஊரான நசரேத்துக்கு வந்து தொழுகைக்கூடத்தில் கற்பித்தபோது இயேசுவை ஒரு தொழிலாளியின் மகனாகவே அவருடைய ஊர் மக்கள் பார்த்தார்கள். தனது 30 வயது வரை அவர் தந்தையின் தச்சுத்தொழிலில் உதவி செய்தார். இயேசு தனது பகிரங்கப் பணிவாழ்வில் அயராது உழைத்தார், ஓய்வின்றி உழைத்தார்.

## மே தினத்தின் இன்றை நிலை!

இன்று மே தினத்தின் இலட்சியம், நோக்கம் என்பன சிதைவுற்று மே தினத்தின் புனிதத் தன்மையும், அர்த்தமும் மறக்கப்பட்டு வெறும் கொண்டாட்டங்களாகவே மேதினம் மாறிவிட்டது. இன்று மே தினத்தின் வரலாறும், நோக்கமும் அர்த்தமும்பற்றிப் பேசப்படுவதில்லை, தொழிலாளர் தினமான மே தினத்தில் தொழிலாளர்களின் பிரச்சினைகள், உரிமைகள் பற்றிப் பேசப்படுவதில்லை. மாறாக அரசியல் கட்சிகளின் பிரசாரமும், தொழிற்சங்கங்களின் பிரசாரமுமே மே தினத்தில் இடம்பெறுகின்றன.

தொழிலாளர் தினமான மே தினத்தில் தொழிலாளர் நலன், தொழிலின் மகத்துவம் முன்னிறுத்தப்பட வேண்டும். மே தினத்தின் மகிமையை நாம் மீளவும் மீட்டெடுப்பது எப்போது? ●

# கலை இலக்கியச் சாரளம்

# கவிதைக் களம்

## பென்ஜமின் சோமநாதர் கவிதைகள்

### ஓட்டுனரே ஒருகணம் சிந்திப்பீர்.

வாகன ஓட்டுனரே,
வீதி விதிகளை மீறாதீர்,
விபத்து வந்த பின் வருந்தாதீர்,
வருமுன் காத்திடுவீர்.

மது போதையில் மதி இழந்து,
மனிதர் மேல் மோதாதீர்,
மனித நேயம் மறவாதீர்,
மறந்தேனும் மது அருந்தாதீர்.



தூக்கத்தில் தடுமாறி,
தாறுமாறாய் ஓட்டாதீர்,
மனித உயிரின் பெறுமதி உணர்ந்திடுவீர்
அதனை அறிந்திடுவீர்.

அலை பேசியில் கதை பேசி,
அவதானம் இழந்து,
ஆபத்தில் அகப்படாதீர்,
வீண் விபத்தை விலை கொடுத்து
வாங்காதீர்.

முந்தி ஓட்ட முற்படாதீர்,
உயிர் வாழ்வுடன் விளையாடாதீர்.
விபத்து வந்த பின் வருந்தாதீர்.
வேகம் தவிர்ப்பீர்
விவேகமாய் ஓட்டுவீர்.



நீவீர் நிதானமாய்
வாகனம் ஓட்டுவீர்,
விபத்து வராமல் காத்திடுவீர்,
பாதையில் பல உயிர்களைப்
பொறுப்புடன் பாதுகாத்திடுவீர்.



### மாற்றுத் திறனாளிகளும் மனிதர்களே


மாற்றுத் திறனாளிகளும்
மனிதர்களே, அவர்களை ஏற்றுக்கொள்வது
எம் மனித நேயமே, அவர் தம் உள்ளத்தில்
ஊற்றெடுக்கும் உணர்வலைகளை
எம் உள்ளத்தில் உள் வாங்குவோம்.

மனந்திறந்து பேச முடியாத,
கண் திறந்து காண முடியாத,
செவி கொடுத்துக் கேட்க முடியாத,
கை, கால் இயங்க முடியாத,
மன நலம் இழந்த இவர்களும் மனிதர்களே.

பார்வையிழந்தவரை,
பேச்சிழந்தவரை, கேட்கமுடியாதவரை,
கை, கால் இழந்தவரை மன நலம் இழந்தவரை,
மதிக்கவில்லை எனில்,
நம் திறமைக்கு என்ன பெருமை?
மாற்றுத்திறனாளிகள்,
வாழ்வில் மாற்றம் காண உன்னத
ஏற்றம் காண, உதவிடுவோம். உழைத்திடுவோம்.

எம்மனக்கண்களை அகலத்திறப்போம்,
அன்புக்கரங்களை அகல விரிப்போம்,
அவர் தம் வாழ்வில் ஏற்றம் காண
உதவுவோம், ஆடம்பரம் தவிர்த்து
அமைதியில் அழுகின்ற
அவர் தம் குறைகள் களைந்திடுவோம்.
கரம் கொடுத்து, கருணை காட்டுவோம்.

இறைவனுக்கும் அயலவருக்கும்
அன்புப்பணி புரிந்திடுவோம்,
அமைதியின் தூதர்களாய் என்றும்
வாழ்ந்திடுவோம்.



### கல்வி



கல்வி எனும் போர்க்களத்தில்
பேனா எனும் ஆயுதம் ஏந்தி
இரத்தமெனும் மை சிந்தி
அறிவு என்னும் வெற்றி பெறுவீர்.
கல்வி எனும் கிணற்றிலே
ஊற்றெடுக்கும் எம் கல்வி
அதைக் கற்கும் எம் அறிவு
பாடசாலையில் கற்பது எமது கல்வி
அதைக் கற்று முடிப்பது எம் அறிவு.

### கனவு

அரைத்தூக்க வேளையில்
அரங்கேறும் போலிகள்.
அரங்கச் செலவின்றித்
தோன்றும் நிகழ்வுகள்.
அழியும் உலகில்
மறையும் மாயங்கள்.

### வேதனை

சொல்லி வந்தது காதல்
சொல்லாமல் வந்தது பிரிவு.
காதல் வந்தபோது
கண்கள் தெரியவில்லை.
பிரிவு வந்தபோது
கண்ணீர் புரிகிறது.

### அர்த்தம்

'கண்ணும் கண்ணும்
கொள்ளை அடித்தால்
காதல் என்று அர்த்தம்'.
கண் கழுத்தை நோட்டமிட்டால்
கொள்ளை என்று அர்த்தம்.

## வெயிலை சமாளிப்பது எப்படி?



♦ பழங்களும், பச்சைக்காய்கறிகளும் அதிக அளவில் உணவில் சேர்க்க வேண்டியது மிகவும் முக்கியம். இவற்றிலுள்ள சத்துப்பொருட்களும், விட்டமின்களும் நமது உடலுக்கு நல்ல குளிர்ச்சியைத்தரும். அதுமட்டுமல்ல இதில் உள்ள நீர்ச்சத்தும் உடலுக்கு குளிர்மையை அளிக்கும். இவை நமது உடலில் உள்ள வெப்பத்தை வெளியேற்ற உதவும்.


♦ நிறைய தண்ணீர் குடியுங்கள். தாகமே இல்லையென்றாலும், நிறையத் தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

♦ வெயில் காலத்திற்கு முக்கியமான தாரகமந்திரம் குறைவாக சாப்பிட்டு நிறைவாக வாழுங்கள்.

♦ பழங்களில் ஸ்ட்ராபெரி, பப்பாளி, மாம்பழம், கீர்ணிப்பழம், தர்பூசணி, அப்பிள். காய்கறிகளில் பாகற்காய், கோஸ், கோலிப்ளவர், வெள்ளரிக்காய், பீன்ஸ், புதினா போன்றவற்றை அதிகம் சேர்த்துக்கொள்ளுங்கள்.

♦ அற்ககோல் உள்ள பானங்கள், சொப்ட் டிரிங்ஸ் குடிப்பதை தவிருங்கள், ப்ரெஷ் ஜூஸ் குடிக்கத் தொடங்குங்கள். மிகவும் குளிர்ச்சியாக பானம் அருந்துவதை தவிருங்கள். அவ்வாறு குடிப்பது அந்த நேரத்திற்கு குளிர்ச்சியை ஏற்படுத்தினாலும் உடல் நலத்துக்கு கெடுதலையே விளைவிக்கும்.

♦ லெமன் ஜூஸ், இளநீர் குடியுங்கள். "மோர் பெருக்கி நெய்யுருக்கி" என்பார்கள், நீர்த்த மோர் குடியுங்கள். சர்க்கரை அதிகம் சேர்த்துக்கொள்ளாதீர்கள். வடை, அப்பளம், சமோசா, சிப்ஸ், பஜ்ஜி போன்ற எண்ணெய் பண்டங்களையும் தவிருங்கள். சூடான, மசாலா உணவுப்பதார்த்தங்களை அறவே தவிருங்கள். உணவில் சாலட் அதிகம் சேர்த்துக்கொள்ளுங்கள்.



**பூதம் :** நண்பர்களே ஆளுக்கொரு வரம் கேளுங்கள்.
**தாமு :** ஒரு அறை முழுவதும் தங்கக்கட்டிகள் வேண்டும்.
**டிலை :** எனக்கு ஒரு அறை முழுவதும் பணம் வேண்டும்.
**ராமு :** எனக்கு அந்த இரண்டு அறைகளின் சாவி வேண்டும்

..........................

**மகன் :** சிரித்த முகம் உடையவளைத் திருமணம் செய்தவனுக்கும், அழுமூஞ்சியைத் திருமணம் செய்தவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
**அப்பா :** ஒருவனுக்கு நித்தமும் பௌர்ணமி, மற்றவனுக்கு நித்தமும் அமாவாசை.

..........................

**ரவி :** டேய் மச்சான். நரகங்கள் எல்லாம் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றதுபோல இருக்குது.
**குமார் :** எப்படியடா கண்டுபிடிச்சாய்...?
**ரவி :** பின்ன என்னடா, திருமணங்கள் எல்லாம் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுதாம் என்று நேற்றுத்தான் என்ர அப்பா சொன்னார்.

..........................

**கைதி 1 :** அட என்ன அநியாயம். தெருவில கிடந்த ஆறு முழம் கயிற்றை எடுத்ததென்றா உன்னைய ஆறு மாதம் சிறையில வைத்தாங்க...?
**கைதி 2 :** அந்தக் கயித்தின் மற்ற நுனியில ஒரு மாடெல்லா கட்டியிருந்தது ...!

**தாசன் :** எங்கே சுற்றுலா சென்றீர்கள்?
**சுமன் :** ரிங்கோவிற்கு (திருகோணமலை)
**தாசன் :** அங்க என்னென்ன பார்த்தீங்க?
**சுமன் :** மலைகள் பார்த்தோம்.
**தாசன் :** என்ன மலை?
**சுமன் :** ரிங்கோ மலை.

..........................

**நீதிபதி:** பார்த்தா அப்பாவியா தெரியிறாய்?
நீயா பிக்பொக்கெட்? நம்பவே முடியலையே?
**குற்றவாளி:** உங்களை மாதிரித்தாங்க எல்லோரும் ஏமாந்துடறாங்க...
**நீதிபதி:** ???

..................................

**மகன்:** அம்மா, உன்னை நினைச்சா எனக்கு ரொம்ப அழுகையா வருகுது.
**தாய்:** ஏனப்பா... என்னாச்சு?
**மகன்:** ஒரு நாள் தெரியாமல் மெகா சீரியல் பார்த்திட்டேன். அதைப் பார்த்ததால தற்கொலை செய்திடலாம்னு தோணிச்சு. ஆனா நீ தினமும் பார்க்கிறியே....?

## அழகுக் குறிப்புக்கள்

### சரும கருமையைப் போக்கும் வெந்தய பேஸ்பேக்



• வெந்தயம் சிறந்த கிளின்சராகவும் செயல்படும். தினமும் வெந்தயத்தை பால் சேர்த்து, பேஸ்ட் செய்து முகத்தில் தடவி மென்மையாக 15 நிமிடம் மசாஜ் செய்து பின் கழுவ வேண்டும். இதனைக் கொண்டு சருமத்தைப் பராமரித்தால் சருமத்துளைகளில் ஏற்பட்டுள்ள அடைப்புக்கள் அனைத்தும் நீங்கி சருமம் சுத்தமாக இருக்கும். இதனை தினமும் செய்து வரலாம்.

• வெந்தயத்தை நீரில் ஊற வைத்து பேஸ்ட் செய்து, பால் சேர்த்து கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனை வாரம் இருமுறை செய்து வரலாம். வெயில் காலத்தில் வெளியில் சென்று வந்தபின் இந்த பேஸ்பேக் போட்டுக் கொண்டால் சருமம் கருமை அடைவதைத் தடுக்கலாம்.

• வெந்தயப் பொடியை தயிர் சேர்த்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஊற வைத்து பின் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரிக்கும். ஆனால் வெந்தயம் குளிர்ச்சிமிக்கது என்பதால், சுவாச பிரச்சனைகள் இருப்பவர்கள் இதனை வாரம் 2 முறை போடுவது நல்லது.

• வெந்தயத்தைப் பொடி செய்து அதனை தேன் சேர்த்து கலந்து முகத்தில் தடவி ஸ்கரப் செய்து பின் கழுவ வேண்டும். பருக்கள் வருவது தடுக்கப்படும்.

பொலிவிழந்து காணப்படும் முகத்தை பொலிவாக்க நினைத்தால், வெந்தய ஃபேஸ் பேக் போடுங்கள். அதற்கு வெந்தயத்தை நீரில் ஊற வைத்து பேஸ்ட் செய்து, பால் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 10–15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

வெந்தயம் சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்கும். அதற்கு வெந்தயத்தை பொடி செய்து அதனை தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஸ்கரப் செய்து பின் கழுவ வேண்டும். இதனால் பருக்கள் வருவது தடுக்கப்படும்.

## மன்னா விளம்பரப் பலகை

"தவறான சிந்தனையைக் கொண்டவன் மன அமைதி இழந்தவனாக இருப்பான். உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டிருப்பவன் மன அமைதி மிக்கவனாக இருப்பான்"

"ஒன்று உன் தோல்வியை ஒப்புக்கொள். இல்லையேல் அடுத்தவனது வெற்றியையாவது ஒப்புக்கொள். அதுவும் இல்லையேல் நீ முட்டாள் என்று சொல்லுவதையாவது ஒப்புக்கொள்."

..................

"யாரும் கட்டாயப்படுத்தாதபோது தானாகவே எதிர் பாராமல் திடீர் என்று மலர்வதுதான் கருணை"

..................

"பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் உன்னை மற்றவர்களுக்குத் தெரியாது"

"உன்னையே நீ எண்ணிப்பார். உன் உயரத்தை உணர்ந்து செயற்படு. பறப்பதை நினைத்து இருப்பதை இழக்காதே"

..................

"காண்பவை எல்லாம் கனவாகாது, நினைப்பவை எல்லாம் நிஜமாகாது, நடப்பவை எல்லாம் நனவாகாது"

..................

"குழந்தை பிறக்கும்போது குழந்தை அழுகின்றது. சுற்றி நிற்பவர்கள் மகிழ்கின்றார்கள். குழந்தை இறக்கும்போது குழந்தை மகிழ்கின்றது, சுற்றி நிற்பவர்கள் அழுகின்றார்கள்"

"உன் நினைவு உன்னை வாழவைத்து பிறரை சாகடிக்குமானால் நீ உன் நினைவை மறப்பதே நலம்."

"மனச்சாட்சிக்கு அடங்கி நடந்தால் எளிதில் தீங்கு செய்ய முடியாது"

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.201

## நெகேமியா (அதிகாரம் 07 முதல் 13 முடிய)

உங்கள் விடைகளை யூன் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | ✡ | | | 04 | | | |
| | ✡ | | | 05 | | | 06 | | | |
| | 07 | | | | | 08 | 09 | | | |
| | | | 10 | | | | | | 11 | |
| | | 12 | | | 13 | | | | | 14 |
| 15 | | | | | | 16 | | | | |
| | 17 | | | ✡ | | | | | | 18 |
| | | | 19 | | | | | | 20 | |
| | | | | | | | | | | 21 |
| 22 | | 23 | | 24 | ✡ | 25 | | | | ✡ |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### இடமிருந்து வலம்

1. வெயில் ஏறும் வரை எருசலேமின் .............த் திறக்க வேண்டாம்.
3. அதை நாங்கள் உழைக்கும் ஒவ்வொரு நகரிலும் லேவியர் ................ செய்வர்.
4. ஏனெனில் ஆண்டவரின் ....................... உங்களது வலிமை (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
6. எனவே கடலின் நடுவே உலர்ந்த தரையில் அவர்கள் ............ போனார்கள் (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
7. அப்பொழுது அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்திருந்தவர்கள் .......................ப் பதிவேட்டைக் கண்டுபிடித்தேன்.
9. பணிந்து, முகங்குப்புற ................. ஆண்டவரைத் தொழுதார்கள்.
15. எஸ்ரா முதல்நாள் தொடங்கிக் ............ நாள்வரை கடவுளின் திருச்சட்ட நூலை உரக்க வாசித்தார்.
16. எருசலேமில் மனமுவந்து வாழ ...................... மனிதர்கள் அனைவரையும் மக்கள் வாழ்த்தினர். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
25. அனைத்து மக்களிடமும் அடையாளங்களையும், அருஞ்-செயல்களையும் .......................ச் செய்தீர்.

### மேலிருந்து கீழ்

1. வணங்காக் .................... அடிபணிய மறுத்தனர்.
2. ஆனால் அதனுள் ..............வந்த மக்கள் வெகுசிலரே.
5. கடவுளின் கோவிலுக்குக் கொண்டுவந்து கருவூல ..................... சேர்த்து வைக்கட்டும்.
8. ................. மகன் யோசுவாவின் காலத்திலிருந்து அன்றுவரை இஸ்ரயேல் மக்கள் இவ்விதம் செய்ததில்லை.
10. திருநூல் வல்லுநரான எஸ்ராவோ இதற்காகச் செய்யப்பட்ட ....................யின்மேல் நின்றுகொண்டிருந்தார்.
13. கடவுளின் மனிதர் தாவீது கொடுத்த கட்டளையின்படி புகழும் ...................... முறை முறையாகச் செலுத்தி வந்தனர்.
14. சாக்கு உடை அணிந்து ..................த் தங்கள்மேல் பூசிக்கொண்டு நோன்பிருக்குமாறு அம்மாதத்தின் இருபத்து நான்காம் நாளன்று மக்கள் ஒன்றுகூட்டப்பட்டனர்.
17. நீர் அவர்களைப் ................... மேகத்தூணினால் வழிநடத்தினீர்.
19. சூளைக் ................. மாடத்தைக் கடந்து அகன்ற மதில்வரை வந்தோம்.

### வலமிருந்து இடம்

2. எருசலேமில் .........................க் காவலராய் நியமியுங்கள்.
5. வானக ........................... உமக்கு அடிபணிகின்றன. (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
10. அவரைப்போன்ற .................. பல நாடுகளிலும் இருந்ததில்லையே (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
11. அவர்களுக்கு அறிவு புகட்ட உமது நல்ல ....................க் கொடுத்தீர்.
12. அப்பொழுது ........................ மாபெரும் கடவுளாகிய ஆண்டவரை வாழ்த்தினார்.
14. எனவே நீங்கள் அழுது ............................ வேண்டாம்.
18. உமது திருச்சட்டத்துக்குத் ....................... வர அவர்களை நீர் எச்சரித்தீர்.
20. அவர்களின் நாட்டிலும், அவர்களுக்குத் தந்துள்ள ................ செழிப்பான நிலத்திலும் அவர்கள் உமக்கு ஊழியம் செய்யவுமில்லை.
21. எதிரிகள் அவர்களை .................... ஆண்டார்கள்.

### கீழிருந்து மேல்

8. எல்லா மக்களும் திரு................ச் செவிகொடுத்தனர்.
13. ஏழாவது மாதம் வந்தபோது இஸ்ரயேல் மக்கள் அனைவரும் தம் ....................... இருந்தார்கள்.
14. ஆதலால் மக்களும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் ............... கொண்டனர். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
16. அவர்களின் ...................யில் அந்நாட்டின் மக்களான கானானியரை அடக்கினீர். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குக் கீழே உள்ளது)
22. இஸ்ரயேல் இனத்தார் வேற்றினத்தாரிடமிருந்து ................ நின்றனர்.
23. உமது ......................... அவர்களுக்கு உண்ணக்கொடுக்க நீர் மறுக்கவில்லை.
24. கடவுளுக்குரிய .........................ப் பாடல்களும் நன்றிப்பாடல்களும் இருந்தன.
25. அவர்களுக்கு ......................த் தலைவர்களைத் தந்து அவர்களின் எதிரிகளிடமிருந்து விடுவித்தீர்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 199 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
T. தினோசன் லெம்பேட்,
மாவிலங்கேணி,
அளவக்கை.



**இரண்டாம் பரிசு:**
தேவிகா பத்மராஜா,
மடுமாதா வீதி, பெற்றா,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
வெ. லொலிற்றா பறுனாந்து,
8ம் வட்டாரம்,
பேசாலை.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 63 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 199ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ச. ஜெயா, எழுத்தூர், மன்னார்.
2. செ. அஞ்சலா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
3. புஸ்பாசேவியர், இல: 58/6, மத்தியவீதி, திருகோணமலை
4. S. ஜெசிக்கா, காகல்ல ஹப்புத்தளை.
5. ஜீவரெட்ணம் யசிக்கா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
6. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
7. ச. அபிஷேக், எழுத்தூர், மன்னார்.
8. கி. கில்மா ஜெஷானிக்கா, ஜோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
9. றபேக்கா பற்றிக் (ஜடா) சின்னக்கடை, மன்னார்.
10. கி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
11. ச. துவாரகா, எழுத்தூர், மன்னார்.
12. செல்வரெட்ணம் றோசா, 8ம் வட்டாரம், பேசாலை.
13. J. ஸ்தேவா, சவேரியார்புரம், சிலாவத்துறை.
14. செல்வரெட்ணம் ஆரோக்கிய சீலி, பேசாலை.
15. L.M. அலெக்ஷியா பிகிறாடோ, பள்ளிமுனை கிழக்கு.
16. ரா. ஜொனா கிறிஷ் குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
17. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
18. அ. கெலன் கிறிஸ்ரா, ஜோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
19. பி. பிறின்சி லியோன், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
20. அ. ஜெய்சி கிறிஸ்ரா, தோட்டவெளி, மன்னார்.
21. B. நிஷாந்தினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
22. நிதர்சினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
23. வ. றொணி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
24. பி. பிறின்சி லியோன், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
25. வயலட்யோண், இல:843, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
26. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
27. பா. தர்சினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
28. மை. எரிக்ஷன், மோட்டைக்கடை, நானாட்டான்.
29. வ. கெலன் தர்ஷிகா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
30. நி. யாழிசன், யோசப்வாஸ் வீதி, குடியிருப்பு, செட்டிகுளம்.
31. ச. மரிய கொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை.
32. T. சயுறன் லெம்பேட், மாவிலங்கேணி, அளவக்கை.
33. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
34. F. ஆனந்தறாணி, கொழும்பு.
35. ஜெ. ருவந்தி பொன்தீவுகண்டல், முருங்கன்.
36. சகாயறாஜன் டவுசன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
37. செ. றெஜிராஜன் சாளம்பன், ஆண்டான்குளம்.
38. ம.ஜோ. பிரகாஷ் றோச், பள்ளிமுனை, மன்னார்.
39. அ. சாமினி, பாசையூர், யாழ்ப்பாணம்.
40. கெ. சுகந்தினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
41. ச. செலஸ்ரினா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
42. மா. லில்லி, பெற்றா, மன்னார்.
43. A. அன்ஸ்லின், சவேரியார்புரம், சிலாவத்துறை.
44. கெ. யன்சன், பொன்தீவுகண்டல், முருங்கன்.
45. S. றெமோனா பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
46. R. மக்சி மிலன், சாளம்பன், ஆண்டான்குளம்.
47. லிசன் அக்ஷயன், அச்சங்குளம், நானாட்டான்.
48. நி. நியோவின் பறுனாந்து, முத்தரிப்புத்துறை கிழக்கு.
49. ஜின்போள் லக்மினி குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
50. மை. எரிக்ஷா மோட்டைக்கடை, நானாட்டான்.

## கத்தோலிக்க....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

### மாவட்டப் பற்று எங்கே?

இந்துக்கள் மத்தியில் இன்று முன்னிற்பது யாவரும் வெளிமாவட்டத்தினர். மன்னார் மாவட்டத்தில் வந்து தங்கள் வயிற்றைக்காக்க பிழைப்புத் தேடியவர்கள். இன்று மதம் சார்பாகக் கொடி தூக்கியுள்ளனர். மன்னாரிலே பிறந்து வளர்ந்த இந்துக்கள் யாவரும் ஒற்றுமையாகத்தான் உள்ளனர். அவர்களிடத்தில் பிளவு, சிந்தனை இல்லை. ஆகவே மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க சமூகமே நாம் எங்கே நிற்கின்றோம். பெரும்பான்மை இனமாகிய நாம் இன்று 2ஆம் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோமே! ஏன் என சிந்திக்கின்றோமா? எமக்கு மாவட்டப்பற்று, மறைப்பற்று இல்லையா?

### நாம் எடுக்க வேண்டிய தீர்மானங்கள்

மறைமாவட்ட கத்தோலிக்கர்கள் யாவரும் ஒன்றுதிரள வேண்டும், சகல ஆலய சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கிய கத்தோலிக்க மகா சபையை அமைக்க வேண்டும்., மக்கள் மத்தியில் ஞாயிறுதோறும் திருப்பலியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும், ஆயரின் தலைமையில் குருமுதல்வரின் நெறிப்படுத்தலில் சகல குருக்களும் இணைந்து இறைமக்களை வழிநடத்த வேண்டும், கிறிஸ்தவத்திற்குரிய இணையத்தள வலையமைப்புக்களை உடனடியாக ஏற்படுத்த வேண்டும், கிறிஸ்தவத்தை நிலை நாட்டக்கூடிய அரசியல் தலைமைத்துவத்தை ஏற்படுத்த வேண்டும், பொருத்தமான, தகுதியான அரசியல்வாதிகளை ஆயர், குருக்களின் வழிகாட்டலில் இறைமக்களுக்கு இனங்காட்ட வேண்டும், அடுத்த தேர்தலில் மறைக்குரிய விதத்தில் அரசியலில் போட்டியிட வேண்டும், மன்னார் மறைமாவட்டம், கத்தோலிக்க மறைமாவட்டம் என்ன எண்ணம் எல்லோர் மனதிலும் எந்நேரமும் இருக்க வேண்டும், கிறிஸ்தவ ஒற்றுமை வேண்டும். கிறு, சிறு இலாபத்திற்குரிய பிளவு வேண்டாம்.● *- அலசல் தொடரும் -*

## உரோம்....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

புனித இலாத்தரன் பசிலிக்காவுக்கு அருகிலுள்ள ஆலயத்தில் அமைந்திருக்கின்ற இந்தப் புனிதப் படிகள் நானூறுக்கும் அதிகமான ஆண்டுகளுக்கு முன்னர் திருத்தந்தை 5ஆம் சிக்ஸ்துஸ் அவர்களால் பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டன. இந்தப் பளிங்குப் படிகள் திருப்பயணிகளால் மோசமடையத் தொடங்கியதையடுத்து 1724ஆம் ஆண்டில் இறை ஊழியர் திருத்தந்தை 13ஆம் பெனடிக்ட் அவர்கள் இப்படிகளை மரத்தால் மூடினார்.●

## வவுனியா....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

முதல் நாள் மன்னார் மதவாச்சி பிரதான வீதிவழியாகத் திருப்பயணிகள் பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத்தைச் சென்றடைந்து அன்றைய இரவுப் பொழுதை புனித அந்தோனியார் ஆலயத்தில் கழித்தனர். மறுநாள் 28ஆம் திகதி காலை 5.00 மணிக்கு இடம்பெற்ற வழிபாட்டினைத் தொடர்ந்து பெரியகட்டிலிருந்து, பெரியகட்டு கன்னாட்டி வீதி வழியாக மன்னார் வவனியா பிரதான வீதியை அடைந்து அங்கிருந்து வவுனியாவை நோக்கி தங்களது இரண்டாம் நாள் திருப்பயணத்தைத் தொடர்ந்தனர். இரண்டாம் நாள் மாலையில் வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தை வந்தடைந்து அன்றைய இரவுப் பொழுதை அங்கே கழித்தனர். மீண்டும் 29ஆம் திகதி காலை வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டினைத் தொடந்து கல்வாரித் திருத்தலம் நோக்கி திருப்பயணிகள் தங்கள் திருப்பயணத்தை ஆரம்பித்தனர்.

9ஆம் திகதி காலை கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்தை வந்தடைந்தனர். அதன்பின் திருச்சிலுவைப்பாதையும் அதனைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டே தலைமையில் திருப்பலியும் இடம் பெற்றது. பெருந்தொகையான இறைமக்கள் இத்திருப்பயணத்தில் பங்குகொண்டனர். மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகளிலிருந்தும், யாழ் மறைமாவட்டத்தின் சில பகுதிகளிலிருந்தும் திருப்பயணிகள் இந்தத் திருப்பயணத்தில் பங்கேற்றனர். திருப்பயணிகள் பணித்த வழிகளிலெல்லாம் பல பங்குகளும், அரச பணி மையங்களும், தனியார் நிறுவனங்களும், பாடசாலைகளும் உணவும், நீராகாரங்களும் வழங்கி திருப் பயணிகளுக்கு உதவியளித்தனர்.●

## பரிஸ் நகரின்....

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

எனினும் தீயினைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடி வருவதாகவும், சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உடனடியாக ஜனாதிபதி எமானுவல் மக்ரோன் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தேவாலயம் எரிந்து கொண்டிருப்பதைப் பார்ப்பது வேதனையளிக்கின்றது எனத் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார். தேவாலயத்தின் சிகரம் தற்போது மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருவதால், இந்த விபத்துக்கு அதுவும் காரணமாக இருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.●

## மனித வர்த்தகத்தை....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

### மனித வர்த்தகத்தை ஒழிப்பது முக்கியம்

மனிதர்கள் முழுமையையும், உயர்வையும் நோக்கி தங்கள் வாழ்வுப் பயணத்தை மேற்கொள்ள உதவிகள் செய்வதே திருஅவையின் முக்கியமான பணிகளில் ஒன்று என்று தன் உரையில் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இப்பணியின் மிக முக்கிய கடமை மனித வர்த்தகத்தை ஒழிப்பது என்று வலியுறுத்திக் கூறினார்.

குழப்பமானதொரு சூழலில் சிக்கியிருக்கும் இவ்வுலகத்தில் மனித வர்த்தகத்திலிருந்து வறியோரைக் காப்பதில் திருஅவை பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தாலும் இன்னும் நாம் ஆற்றவேண்டிய பணிகள் பல உள்ளன என்பதைத் தன் உரையின் இறுதியில் திருத்தந்தை சுட்டிக்காட்டினார். தன் குழந்தைப் பருவத்தில் ஓர் அடிமையாக விற்பனை செய்யப்பட்டு பின்னர் இறைவனின் அன்பு மகளாக மாறிய புனித ஜோசப்பின் பக்கித்தா அவர்களின் பரிந்துரையால் மனித வர்த்தகத்தை ஒழிக்க நாம் மேற்கொள்ளும் முயற்சிகளை இறைவன் ஆசீர்வதிப்பாராக என்ற வேண்டுதலோடு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையை நிறைவு செய்தார்.●

# நீங்காத நினைவுகள்

## 33ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 04 1942



உதிர்வு 02 04 1986


### திருமதி. சைனம்மா பிரான்சிஸ்
(பரிகாரிகண்டல், முருங்கன்)

காலம் எம்மைப்பிரித்து விட்டாலும்
கண்ணியமான வழிநடத்தலை மறக்கவே முடியாது
ஞானத்தில் இறை நம்பிக்கையையூட்டி
அதில் வளர்ந்துவர வலது கரமாயிருந்தீர்கள்.
ஆலயப் பணிகளிலே தயங்காது உழைக்க
குடும்பத்தாருக்கு அதி ஒத்தாசை புரிந்தீர்கள். பாலும் பழமும் பரிவோடு அமுதும் மோர் தயிரும் தந்து பிள்ளைகளை வளர்த்து நாலுபேரும் மதிக்க கல்வியறிவூட்டி கடவுள் நம்பிக்கையில் கடவுளிடம் சென்றுவிட்டீர் தாயே!
உங்கள் ஆன்மா சாந்தி அடைவதாக.

பிரிவால் நினைந்துருகும், குடும்பத்தார்.

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 06 1970



உதிர்வு 03 03 2014

### திரு. பி. மொத்தம் ராஜன்றிச்சேட்
(பரிகாரிகண்டல், முருங்கன்)

குணம் நிறைந்தவர் குடும்பத்தில் மூத்தமகன் குலவிளக்கு
மிதித்து நடக்கும் புல்லுக்கூட வாடாத தன்மையுள்ளவர்.
சனங்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்று வாழ்ந்ததால்
உங்கள் இறுதியாத்திரை சன வெள்ளத்தால் நிரம்பிவழிந்ததே!
தினந் தினம் உங்களை நினைத்து, நினைத்து வருந்துகின்றோம்.
தெளிந்த ஒளியாக எமது உள்ளங்களில் நிறைந்திருக்கின்றீர்கள்.
மனம் நிறைந்த இறைவனின் மன்னிப்பைப் பெற்று
அவர் மலரடியில் மகிழ்ச்சியாய் வாழ்வீர்களாக!
உங்கள் ஆன்ம சாந்திக்காக அல்லும் பகலும் இறைவனை
வேண்டுகின்றோம் சாந்தி பெறுக!

பிரிவால் நினைந்துருகும்;
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 28 10 1986



உதிர்வு 31 03 2019

### திரு. அ. கிளிற்றஸ் மைக்கல் அன்ரனி வாஸ்
(வங்காலை)

"திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கின்றோம் என்பது உங்களுக்குத் தெரியாதா?" (உரோ. 6:3)

இறை வார்த்தை தேடி அலைந்தாய் நீ!
வார்த்தையான இயேசுவினால் தொடப்பட்டு குணமானாய்
நீ வாழ்ந்த காலம் வரை எந்த நிலையிலும்
கரம்பிடித்து வழிநடத்திய இயேசுவுக்கு நன்றி.
இயேசுவைப் போல் நீ வாழ்ந்த 33 ஆண்டுகளும் இயேசுவைப் போல் நின் உடல் கொண்ட மாற்றான் கல்லறையும் உன் சாட்சிய வாழ்விற்கு சான்று பகரும். அமைதியில் ஆன்மா ஆண்டவரில் அகமகிழும்.

பிரிவால் நினைந்துருகும்;
திருச்செல்வம் வாஸ் குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 04 1968



உதிர்வு 29 03 2019

### திரு. சு. புண்ணியலிங்கம் (பாஸ்கரன்)
(லண்டன்)

வளர்பிறையாய் உன் குடும்பம் வளர
தேய்பிறையாய் தேய்ந்துபோன தியாகச்சுடரே!
பண்பின் உறைவிடமாய் பாசத்தின் நிறைகுடமாய்
மண்ணிலே பலர் மதிக்க வாழ்ந்தது போதுமென்று
விண்ணுலகம் நோக்கியே விரைந்து சென்றாயோ?
என் துன்ப வேளைகளில்
என் உள்ளம் மறுக்கின்றது நீங்கள் இல்லையென
என் உள்ளம் தவிக்கின்றது, என் உயிர் துடிக்கின்றது.
உங்களை பிரிய மனம் வலிக்கின்றது என் உயிரே
என் கண்ணீரை காணிக்கையாக உங்கள் பாதத்திலே.

பிரிவால் நினைந்துருகும், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

## இளம் மாணவர்களே....
04ஆம் பக்கத் தொடர்ச்சி.

இவர் பிறந்த 450ஆம் ஆண்டு யூபிலி விழா தற்போது சிறப்பிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பள்ளியிலேயே புனித லூயிஸ் கொன்சாகா கல்வி கற்றார் என்றும் திருத்தந்தை கூறினார்.

இளையோரின் பாதுகாவலரான மாபெரும் புனிதரான லூயிஸ் கொன்சாகா அவர்களின் வாழ்விலிருந்து சில சிந்தனைகளை வழங்க விரும்புவதாகத் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அமைதியில், தனிமையில் இருப்பதற்கு சொந்த வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதுவதற்கு வசதியின்மைகளுக்கு அஞ்ச வேண்டாம் என ஏளை conti மாணவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

புனித லூயிஸ் தூய்மையான மற்றும் சுதந்திரமான இதயத்துடன் அன்புகூரும் திறனைத் தெரிந்திருந்தார் எனவும் அன்புகூரத் தெரிந்தவர்களே இறைவனை அறிவார்கள் எனவும், சிறந்த வாழ்விற்கு பணிவும், பிரமாணிக்கமும் அவசியம் எனவும் கூறிய திருத்தந்தை இளம் மாணவர்களே பெரிய கனவு காண்பதையும் அனைவருக்கும் நல்லதோர் உலகு அமைய விரும்புவதையும் நிறுத்தி விடாதீர்கள் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஒருவர் ஒருவரோடு உறவை மேம்படுத்துவதிலும், அகவாழ்வில் அக்கறை எடுப்பதிலும், வருங்காலத்தை திட்டமிடுவதிலும், நியாயமான மற்றும் அழகான உலகை அமைப்பதற்குரிய அர்ப்பணத்திலும் சாதாரண நிலையில் திருப்தி அடையாதீர்கள் எனவும் திருத்தந்தை கூறினார்.

இயேசு சபையில் இணைவதற்காக தனது குடும்பச் சொத்துக்களைத் துறந்த புனித லூயிஸ் கொன்சாகா அவர்கள் உரோம் நகரில் 1591ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொள்ளை நோயில் துன்புற்றவர்களுக்கு உதவிய வேளையில் தனது 23வது வயதில் காலமானார். இந்த இளம் புனிதரின் யூபிலி ஆண்டு 2018ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் திகதி முதல், 2019ஆம் ஆண்டு 9ஆம் திகதி வரை சிறப்பிக்கப்படும் என திருப்பீடம் கடந்த ஆண்டு அறிவித்தது.

## மறைக்கல்வியுரை....
04ஆம் பக்கத் தொடர்ச்சி.

மழையையும் பொருட்படுத்தாமல் திருப்பயணிகள் குடைகளைத் தாங்கி குழுமியிருக்க திருத்தந்தையின் உரை தொடர்ந்தது. திருத்தந்தையின் உரைக்கு முன்னர் புனித யோவான் எழுதிய முதல் திருமடலிலிருந்து 'பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வோம், உண்மையும் நம்மிடம் இராது, மாறாக நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார்' என்ற பகுதியைத் தொடர்ந்து திருத்தந்தை தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்.

'விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே' என்ற செபம் குறித்து நம் மறைக்கல்வித் தொடரில் இன்று "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத். 6:12) என இறைவனை நோக்கி கேட்க இயேசு கற்பித்த விண்ணப்பத்தை சிந்திப்போம். நமக்கு உணவு தேவைப்படுவதுபோல் மன்னிப்பும் தேவைப்படுகின்றது. மத்தேயு நற்செய்தியின் கிரேக்க மூலப்படிவத்தில் "குற்றங்கள்" என பயன்படுத்தப்பட்ட வார்த்தை, 'கடன்பட்டிருத்தல்' என்ற அர்த்தத்தைக் கொண்டதாக இருந்தது. ஆகவே கிறிஸ்தவர்கள், 'எங்கள் கடனை மன்னியும்' என செபிக்கத் துவங்கினர். நாம் உண்மையிலேயே இறைவனுக்கு கடன்பட்டுள்ளோம்.

ஏனெனில் நம்மிடம் இருப்பவை அனைத்தும் இறைவனிடமிருந்து கொடையாக வந்தவையே. நம் வாழ்வு, நம் பெற்றோர், நண்பர்கள் நம்மைச் சுற்றியுள்ள இயற்கை என அனைத்தும் அவர் கொடையே. நம்மால் அன்புகூர முடிகின்றது என்றால் நாம் முதலில் அன்பு கூரப்பட்டுள்ளோம் என்பதே காரணம். அதுபோல் மன்னிப்பைப் பெற்றுள்ளதால்தான் நம்மால் மன்னிக்க முடிகின்றது. நாம் பிறப்பதற்கு முன்னிருந்தே நம்மை அன்புகூரும் அந்த அன்பிப் பிணைப்பை இறையன்பின் நற்பேறான பிரசன்னத்தை எப்படி நம்மால் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கமுடியும்? கடவுள் நம்மை அன்புகூர்வதுபோல நம்மில் எவரும் அவரை அன்புகூர முடியாது. இதை உணர்ந்துகொள்ள இயேசுவின் சிலுவையை உற்று நோக்கினாலே போதும். ஆகவே நம்மிடையே வாழும் புனிதர்கள் கூட என்றும் இறைவனுக்கு கடன்பட்டவர்களாக வாழ்கின்றார்கள் என்பதை உணர்ந்து செபிப்போம். இவ்வாறு தன் மறைக்கல்வி உரையைப் பகிர்ந்து கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கினார்.●

## கிறிஸ்தவ நாகரிகம்.....
07ஆம் பக்கத் தொடர்ச்சி.

கிறிஸ்தவ விசுவாச உண்மைகள் திருத்தூதர்களின் எழுத்தாக்கங்களில் இருக்கின்றன எனக்கூறி திருவிவிலியம், பாரம்பரியம் பற்றியக் கிறிஸ்தவ போதனைகளைத் தருகின்றார். இரேனியுஸ் எழுதிய நூல்களில் ''திருத்தூதரின் போதனையின் நிரூபணம்'' என்ற நூலும் ஒன்று. இதன் நிமித்தம் இவரே முதல் கிறிஸ்தவ மறைக்கல்வி நூலின் ஆசிரியரெனக் கருதப்படுகின்றார். பேரரசர் செப்திமூஸ் செவரசின் கலாபனையின் போது கி.பி 203 இல் மறைசாட்சியாக மரித்தார்.●

## அன்பின் காவியம்....
01ஆம் பக்கத் தொடர்ச்சி.

மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் இவ் ஆற்றுகையில் பங்கேற்று மெருகூட்டினர். கலையருவி இயக்குனர் அருட்பணி. அ.லக்ஸ்ரன் டி சில்வா அனைத்தையும் நெறிப்படுத்தினார்.

இந் நிகழ்வுக்கு மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் முதல் நாள் முதன்மை விருந்தினராகவும், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை அடிகள் இரண்டாம்நாம் முதன்மை விருந்தினராகவும், மன்னார் நகரசபை முதல்வர் உயர்திரு. ஜெராட், மன்னார் மாவட்ட செயலர் உயர்திரு. மோகன்றாஸ், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. பிறட்லி மற்றும் அரச அரசசார்பற்ற திணைக்களங்களில் முதல்நிலை வகிக்கும் அதிகாரிகள், அருட்பணியாளர்கள், துறவிகள் எனப் பலதரப்பினரும் அழைப்புப்பெற்று வருகை தந்திருந்தனர். பெருந்தொகையான பொதுமக்களும் இவ்வாற்றுகையில் பார்த்துப் பயன்பெற வருகை தந்திருந்தனர்.

இச்சிறப்பான ஆற்றுகைக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பும், ஆதரவும் நல்கிய அனைவருக்கும் கலையருவி கலைஞர்மன்றம் சார்பாக நன்றிகளையும், வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.●

## வெரித்தாஸ்....
04ஆம் பக்கத் தொடர்ச்சி.

1969ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி பிலிப்பீன்ஸ் நாட்டில் பணியாற்றத் தொடங்கிய வெரித்தாஸ் வானொலி நிலையத்தின் 50ஆம் ஆண்டு நிறைவு விழா மணிலாவில் உள்ள புனித தோமா பாப்பிறை பல்கலைக் கழகத்தில் கொண்டாடப்பட்ட வேளையில் பிலிப்பீன்ஸ் நாட்டு திருப்பீடத் தூதர் பேராயர் Gabriele Giordano Caccia அவர்கள் திருத்தந்தையின் செய்தியை வாசித்தார்.

இவ்விழாவில் பேசிய மணிலா பேராயர் கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே அவர்கள் அறியாமையை நீக்குவதற்கும், உண்மைக்கு பணியாற்றுவதற்கும் வெரித்தாஸ் வானொலி ஒரு கருவியாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார். குரலற்ற வறியோரின் சார்பாகவும் மறக்கப்பட்டு சமுதாயத்தின் ஓரங்களில் தள்ளப்பட்டுள்ள மக்களை மையப்படுத்தியும் வெரித்தாஸ் வானொலி தன் பணிகளைத் தொடரும் என்று ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவரான மியான்மார் கர்தினால் சார்ல்ஸ் மாங் போ அவர்கள் கூறினார்.●

## கர்தினால்கள்....
04ஆம் பக்கத் தொடர்ச்சி.

இந்தச் சட்ட வரைவுகள் அனைத்து ஆயர் பேரவைகள், கீழை வழிபாட்டு முறை அவைகள், திருப்பீடத்தின் அனைத்துத் துறைகள், துறவு சபைத் தலைவர்களின் அவைகள் மற்றும் ஒரு சில பாப்பிறை பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களது பரிந்துரைகள் திரட்டப்படும் என்று ஜிசோத்தி அவர்கள் கூறினார்.

சிறியோரின் பாதுகாப்பு திருப்பீட அவை அண்மையில் மேற்கொண்ட ஆண்டு நிறையமர்வுக் கூட்டத்தைக் குறித்தும் பெண்கள் திருப்பீடத் துறைகளில் இன்னும் முக்கியமான பொறுப்பை மேற்கொள்வது குறித்தும் விவாதங்கள் நடந்தன என்று ஜிசோத்தி அவர்கள் தெரிவித்தார்.கர்தினால்களின் அடுத்த ஆலோசனைக் கூட்டம் வருகின்ற யூன் மாதம் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி முடிய நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.●

# நீங்காத நினைவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. செ. அந்தோனி நீக்லாஸ் குரூஸ்
(தலைமன்னார்)

மலர்வு : 12 - 06 - 1946
உதிர்வு : 26 - 04 - 2018

**“உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்”**

ஐயா நீங்க இப்ப இல்லையா?
நினைக்கும் போதே நெஞ்சு பதைக்கின்றது.
வருடம் தோறும் உங்கள் கரம் கொண்டு
எங்கள் தலை வைத்து தருகின்ற ஆசி
போன வருடத்துடன் முடிந்ததா?
முடியுமா எங்கள் தாயுமானவரே?
நீங்கள் இல்லாத இந்த வாழ்க்கை கடந்து செல்ல

**பிரிவை நினைந்துருகும்,**
தங்கை, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன். பீ. அருள் நேசன் பீகிறாடோ
(சிறிநாத் - பள்ளிமுனை, மன்னார்)

மலர்வு : 04 - 12 - 1985
உதிர்வு : 19 - 04 - 2018

ஓராண்டு சென்றாலும் இன்னும்
பல ஆண்டுகள் சென்றாலும்
உம் அன்பு முகம் எம்மை விட்டு நீங்காது மகனே!
குடும்பத்தில் நான்கு சகோதரிகளுக்கும்,
சகோதரனுக்கும் தம்பியாய் பிறந்தாய்.
எல்லோரின் அன்பையும், பாசத்தையும் பெற்றாய்.
திடீரென உன் இறப்புச் செய்தி கேட்டு கதிகலங்கிப் போனோம். எங்களின் கண்களில் கண்ணீரை சொரிய வைத்தாய். உன் சிரித்த முகத்தையும் - உன் கேலிப் பேச்சுக்களையும் நாம் எப்போது காண்போம்.

பிரிவை நினைந்துருகும், அன்புத்தாய், சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள், மருமக்கள், பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 13 - 03 - 1950
உதிர்வு: 04 - 04 - 2018

### திருமதி. எ.வீ. மரிய பத்திமா
(பெரியநாவற்குளம், மன்னார்)

ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
அன்பென்னும் மழை பொழிந்து
அகிலத்தில் எம்மை வாழ வைத்து
ஆதரையில் எம் வாழ்வின் உயர்வுக்காய்
அரும்பாடு பட்டு உழைத்த அம்மா நீங்கள்
ஆண்டவன் சன்நிதியில் நித்திய அமைதி பெற
அடியவர் நாம் இரந்து வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்புக்கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 - 06 - 1939
உதிர்வு: 02 - 05 - 2014

### திரு. பெஞ்சமின் அமிர்தநாதன் (விமலதாஸ்)
(ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தர் மன்னார்)

ஐந்தாம் ஆண்டு நினைவுநாள் வந்ததோ
ஒவ்வொரு நிமிடமும் உம் நினைவு தான் அப்பா
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அப்பா என
அழைப்பதற்கு நீங்கள் இல்லையே அப்பா
பாசமாய் வளர்த்து பாரினிலே போற்ற
வழிகாட்டினீர்கள் எமதருமை அப்பா
ஐந்தாம் ஆண்டு அல்ல பலயுகம் கடந்தாலும்
ஏதோவொன்றாய் உமது ஞாபகம் அப்பா
முன்னோக்கி ஓடுகின்ற நினைவுகளை நிறுத்த அப்பா

**பிரிவால் நினைந்துருகும்,**
பாசமிகு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 30 - 05 - 1956
உதிர்வு: 07 - 04 - 2016

### திரு. செபஸ்ரியன் பீலிக்ஸ் ஜோர்ஜ் சந்தியாகோ
(சின்னக்கடை, மன்னார்)

அன்பான அப்பா!
உங்களோடு நாமிருந்தது அழகானதொரு காலமப்பா
அவை ஒவ்வொன்றும் உங்கள் அன்பினில் கரைந்திட்ட
மறக்க முடியாத இனிமையான நாட்களப்பா
ஒரு பொழுதும் பிரியாமல் பாசமுடன் வளர்த்தீர்கள்.
இன்று எமைப்பிரிந்து எப்படியப்பா இருக்கீன்றீர்கள்?
பார்த்துப் பார்த்து ஆசையாய் வளர்த்து பாதியில் தவிக்க விட்டீர்களே
எல்லாம் இருந்தும் அப்பா என்றழைக்க நீங்களில்லையே!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, மகன், உறவினர், நண்பர்கள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 16 - 07 - 1967
உதிர்வு: 17 - 03 - 2017

### திரு.சந்தியோகு கியூபட் பெர்னாண்டோ
(சமாதான நீதவான். கிராம சேவையாளர் - பேசாலை, மன்னார்)

நேற்றுவரை எம்மோடு இருந்தாய்
எங்களில் ஒருவனாய் அன்போடு வாழ்ந்தாய்
காலமெல்லாம் எமைக் காத்திருப்பாய் என்றிருக்க
கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு நீ போனாய்
ஆண்டுகள் இரண்டாகிப் போனாலும்
ஆற்றொண்ணாத் துயரமது ஊற்றாகி ஓடுதையா எத்தனை
மருந்திட்டாலும் எதையும் மறக்க முடியவில்லை.
உம் ஆன்மா சாந்திபெற உள்ளத்தால் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள் உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 - 12 - 1950
உதிர்வு: 25 - 04 - 2018

### திரு. அ. மரியான் வெற்றிசீலன்
(வஞ்சியன்குளம், வங்காலை)

புன்சிரித்த பூ முகமே கணீர் குரலுக்குச் சொந்தக்காரனே!
எம் விழிகளில் நீருமில்லை வாழ்வினில் வசந்தமுமில்லை
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே ஐயா!
ஓராண்டு மறைந்து போய்விடினும் ஆறாது உம் இழப்பு
எம் வாழ்வில் ஐயா! துயர்சுமந்து எமக்காய் திரியாகி ஒளிதந்தீர்
வலிகளை நீர் சுமந்து வழிகளை எமக்குக் காட்டினீர்
இன்று ஆயனில்லா ஆடுபோல் அந்தரிக்கின்றோம்
நித்தமும் அன்பைப் பெற்றிட ஆசிக்கின்றோம்.
விண்ணகம் வாழும் நீர் எமக்காய் இறைஞ்சிடும்
உம் ஆன்மா அமைதியுற இறைவனை நாங்கள் இறைஞ்சுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் உறவினர்கள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 06 - 10 - 1935
உதிர்வு: 04 - 14 - 2018

### திரு. பிலிப்பு சூசையப்பு
(முதலைகுத்தி, உயிலங்குளம்)

அன்போடு எம்மை அரவணைத்து
குடும்பத்தின் கஸ்ர துன்பங்களைச் சுமந்து
எங்களை வாழவைத்தீர்களே அப்பா!
கலங்கரை விளக்காய், காவல் தெய்வமாய்
எங்களைப் பாதுகாத்தீர்களே - உங்கள்
பிரிவால் ஏங்குகின்றோம். எமக்கு
ஆறுதல் கூற, அன்புகாட்ட எவருமே
இல்லையே. இறை இயேசுவிடம்
நித்தியமாய் நீங்கள் வாழ இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், மைத்துனர் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள்.